


SIR C. SANKARAN NAIR.

ஸர் ஸி. சங்கரன் நாயர்.

# ஜனாபிமானி.

(முன்பு 'பிழைக்கும் வழி' யென்று வழங்கியது.)

**THE PEOPLE'S FRIEND.**

FORMERLY KNOWN AS THE 'PRACTICAL LIFE.'



ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர்.

G. A. Vaidya Raman, B. A., EDITOR.



புஸ்தகம் 7. Vol. 7. — ராக்ஷஸ ௵ வைகாசி ௴, MAY 1915. — ஸஞ்சிகை 9. No. 9.


## The People's Friend.

An illustrated Tamil monthly devoted to public welfare and popular education.

The 'People's Friend' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | Inland. Rs. | A. | P. | | Foreign. Rs. | A. | P. |
|---|---|---|---|---|---|---|---|
| Per annum ... | 4 | 0 | 0 | ... ... | 6 | 0 | 0 |
| Single copy ... | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |
| Sample copy | 0 | 6 | 0 | ... ... | 0 | 8 | 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 Page | ... | 5 | 0 | 0 | per month. |
| ½ do | ... | 2 | 8 | 0 | do |
| ¼ do | ... | 1 | 4 | 0 | do |
| 1/16 do | ... | 1 | 0 | 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors:**—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may, at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Kondi Chetty Street, Georgetown, Madras.

## ஜனாபிமானி.

பொது ஜனங்களின் அறிவைப் பரவச்செய்து அவர்களுடைய க்ஷேமத்துக்காக உழைத்துவரும் ஒரு மாஸாந்தர தமிழ்ப் பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள் மாணாக்கர்கள் இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'ஜனாபிமானி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்

| | உள் நாடு. | | | | அந்ய நாடு. | | |
|---|---|---|---|---|---|---|---|
| வர்ஷம் 1-க்கு ... | 4 | 0 | 0 | ... | 6 | 0 | 0 |
| தனிப்ரதி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |
| மாதிரி காபி ... | 0 | 6 | 0 | ... | 0 | 8 | 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | | | 5 | 0 | 0 |
| ½ | ,, | ,, | ,, | 2 | 8 | 0 |
| ¼ | ,, | ,, | ,, | 1 | 4 | 0 |
| 1/16 | ,, | ,, | ,, | 1 | 0 | 0 |

வ்யாஸம் எழுதுபவர்கள் கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரே பக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை சிநேகிதர்கள் அறியவேண்டும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,
3 & 4, கொண்டி செட்டித் தெரு,
ஜார்ஜ்டவுன், மதராஸ்.





# ஜனாபிமானி.

புஸ்தகம் 7.] ராக்ஷஸ௵ வைகாசி௴. [ஸஞ்சிகை 9.


## ITALY AND THE WAR.

## இட்டலியும் யுத்தமும்.

சென்ற பத்து மாஸங்களாக ஐரோப்பிய யுத்தத்தில் சேராமல் தனித்து நின்றுவந்த இட்டலி, இந்த மாஸம் 24-தேதி யன்று ஜெர்மனிக்கும் ஆஸ்ட்ரியாவுக்கும் விரோதமாக யுத்தம் ஆரம்பித்துவிட்டது. ஜெர்மனியானது ப்ரான்ஸின் மேலும் ரஷ்யாவின்மேலும் யுத்தம் ஆரம்பித்த போதே, அது ஏற்கனவே ஏற்பட்டுள்ள ட்ரிபிள் அல்லையன்ஸ் என்னும் உடன்படிக்கையின்படித் தன் கக்ஷியில் சேரவேண்டுமென்று இட்டலியைக் கேட்டது. ஆனால் இட்டலியோ, ட்ரிப்பிள் அல்லையன்ஸ் என்பது மற்ற நாடுகளை அக்ரமமாக படையெடுப்பதற்காக ஏற்பட்டதல்லவென்றும், ட்ரிப்பிள் அல்லையன்ஸ் என்னும் உடன்படிக்கையில் சேர்ந்த ஆஸ்ட்ரியா, ஜெர்மனி, இட்டலி ஆகிய இவைகளை வேறு தேசங்கள் போருக்கு இழுத்தால் ஒருவர்க்கொருவர் உதவி செய்துகொள்வதற்காக மாத்ரம் ௸ உடன்படிக்கை ஏற்பட்டதென்றும் பதில் சொல்லி ஜெர்மனியோடு சேர மறுத்துவிட்டது. வெகு காலம் வரையில் இட்டலி எந்தக் கக்ஷியிலும் சேராமல் சும்மா இருக்குமா அல்லது இங்க்லீஷ்காரர்களுடைய கக்ஷியில் சேருமா என்பதைப் பற்றிப் பலர் ஆலோசனை செய்துவந்தார்கள், இட்டலி ஜெர்மனியுடன் சேருவதற்கு ஜெர்மனியும் ஆஸ்ட்ரியாவும் ப்ரதிப்ரயோஜனம் ஏதாவது கொடுக்க வேண்டுமென்று இட்டலி எதிர்பார்த்தது. இட்டலிக்கு வேண்டியிருப்பன ஆஸ்ட்ரியா தன்னிடமிருந்து முன்பு பிடுங்கிக்கொண்ட ட்ரீஸ்ட், ட்ரெண்டினோ முதலிய ப்ரதேசங்களே, ஆஸ்ட்ரியா அதற்கு ஸம்மதப்படவில்லையென்று தோன்றுகிறது. இந்த விஷயம் ஒருவாறு நிச்சயப்படுவதற்கு சிலகாலம் சென்றது. ஆகவே தனக்கு வேண்டிய ப்ரதேசங்களை யடைய இட்டலி ஆஸ்ட்ரியாவோடும் ஜெர்மனியோடும் யுத்தம் தொடங்கலாயிற்று. மேலும் இட்டலிக்கு இன்னொரு குறையுமுண்டு. பால்கன் நாடுகளில் இன்னின்ன விடங்களில் இன்னாருக்கு செல்வாக்கு உண்டென்று ஆஸ்ட்ரியாவும் இட்டலியும் ஒருவரையறை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஆஸ்ட்ரியாவாகட்டும் இட்டலியாகட்டும் பால்கன் நாடுகள் ஸம்பந்தமான எந்தக் கார்யங்களிலும் ஒன்றுக்கொன்று முன்னாடி அறிவித்து யோசனை கேட்டுக்கொள்ள வேண்டியது அவச்யமென்று அந்த இரண்டு தேசங்களுக்குள் உடன்படிக்கை ஏற்பட்டிருக்கிறது.

சென்ற ஜூலைமாஸத்தில் ஸாராஜீவோ கொலை நடந்த பிறகு ஸெர்வியா சில நிபந்தனைகளுக்கு உள்பட வேண்டுமென்று அதற்கு ஆஸ்ட்ரியா ஒரு கடைசிப் பேச்சான கடிதம் அனுப்பின போது, அது (ஆஸ்ட்ரியா) இட்டலியினிடம் யோசனை செய்யவில்லை. அதைப்பற்றி முன்னாடி இட்டலிக்குத் தெரிவிக்கக் கூட வில்லை. இது இட்டலிக்கும் ஆஸ்ட்ரியாவுக்கும் உள்ள உடன்படிக்கைக்கு விரோதமாக ஆஸ்ட்ரியா நடந்ததாகிறது. ஆகவே இட்டலியானது இந்தமாஸம் (மே) 4-ந் தேதியன்று ௸ உடன்படிக்கையிலிருந்து விலகிக்கொண்டதாகத் தெரிவித்து விட்டது.

இட்டலி இதுவரையில் யுத்தத்தில் ஒரு கக்ஷியிலும் சேராமலிருந்து வந்ததற்கு இன்னொரு

காரணமும் சொல்லுகிறார்கள். ட்ரிப்பொலியில் நடந்த யுத்தத்தினால் ஸைன்யத்தில் ரொம்ப குறைவு ஏற்பட்டிருந்ததாம் அந்தக்குறைகளை சரிப்படுத்த முடியாமலிருந்தது. ஆனால் சென்ற ஏழெட்டுமாஸங்களுக்குள் ஸைன்யத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டுவந்து விட்டார்களென்று சொல்லுகிறார்கள்.

இட்டலியின் சேனை.—இட்டலியில் எல்லா ஆண்களும் தரைப்படையிலாவது கப்பல் படையிலாவது சேரவேண்டியது அவச்யம். மொத்தம் ராணுவத்தில சேர்நதிருக்கவேண்டிய காலம் 20-வது வயஸு முதல் 19 வர்ஷமாகும். ஆனால் எல்லா ஆண்களையும் படைகளில் சேர்த்துக் கொள்வதில்லை.

ராணுவத்தில் சேருபவர்களை மூன்று பிரிவாகப் பிரிக்கிறார்கள். முதல் பிரிவை சாச்வதமான ஸைன்யத்தில் சேர்த்துக்கொள்கிறார்கள். இரண்டாவது பிரிவை சாச்வதமான ஸைன்யத்தில் சேர்ந்தவர்களாக வைத்து அவர்களுக்கு சாச்வதமான லீவுகொடுத்து விடுகிறார்கள். அவர்களை யுத்தகாலத்தில் சாச்வத ஸைன்யத்துக்கு ஏற்படும் ஜனச்சேதத்தை சரிப்படுத்துவதற்காக அனுப்புவார்கள். மூன்றாவது பிரிவைச் சேர்ந்தவர்களை ராணுவத்தில் சேர்த்துக்கொள்ளாமல் டெரிடோரியல் மிலிஷியா என்னும் படையில் சேர்த்துக் கொள்வார்கள். இநத மிலிஷியாவைச் சேர்ந்தவர்கள் ஸமாதான காலங்களில் படைகளாக வருக்கப் படுவதில்லை. அவர்களுக்கு ராணுவப் பயிற்சி கொடுத்து, பேர்களை மாத்ரம் தாக்கல் செய்து வைத்துக்கொண்டு யுத்த காலங்களில் தேச பாதுகாப்புக்காக உபயோகிப்பார்கள். இவர்கள் ஸாதாரணமாய் அன்ய தேசங்களில் போய் சண்டை செய்வதில்லை.

சாச்வதமான ஸைன்யத்தைச் சேர்ந்தவர்கள் காலாள், பீரஙகி, குதிரை ஆகிய இவற்றுள் எந்தப் படையைச் சேர்ந்திருநதாலுஞ் சரி, 2-வர்ஷம் படைகளில் சேர்ந்திருக்கவேண்டும். பிறகு அவர்களை ரிஸர்வுகளாக மாற்றி 6-வர்ஷம் லீவு கொடுத்து விடுகிறார்கள். அதற்குப் பிறகு 4-வர்ஷம் மொபைல் மிலிஷியா என்னும் படையைச் சேர்ந்தவர்களாகிறார்கள். இவர்களை யுத்த காலத்தில் சீக்ரம ஸைன்யங்களாக சேகரிதது விடலாம். 4-வர்ஷமான பிறகு 7-வர்ஷகாலம் டெரிடோரியல் மிலிஷ்யா படையில் சேர்ந்தவர்களாகிறார்கள். ஆக 39-வது வயஸில் ராணுவ ஸேவகம் முடிந்துபோகிறது.

இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர்களும் முதல் எட்டு வர்ஷகாலம் சாச்வதமான ஸைன்யத்தைச் சேர்ந்திருக்கிறார்கள். அவர்களுக்கு 2-முதல் 6 மாஸகாலம் ராணுவப்பயிற்சி கொடுப்பார்கள். 8-வர்ஷத்துக்குப் பிறகு 4-வர்ஷகாலம் மொபைல் மிலிஷியாவிலும், 7-வர்ஷகாலம் டெரிட்டோரியல் மிலிஷியாவிலும் சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். மூன்றாவது வகுப்பைச் சேர்ந்தவர்கள் தெரிந்தெடுக்கப் பட்டவுடனேயே டெரிட்டோரியல் மிலிஷியாவில் சேர்க்கப்படுவார்கள். இவர்களுக்கு 30 நாள் ராணுவப்பயிற்சி கொடுப்பார்கள்.

யுத்தகாலத்தில் முதலில் கிடைக்கக்கூடிய ஸைன்யம் 12 ஆர்மிகோர் காலாள் படையும் 3 குதிரைப்படை டிவிஷனுமாகும், 11 ஆர்மிகோர்களுக்கு ஒவ்வொன்றிலும் 2 டிவிஷன்கள் உண்டு. பாக்கியாயுள்ள ஆர்மிகோருக்கு 3 டிவிஷன்கள் உண்டு. ஒரு டிவிஷனுக்கு, ஒவ்வொன்றிலும் 3-பட்டாளங்கள் உள்ள 2-ரெஜிமெண்டுகளும், 5-பீரங்கி பாட்டரிகள் கொண்ட ஒரு ரெஜிமெண்ட் பீரங்கிப்படையும் உண்டு. ஒரு டிவிஷனில் ஆபிஸர்களும் வீரர்களும் சேர்ந்து 14,156 பேர்களும், 1,399குதிரைகளும், 30பீரங்கிகளும் உண்டு. இவைகளைத்தவிர ஒவ்வொரு ஆர்மிகோரிலும் ஆறு பாட்டரிகொண்ட ஒரு ரெஜிமெண்ட் பீல்ட் ஆர்ட்டிலரியும் (பீரங்கிப்படை), இரண்டு அல்லது மூன்று கனமான பீரங்கிப் படைகளும்,ஒரு குதிரைப்படை ரெஜிமெண்

டும், வேகமாய்ப் போகக்கூடிய 'பெர்ஸாக்லியர்' என்னும் காலாள் படையும் உண்டு.

ஒரு குதிரைப்படை டிவிஷனில் ஒவ்வொன்றிலும் இரண்டு ரெஜிமெண்டுகள் உள்ள 2 ப்ரிகேடுகளும், 2 குதிரை பீரங்கி பாட்டரிகளும் உண்டு.

இவைகளைத்தவிர இட்டலியின் வடபாகத்தில் உள்ள மலைக்கணவாய்களைப் பாதுகாக்க மொத்தம் 26-பட்டாளங்கள் கொண்ட 8 ரெஜிமெண்டு ஆல்பினி யெனனும் குருப்புகளும், மொத்தம் 36 பீரங்கி பாட்டரிகள் கொண்ட இரண்டு ரெஜிமெண்ட் பீரங்கிப்படைகளும் இருக்கின்றன. இன்னும் 8-பாட்டரிகள் கொண்ட குதிரை பீரங்கிப்படை 1 ரெஜிமெண்டும், ஒவ்வொன்றிலும் 10 பாட்டரிகள் கொண்ட 2-ரெஜிமெண்டு பெரிய பீரங்கிப்படையும், பத்து ரெஜிமெண்டுகள் கோட்டைகளைக் காக்கும் பீரங்கிப்படைகளும் ஆறு ரெஜிமெண்டுகள் இஞ்ஜினியர்களும், இருக்கின்றன. ஆகாயப்படையில் ஒரு நிபுணர் பட்டாளமும், ஒவ்வொன்றிலும் 7-ஏரோப்ளேன்கள் கொண்ட 30-ஸ்க்வாட்ரன் ஆகாயப்படையும் இருக்கின்றன. இட்டலிக்கு 1913-ம் வர்ஷத்தில் இருந்த ஆகாயக்கப்பல்களின் (டிரிஜிபில்கள்) தொகை 9. இட்டலியின் ஆகாயக்கப்பல் படை நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டிருக்கிறது.

யுத்தகாலத்தில் ஆரம்பத்தில் இட்டலிக்குக் கிடைக்கக்கூடிய ஸைன்யத்தொகை 4-லக்ஷம். இதைத்தவிர 'மொபைல் மிலிஷியா'வில் யுத்தத்துக்கு லாயக்காயிருக்கக்கூடியவர்கள் 2,00,000. சிலர் மொத்தம் 10,00,000 வீரர்கள் கிடைக்கக்கூடுமென்கிறார்கள். ஸைன்ய விவரம் பின்வருமாறு:

| | |
|---|---|
| படைகளிலுள்ளவர்கள் (ஆபீஸர்களும் வீரர்களும்) | 2,50,000 |
| இரண்டாவது பிரிவைச் சேர்ந்த சாசுவதமான லீவு கொடுக்கப்பட்டவர்கள். | 4,50,000 |
| மொபைல் மிலிஷியா | 3,20,000 |
| டெரிடோரியல் மிலிஷ்யா (பயிற்சியடைந்தவர்களும் பயிற்சியடையாத இரண்டாவது மூன்றாவது பிரிவைச் சேர்ந்தவர்களும்) | 22,00,000 |
| மொத்தம். | 32,20,000 |

இந்தத்தொகையில் 10 லக்ஷம் பேர்கள்தான் ராணுவப்பயிற்சி யடைந்திருப்பவர்கள்.

படையிலுள்ளவர்களின் விவரம்

| | ஆபிஸர்கள். | வீரர்கள். |
|---|---|---|
| நிர்வாகம், பயிற்சி, ராணுவ ஸ்கூலகள் இவைகளைச் சேர்ந்தவர்கள் | 1,284 | 1,952 |
| காலாளபடை | 7,627 | 1,62,000 |
| குதிரைப்படை | 1,006 | 27,416 |
| பீரங்கிப்படை | 2,359 | 49,256 |
| இஞ்ஜினியர்கள் | 630 | 11,099 |
| வைத்யம் | 769 | 3,712 |
| ராணுவ ஸாமான்கள் ஸப்ளை செய்பவர்கள் | 452 | 3,978 |
| மிலிட்டரி போலீஸ் | 709 | 30,087 |
| மொத்தம் | 15172 | 289,500 |

இட்டலிக்கு ஆபிரிக்காவில் ஸொந்தமாயுள்ள பிரதேசங்களில் சில ஸைன்யங்கள் இருக்கின்றன. அவைகளின் தொகை 20,000 இருக்கலாம்.

கப்பல்படை.

இட்டாலியின் கப்பல்படையில் ஆபிஸர்களும் வீரர்களும் சேர்ந்து 40,063 பேர்கள் உண்டு. 1914-ம் வர்ஷம் அக்டோபர்மாஸத்தில் இட்டலியிலிருந்த கப்பல்படையின விவரம் பின்வருமாறு.

| விவரம். | கட்டப்பட்டவை. | கட்டப்பட்டு வருபவை. |
|---|---|---|
| யுத்தக்கப்பல்கள் | 15 | 6 |
| கவசமிட்ட க்ரூஸர்கள் | 10 | 0 |
| லைட் க்ரூஸர்கள் | 16 | 2 |
| பெரியடார்பிடோக் கப்பல்கள் | 5 | 0 |
| டிஸ்ட்ராயர்கள் | 33 | 13 |
| சிறுடார்பிடோ போட்டுகள் | 94 | 1 |
| ஸப்மரீன்கள் | 20 | 0 |

# RAGI HUSKS.

BY G. V. GOVINDARAJAN.

## கேழ்வரகின் காவு.

மேல் நாட்டார் எந்த வ்யாபாரத்தையும் ஊக்கத்துடன் செய்வதோடு எவ்வளவும் இழிவாக நினையாமல் அதிக கௌரவத்துடன் செய்து வருகிறார்கள். ஆனதுபற்றியே அவர்கள் ஸர்வேச்வரருடைய கிருபையால் யாதொரு வறுமையுமன்றி ஸுகமாய் வாழ்ந்துவருகிறார்கள். நம் நாட்டார்களோ அவ்விதமின்றி யாராயினும் ஒருவன் ஒரு சிறிய வ்யாபாரம் செய்தால் அவனைப் பரிஹாஸம் செய்வதால் அவன் மறுபடியும் அந்த வ்யாபாரத்தைச் செய்யாமல் மனத்தளர்ச்சி கொண்டுவிட்டுவிட நேரிடுகிறது. அப்படி கேலி செய்யாமல் அடியில் சொல்லும் வ்யாபாரத்தை ஊக்கத்துடன் செய்து பயன் அடையலாம்.

### கேழ்வரகின் காவு என்பது என்ன.

கேழ்வரகின் காவு என்பது, கேழ்வரகானது அறுவடையானதும் அதன் கதிர்களை மாடுகளினால் மிதிக்கவிட்டு அவைகளிலிருந்து உதிர்ந்த கேழ்வரகை எடுத்து காற்று வீசும் வாடையில் தூவினால் கெட்டியாயுள்ள கேழ்வரகின் மணி ஒரு புறமாகவும் அதினுடைய பொட்டு அல்லது உமி என்பது மற்றொரு புறமாகவும் போய் தங்கி விடுகிறது. இந்த உமிக்குத்தான் காவு என்று பெயர்.

### காவு கிடைக்கு மிடங்கள்.

நமது தென்னிந்தியாவில் அநேக ஏழை ஜனங்களுக்கு கேழ்வரகு முக்யமான உணவாயிருக்கிறது. விசேஷமாய் தென்னிந்தியாவிற்கு மேற்கேயுள்ள பெங்களூர், மைஸூர் ராஜ்யத்தைச் சேர்ந்த நாடுகளிலும் இன்னும் தெற்கு பாகங்களிலுள்ள நாடுகளிலும் கேழ்வரகு பயிரிடப்படுகிறது. இந்த இடங்களில் அறுவடையாகும் காலங்களில் விசேஷமான காவு கிடைக்கும்.

### காவு எத்தனை வகைப்படும்.

கொல்லைக்காவு, தூவல்காவு என்று இரண்டு வகைப்படும். அவைகளில் புஞ்சை நிலமாகிய மேட்டுப்பாங்கான பூமியில் விளையும் கேழ்வரகின் காவுக்கு கொல்லைக்காவு என்றும், நஞ்சை நிலமாகிய கழனி அல்லது வயல்களில் விளையும் கேழ்வரகின்காவுக்கு தூவல்காவு என்றும் பெயர். இந்த இரண்டு வகைக்காவுகளில் கொல்லைக்காவு என்பதே மிகவும் இடமானது. மற்ற தூவல்காவானது இதற்கு இரண்டாந்தரம். காவு வெண்ணிறமாயிருந்தால் மிகவும் ச்ரேஷ்டம்.

### காவு கிடைக்கும் காலம்.

கேழ்வரகு அதிகமாய் பயிராகும் இடமாகிய தென்னிந்தியாவிற்கு மேற்கு பாகத்தில், அதாவது பெங்களூர், மைஸூர் இவைகளைச்சேர்ந்த நாடுகளில் பிப்ரவரி, மார்ச்சு, நவம்பர், டிஸம்பர், ஆகிய இந்த மாதங்களிலும், தென்னிந்தியாவிற்குத் தெற்கும், கிழக்குமாயுள்ள நாடுகளில் ஜனவரி, பிப்ரவரியில் கொல்லைக்காவும், ஏப்ரில், மே, நவம்பர், டிஸம்பர் ஆகிய இந்த மாதங்களில் தூவல்காவும் கிடைக்கும். மேற்கு ராஜ்யத்தில் உற்பத்தியாகும்காவு முழுவதும் கொல்லைக்காவேயாகும்.

### காவு சேகரிக்கும் விதம்.

கேழ்வரகு ஒப்படியாகும் காலங்களில் ஒவ்வொரு களத்திலும் 50,100, பெரிய கோணிப் பைகளாகிய பெஜவாடா பைகள் கொண்டுபோய் காவை, சாணம்முதலியவை இல்லாமல் சுத்தஞ் செய்து ஷை களத்தின் சொந்தக்காரரிடம் ¼-அல்லது ½-அணாக் கொடுத்துவிட்டு, அவ்விடமுள்ள பண்ணையாட்களைக் கொண்டு அவர்களுக்கு மூட்டை 1-க்கு 2-தமபிடி வீதம் கூலிகொடுத்து மூட்டைக்குள் ஷை காவைப்பார்த்திசெய்து, அதாவது காலினால நன்றாய் மிதித்து கிட்டித்து பார்த்திசெய்து, வண்டியிலேற்றிக் கொண்டு அருகாமையிலுள்ள ரயில்வே ஸ்டேஷனில் கொண்டு

போய் நமக்கு எவ்விடத்திற்கு அனுப்பவேண்டுமோ அவ்விடத்திற்கு அனுப்பவேண்டும். பார்த்திசெய்யும்போது காவானது மாட்டின் மூத்திரத்தினால் கனைந்து துர்வாஸனை இல்லாததாய்ப் பார்த்து பார்த்திசெய்தால் மிகவும் ச்ரேஷ்டம்.

காவின் உபயோகம்.

வடஆற்காடு ஜில்லாவில் திருப்பத்தூர் தாலுக்காவிலுள்ள பசுமாடுகளுக்கும், எருதுகளுக்கும், எருமை மாடுகளுக்கும், காவை முக்யமான உணவுபொருளாக உபயோகப்படுத்தி வருகிறார்கள். மாடுகளுக்கு தவிடு, பிண்ணுக்கு முதலியவைகள் சேர்ந்த குளுத்தி என்று சொல்லப்பட்ட உணவு கொடுக்கும்போது 2 மரக்கால் தவிட்டுடன் ஒருமரக்கால் காவையும் பிண்ணுக்கு முதலியவைகளையும் கலந்து கொடுக்கிறார்கள். இதை மாடுகள் அதிக ப்ரியமாய்த் தின்று ஸுகமாய் பலத்துடன் வளருகின்றன. கறவைமாடுகளும் கூடியவரையில் பால் சீராய் கொடுக்கின்றன.

காவு வ்யாபாரம் நடக்குமிடம்.

இந்த வ்யாபாரம் வடஆர்க்காடு ஜில்லா திருப்பத்தூர் டவுனில் திங்கட்கிழமைதோறும் நடக்கும் சந்தையில் 100 ரூபாய்க்கு குறையாமல் நடந்துவருகிறது. இதுதவிர, ஷை டவுனில் அநேக இடங்களில் தவிடு, காவுமுதலியவைகள் விற்கும் கடைகளும் தனியாய் ஏற்பட்டிருக்கின்றன. திருப்பத்தூர் தாலுக்காவை சேர்ந்த க்ராமச்சந்தைகளிலும் விசேஷமாய் வ்யாபாரம் செய்யப்பட்டுவருகிறது.

விற்பனையாகும் விலைகளின் விவரம்.

மார்ச்சு, மே, மாதங்களில் பெஜவாடா மூட்டை 1-க்கு 8-அணு முதல் 12-அணு விதமும், மற்றக்காலங்களில் 6-அணு முதல் 10-அணு வரையிலும் விற்கப்பட்டு வருகிறது.

இதற்கு வேண்டிய முதல்.

ரூபாய் 50-இருந்தால் போதுமானது. அதாவது 25-ரூபாய் 100-பெஜவாடா கோணிப்பைகள் வாங்குவதற்கும், மற்ற 25-ரூபாய் காவு வாங்கவும், பார்த்திசெய்யக்கூலி, வண்டி சத்தம், ரெயில்சார்ஜ் முதலியவைகள் கொடுப்பதற்கும் வேண்டியது.

இதில் லாபம்.

ஒரு ஊக்கமுள்ள வ்யாபாரி வாரம் 100-மூட்டைகளுக்குக் குறையாமல் விற்று வருவானாகில் மூட்டை 1-க்கு (0 2 0) இரண்டணு வீதம் வாரம் ஒன்றுக்குக்கிடைக்கும். 100-மூட்டைகளுக்கும் லாபம் ரூ. 12 8 0 யானுல் ஒரு மாதத்தின் வருமானம் 50 ரூபாய் ஆகிறது ஒரு பீ. ஏ. வாசித்தவர் ஸம்பாதிக்கும்படியான வருமானத்திற்கு ஈடாகிறது. ஆகையினால் இந்த சிறு வ்யாபாரத்தை சற்றுயோசித்துப் பயனடையலாம்.

ஜீ. வி. கோவிந்தராஜன்.

## THE EARTH AND ITS CHANGES.

BY. S. A. ATHMANATHA IYER.

## பூமியும் அதன் மாறுதல்களும்.

நாம் வஸிக்கும் இந்த பூமியானது நமக்கு இப்பொழுது தென்படும் ஸ்திதியிலேயே எப்பொழுதும் இருந்ததில்லை. இது அநேக மாறுதல்களை யடைந்திருக்கின்றது. தற்காலத்திலும் மாறுதல்கள் ஸம்பவித்துக்கொண்டே யிருக்கின்றன. இந்த மாறுதல்களுண்டாவதற்கு மூன்று காரணங்களுண்டு. அவைகள் ஜலம், காற்று, நெருப்பு, இவைகளுடைய சக்தியாலுண்டாகின்றன.

மழை பூமியை ஸமமாக்கிக்கொண்டே வருகிறது. சில காலங்களில் உயர்ந்த மட்டத்திலிருக்கும் பெரிய குளங்கள் ஏரிகள் இவைகள் பலத்த மழையால தத்தளித்து கரைபுரண்டு உடைப்பெடுத்து சுற்றிலுமுள்ள க்ராமங்களையும் தேசத்தையும் சேதப்படுத்துவதை நாம் கண்டும் கேட்டுமிருக்கிறோம். தவிரவும், மலைகளின் உயர்ந்த ப்ரதேசங்களில் ஒருங்கு சேர்கிற தடைப்

பட்டிருக்கும் ஜலம் சில ஸமயங்களில் எல்லை மீறிச் செல்லுவதாலும் மாறுதல்களுண்டாகின்றன.

மலையருவிகள் மலைச்சார்பிலிருக்கும் மண் முதலியவற்றை பள்ளத்தாக்கில் சேர்க்கின்றன. சில ஸமயங்களில் பெருத்த மழை யடிக்கும் பொழுது சிறிய குன்றுகளும் மலைகளுடைய இறக்கமும் நன்றாய் ஊறி பிடிப்பற்று பாறை பாறைகளாகச் சரிந்து ஸமதலத்தில் வந்து விழுவதுமுண்டு.

மேலும் மழை ஆகாயத்திலிருந்து பெய்யும் பொழுது வழியில் ப்ராணவாயு, கரியமிலவாயு, சில புளிப்பு த்ராவகங்கள் இவைகளுடன் கலந்து விழுகிறது. இவைகள் கற்களின் அணுக்களை ஒன்று சேர்த்து கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருக்கும் இரும்பு முதலிய தாதுக்களை மெள்ள மெள்ள அரித்துக் கரைத்து விடுவதாலும் பாறைகள் பிளவு படுகின்றன.

நதிகள் மலைகளினின்றும் உற்பத்தியாகி போகும் வழியில் கற்களையும் மணலையும் புரட்டிக்கொண்டு முகத்வாரத்திற்கு அடித்துக் கொண்டு போகின்றன. முகத்வாரத்திலிருந்து ஸமுத்ரத்தா லடித்துக்கொண்டு போகப்பட்டு அந்தக் கற்களும் மணலும் மணற்கரைகளாகவும் திடர்களாகவும் மாறுவதுமுண்டு. இப்படி மணலையடித்துக்கொண்டே வருவதால் சில வருஷங்களுக்குள் ஆற்றுத்தரை மாறுதல் அடைவது மாத்ரமேயல்லாமல் நதிசெல்லும் தேசத்தை வடிவிப்பதும் அஸாத்யமாய்விடும்; மேலும் இப்படிப்பட்ட நதிகளில் வெள்ளம் வந்துவிட்டால் சுற்றிலுமிருக்கும் தேசம் நாசமாவதுந் தவிர வெள்ளப் பெருக்கு புதியமார்க்கமாகச் சென்று புதிய நதிகளையும் உண்டாக்கிவிடக் கூடும்.

ஸமுத்ரத்தைச் சார்ந்த பூமியின் பாகங்கள் ஸமுத்ர அலைகளால் மாறுபாடு அடைகின்றன. சிலவிடங்களில் கடல் அலைகள் மலைகளின் அடிப் பாகத்தின் மேலடித்து மோதுவதால் கொஞ்சம் கொஞ்சமாகக் கற்பாறைகள் பெயர்க்கப்படுகின்றன. இவ்வாறே அநேக வருஷங்களானபிறகு அந்த மலைகளிருந்த ப்ரதேசம் ஒரு பூகண்டமாகும். நாம் ஒரு துறைமுகத்தைப்போய்ப் பார்த்தால் நாம் நடப்பதற்கும் நிற்பதற்கும் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்குமென்று ஏற்படுத்தப்பட்டபாதையை ஸமுத்ரத்தின் அலைகள் அடித்து நாசம் செய்யாதபடி இருபக்கங்களிலும் ப்ரம்மாண்டமான கற்பாறைகள் போடப்பட்டிருப்பதைப் பார்க்கலாம். இவைகள் நாசமானால் புதிய கற்களையும் பாறைகளையும் போடுவார்கள். இம்மாதிரியே ஸமுத்திரத்தின் நடுவிலிருக்கும் தீவுகளில் வஸிப்பவர்கள் தங்கள் நிலத்தை ஸமுத்திரம் பக்ஷிக்காதபடி ஸமுத்ரக்கரையைச் சுற்றிலும் ஆங்காங்கு பெரிய பாறைகள் போட்டிருப்பார்களாம்.

பனியும் உறைபனியுங்கூட பூமிமாறுதலடைகிற விஷயத்தில் உதவி புரிகின்றன. எப்படியென்றால் குளிர் அதிகமான தேசங்களில் நாம் ஒரு குறுகிய கழுத்தையுடைய ஒரு புட்டியில் ஜலத்தையூற்றி வாயையடைத்து ராத்ரி தோட்டத்தில் அல்லது பனி படியும்படியான இடத்தில் வைத்துவிட்டு மறுநாள் பார்த்தால் உள்ளிருக்கும் ஜலம் உறைந்திருப்பதையும் புட்டி உடைந்திருப்பதையும் காணலாம். புட்டியிலிருந்த த்ரவபதார்த்தமான ஜலம் கெட்டியான பனியாக மாறுந் தருணத்தில் அதன் பருமன் அதிகமாகும் காரணத்தால் அதிக இடம் வேண்டியிருக்கிறது. அதிக இடம் கொடாமலடைபட்டிருந்ததால் புட்டியை உடைத்துவிட்டு அதிக இடம் ஸம்பாதித்துக்கொண்டது. இவ்வாறே மழைத்துளிகள் பாறைகளுக்குள் சென்று சில ஸமயங்களில் உறைபனி ஸம்பந்தத்தால் பனிக்கட்டியாக மாறி அதிக இடம் தேடிக்கொள்ளுவதால் கற்களையும் பாறைகளையும் உடைத்து விடுகிறது.

மிகக்குளிர்ந்த தேசங்களில் மலைகளிலிருந்து விழும் பனி பெரிய ஆறுகளாக வ்ருத்தியடைந்து வேகமாக ஓடி மலைகளின் சிகரங்களை உடைத்தும் குன்றுகளைப் புரட்டியும் கற்பாறைகளை அறுத்தும் அநேக மாறுதல்களைச் செய்கின்றன.

காற்றின் செயலாலும் பூமிக்கு அநேக மாறுதல்கள் ஏற்படுகின்றன. ஸமநிலங்களில் பெய்யும் மழை ஜலம் சீக்ரமாக வறண்டு விட்டாலும், மணலை உயரத்திலிருந்து தாழ இருக்கும் மட்டத்திற்கு அடித்துக்கொண்டு போவதையும், பூமியின் அடிப்பாகம் ஊறி மேலே ம்ருதுவான மணலை மெல்லிய படையாகச் சேர்ப்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். பலமான காற்று அல்லது பெருங்காற்று இதன்மேல் அடிக்குங்காலத்தில் இந்த மெல்லிய மணல்படை மேலே கிளப்பப்பட்டு பூமியை ஸமமாக்குகிறது. சில ஸமயங்களில் பாலைவனங்களில் மணல்காற்று அடித்து ஜனங்கள், ம்ருகங்கள், புலங்கள் எல்லாவற்றையும் கீழே புதைத்து விடுவதுமுண்டு.

மணற்காற்று கற்பாறைகளின்மேல் பலமாக அடிக்கும்பொழுது சிறிய மணல் துளிகள் பாறைகளைத் தேய்த்துச் சுரண்டி விடுவதால் சிறிய வாய்க்கால்போன்ற வடிவங்களும விநோதமான ரூபங்களும் ஏற்படுகின்றன. சில ஸமயங்களில் பாறைகளின் அடிப்பாகத்தில் தாக்கி சுற்றிலும் குடைந்து விடுவதனால் செங்குத்தான கம்பம் மாத்ரமே நிற்கும். அதுவும் ஒரு பெருங்காற்று அடித்தால் கீழேவிழுந்துவிடும்.

உஷ்ணமானது பொருள்களை விரிவாக்குமென்பதும் சீதத்தால் வஸ்துக்கள் சுருங்குமென்பதும் நாம் அறிந்த விஷயம். ஸூர்யனுடைய வெப்பத்தால் கற்பாறைகளின் மேல்பாகம், பகற்காலத்தில் சூடேறி, கொஞ்சம் விரிவாகும். இராக்காலத்தில் குளிர்ச்சியால் சுருங்கும். இம்மாதிரியே அதிக காலஞ்சென்றால் பாறைகளின் மேல்பாகம் தோல்போல உரிந்து சரிந்துபோம். இப்படி மலைகள் ஓடுகளாக பெயர்ந்து கொண்டே வந்து பூமியின் மட்டத்தைமாற்றும்.

பூமியின் கீழிருக்கும் எரிமலைகளின் செயலாலும் வேறு சில காரணங்களாலும் பூகம்பங்களுண்டாகி பூமியின் அதிர்ச்சி அநேக மைல் தூரம் பரவுவதால் கட்டிடங்கள் இடிந்து விழுகின்றன. பட்டணங்கள் இருந்த இடந்தெரியாது கீழேமறையும். நதிகள் போம்வழியும் மாறும்.

இதாலியா தேசத்தில் பம்பியை என்னும் பட்டணம் ஸுமார் இரண்டாயிரம் வர்ஷங்களுக்கு முன் பூகம்பத்தால் பூமியில் மறைந்துபோய் விட்டது. சில வர்ஷங்களுக்கு முன் அது அகஸ்மாத்தாய் கண்டு பிடிக்கப்பட்டது. மேலே மூடியிருந்த மணலை எடுத்துவிட்டுப் பார்க்கையில் நாசமடைந்த பட்டணம் வீடு வீதிகளுடன் மிக ஆச்சர்யத்தை விளைவிக்கும்படி தோன்றிற்று.

இம்மாதிரியே ஸமுத்ரத்தின் அடிப்பாகத்திலிருக்கும் தரையும் மாறுதலடைவதால் ஓரிடத்தில் நிலம் மெள்ள மெள்ள எழும்பும்; வேறு சிலவிடங்களில் தாழ்ந்துபோகும். முன்னொரு காலத்தில் ஸமுத்ரத்தின் அடியிலிருந்த நிலம் மேலே கிளம்பலாம். ஸமுத்ர மட்டத்திற்கு உயர இருந்த நிலம் ஜலத்தில் ஆழ்ந்துபோகலாம். இதற்கு ருஜூக்களுமிருக்கின்றன.

நீராவி யந்த்ரங்களுக்கும் நீராவிக்கப்பல்களுக்கும் முக்யமான நிலக்கரி பூமியினடியிலிருந்து வெட்டி யெடுக்கப்படுகிறதல்லவா? அங்கே நிலக்கரி சேர்ந்ததற்குக் காரணமென்ன? அது அநேக காலத்திற்கு முந்தி மரமடர்ந்த காடாக இருந்து பிறகு பூமியின் கீழே மறைந்துபோய் அடிப்பாகத்திலிருக்கும் உஷ்ணத்தால் நிலக்கரியாக மாறிவிட்டது. நிலக்கரியின்மேல் இலைகளின் உருவம படிந்திருப்பதையும் நாம் காணலாம்.

இன்னும் நீரிலும் நிலத்திலும் வஸிக்கும் சில ப்ராணிகளுடைய காலடிகளையும எலும்புகளையும் கற்பாறைக்கு அடியிலிருந்து சிலவிடங்களில் வெட்டியெடுத்திருக்கிறார்கள். இந்தக் காரணத்தா

னும் ஜந்துக்கள் வஸித்துவந்த நீர்ப்பாகமும் நிலப்பாகமு மாறுதலடைந்திருக்கின்றன என்கிற விஷயத்தை நாம் தெரிந்துகொள்ளலாம்.

இந்த விஷயத்தில் நாம் மறவாதிருக்கவேண்டிய முக்யமான ஸங்கதி ஒன்று உண்டு. அது யாதெனில் நம்முடைய வாழ்நாட்களுக்குள்ளேயாவது நூறு அல்லது ஆயிரம் வர்ஷங்களுக்குள்ளாவது பூமி விசேஷமாறுதல்கள் அடையாவிட்டாலும் அநேக ஆயிரம் வர்ஷங்களுக்குள்ளே மாறுதல்களடைவது நிச்சயம் என்பதுதான். ஆனதுபற்றி, பூமியின் பாகங்கள் ஸமுத்ரத்திற்குள் ஆழ்ந்துபோகலாம்; புதிய பூகண்டங்கள் தோன்றலாம். மலைகள் ஸமநிலமாகலாம்; ஸமநிலம் மலையாகலாம். ஸமுத்ரத்தின் ஆழம் மாறலாம். ஒன்றாயிருந்த பூகண்டத்தின் மத்தியில் குறுக்கே கடல் ஆக்ரமித்து இரண்டு பூகண்டங்களாகப் பிரித்துவிடலாம். கடலில் புதிய தீவுகள் உண்டாகிறதும் இப்போது தோன்றும் சில தீவுகள் ஸமுத்ரத்திற்குள் மறைந்து போவதுங்கூட ஒரு அதிசயமல்ல.

எஸ். ஏ. ஆத்மநாதய்யர்.

## RAMADAS.

BY T. S. VAIDYANATHAN.

### ராமதாஸர்.

நாம் எழுதத் துவக்கியிருக்கும் ராமதாஸர் என்பவர் பத்ராசலத்தில் விளங்கின ராமதாஸரல்ல. சிவாஜி மஹாராஜாவின் பரமகுருவாக விளங்கின மஹாபுருஷர். இவரது ஜீவ்ய சரித்ரம் பின்வருமாறு.

கோதாவரிக் கரையிலிருக்கும் ஜாம்பவபுரம் என்ற க்ராமத்தில் 17-ம நூற்றாண்டின் பின்பாதியில் ஸூர்யாஜி பண்ட் என்றொரு ப்ராம்மணோத்தமர் வெகுகாலமாய் புத்ரபாக்யம் பெறாமல், கடைசியாக ஒருபெரிய யாகத்தைச்செய்து அதின்பலனாக அவருடைய மனைவியான ராணுபாய் என்பவள் கர்ப்பந்தரித்து இரண்டு ஆண் குழந்தைகளைப் பெற்றாள். இரண்டாவது குழந்தைக்கு நாராயணன் என்று நாமகரணஞ்செய்தார்கள். மூத்த குழந்தையின் பெயர் நமக்குத் தெரியவில்லை. இரண்டு குழந்தைகளையும் வெகு செல்வமாக வளர்த்துவந்தார்கள். குழந்தை நாராயணனுக்கு வயதானதும் விதிப்ரகாரம் உபநயனத்தைச் செய்வித்து வித்யாப்யாஸம் பெறவேண்டி அவனை பாடசாலைக்கு அனுப்பினார்கள். பையன் புத்திகூர்மையிலும், ஞாபகசக்தியிலும் சிறந்தவனானபடியால், சிலமாதங்களுக்குள்ளேயே அவன் நான்கு வேதங்களையும் கற்றுணர்ந்தான். இந்த ஸமயத்தில் ஸூர்யாஜி தேகவியோகமானார். ஆகவே நாராயணனுக்கு மேலே படிக்க முடியாமல் அதிபால்யத்திலேயே குடும்பவிசாரணைசெய்யநேரிட்டது. ஆனால் அதில் நாராயணனுக்கு சிறிதும் ப்ரியமில்லை. ஆகவே தனக்கு வீட்டு வேலைபோக ஒழிந்தநேரங்களிலெல்லாம் தன் தாயாருக்காவது தமயனுக்காவது தெரிவிக்காமலே கோதாவரிக் கரைக்குப் போய் அங்கிருந்த ஒரு பெரிய ஆலமரத்தின் கீழ்ப் படுத்துக்கொண்டு எதையோகுறித்து சிந்தித்துக்கொண்டிருப்பார். இவ்வளவு பால்யத்திலேயே மேலான எண்ணங்கள் இவர் மனதில் உதித்தன. தேசத்தின் கேவலமான க்ஷீணத்தை யடைந்திருந்ததை கவனித்தார். பூர்வகாலந்தொடங்கி அனுஷ்டிக்கப்பட்டு வந்த யாதொரு ஸநாதன தர்மமுண்டோ அதை ஜனங்கள் மறந்துபோய் அவரவர் அவரவருக்குத் தோன்றினபடியெல்லாம் தங்களுடைய ஜாதி தர்மத்தை விட்டு விலகினவர்களாய் முகலாயரின் அரசாட்சிக்குட்பட்டு அவர்களுடைய மதக் கோட்பாடுகளின்படி நடக்கதொடங்கிவிட்டதை கவனித்து மனந்துடித்தார். அந்தோ! அவர்களை தேசத்தின் பழைய ஸன்மார்க்கத்தில் திருப்ப தான் ஏன் முயற்சிக்கக்கூடாது என்றெண்ணினார். இவரது மஹிமையையும் மனோபாவத்தையும் அறியாத தாயும், தமையனும் ஆரம்பததில் இவரை ரொம்

பவும் ஹிம்ஸித்தார்கள். ஆனால் அவற்றை யொன்றையும் லக்ஷியம் செய்தவரல்ல நாராயணன் (ராமதாஸர்). கடைசியாக அவரை ஏமாற்றி கல்யாணத்திற்கு உட்படச்செய்து, முகூர்த்தத்திற்கு ஆகவேண்டிய கார்யங்களைத் திட்டஞ் செய்திருந்தார்கள். நாராயணர் (ராமதாஸர்) கல்யாணத்திற்கு முதலில் உட்பட்டாரேயானாலும், அதில் அவருக்கு சிறிதும் மனமில்லை. ஏனெனில், தான் விவாஹம்செய்து கொண்டுவிடுவாரேயாகில் தான் தேசத்தை சீர்திருத்துவதாயிருக்கும் பெரிய கார்யம் நிறைவேறாது என்று கண்டார். ஆகவே, எப்படியாவது அந்த வலையில் சிக்கிக் கொள்ளாமல் தப்பித்துக்கொள்ளவேண்டுமென்று நிச்சயஞ்செய்தார். தாலிகட்டும்வரை எல்லாரும் நாராயணர் கல்யாணத்திற் குட்பட்டதாகவே எண்ணியிருந்தார்கள். ஆனால் தாலிகட்டப்போகும் ஸமயத்தில் நாராயணர் திடீரென்று ஓடத்தலைப்பட்டார். எல்லாரும் ப்ரமித்துப்போய் அவரைப் பிடிக்க பின்னால் ஓடினார்கள். ஆனால நாராயணர் அவர்கள் கையில் அகப்படவேயில்லை.

நாராயணர் ஸந்யாஸி வேஷம் பூண்டார். ஊர் ஊராகச் சுற்றத்தலைப்பட்டார். அங்கங்கு ஜனங்களிருந்த நிலைமையைத் தெரிந்துகொண்டார். கடைசியாக நாஸிகை என்ற ஊர்வந்து சேர்ந்தார். இதுமுதல்தான் இவருக்கு ராமதாஸர் என்று பெயர் உண்டானது இதற்குள்ளாக இவருக்கு நூற்றுக்கணக்கான சிஷ்யர்கள் ஏற்பட்டார்கள். அங்கங்கு ப்ரஸங்கங்கள்செய்தார். வேதத்தின் ரஹஸ்ய அர்த்தங்களை வெகு ஸாமர்த்யமாய் எடுத்துச்சொல்லுவார். ஸந்தேகங்களைத் தீர்ப்பார். ப்ராமணரிடத்தில் அதிக விச்வாஸமும அன்புங்காட்டிவந்தார். உலகத்தில் எவனும் குருவினுடைய அனுக்ரஹமில்லாமல் மோக்ஷத்தை யடைவது துர்லபம என்னும் வேதவாக்யத்தை பன்முறையும் சொல்லிவந்தார். இவரது மஹிமையைக் கேள்வியுற்ற சிவாஜி மஹாராஜா தனக்குத் தகுந்த குரு இவரேதான் என்று நிச்சயித்து 1659-வர்ஷத்தில் இவர் இருக்குமிடம் தேடிவந்து தன்னையும் ஒரு சிஷ்யராக பாவித்துக்கொள்ளவேண்டுமென்று அவரது கால்களில் விழுந்தார். ராமதாஸர் மஹாராஜாவை அனுக்ரஹித்துவிட்டு, பிற்பாடு ராஜ்ய வ்யவஹாரங்களைக் குறித்து பேசத்தொடங்கினார். தேசத்தில் அங்கங்கு தாம்கண்ட ஜனங்களின் நிலைமையையும், அவர்களை சீர்திருத்தவேண்டிய மார்க்கங்களையும் எடுத்துச்சொன்னார். அவைகளையெல்லாம் சிவாஜிசெவிகொடுத்துக் கேட்டுவிட்டு, அன்றுமுதல் அவருடைய ஆலோசனைகளின் படியே நடக்கத்தொடங்கினார். ப்ராமணர் முன்போல தங்களுக்கு விதிக்கப்பெற்ற தர்மத்தை யனுஸரித்தார்கள். அந்தப்ரகாரமே ஒவ்வொரு வர்ணத்தாரும் நடக்க ஆரம்பித்தார்கள். நாளுக்கு நாள் சிவாஜிக்கு தன்குருவும் மந்த்ரியுமாயிருந்த ராமதாஸரிடம் அன்பும் விச்வாஸமும் அதிகரித்தது. தன் குருவைவிட்டுப் பிரிந்திருக்கிறதென்றால் தாயையிழக்கும் கன்றுபோல் தவிப்பார். இதின் உண்மை பின்வரும் ஒரு உதாரணத்தினால் விளங்கும். ஒரு ஸமயம் ராமதாஸர் வழக்கப்ரகாரம் சதாராவில் ஒரு ப்ராமணன் வீட்டுவாசலில் நின்றுகொண்டு பிக்ஷைகேட்கும் பாவனையாய் "ஜயரகுபதி" என்றார். அந்தஸமயம் அடுத்த வீட்டில் சிவாஜி மஹாராஜா இருந்தார். வெளியே தன் குருவின் குரலைக் கேட்டதும் பரபரப்புடன் ஓடி வந்து அவரைத் தமது அரண்மனைக் கழைத்துப்போய் விதிப்ரகாரம் அர்க்யம் முதலானவை கொடுத்துவிட்டு, ராமதாஸருடைய கமண்டலுவில் பிக்ஷை போடுகிற மாதிரியாக ஒரு கடிதத்தைப் போட்டார். அதைக்கண்டு ராமதாஸர் புன்னகை கூர்ந்து, "குழந்தாய், பசியினால் வருந்துகிறவனுக்கு இந்தக் கடிதம் என்ன ப்ரயோஜனமாகும்?" என்றார். பிறகு கடிதத்தையெடுத்துப் படித்தார், ஆச்சர்யத்தை யடைந்தார், ஏனெனில் கடிதத்தில் சிவாஜி தன் ராஜ்

# Departmental Notes.

# பகுதிக் குறிப்புகள்.

## EDUCATION.

## வித்யாவிஷயம்.

### Practical Education.

அனுபவ பூர்வமான கல்வி.—பம்பாய் கவர்ன்மெண்டார் சிலகாலமாக பள்ளிக்கூடங்களில் அனுபவ பூர்வமாகக் கல்வி கற்பித்து வர ஏற்பாடு செய்வதைப் பற்றி கவனித்து வருகிறார்கள். பையன்கள் வாய்மொழியாகக் கேட்டோ, புஸ்தகங்களை வாசித்தோ தெரிந்துகொண்ட விஷயங்களை நன்று யறிந்துகொள்வதற்கு கற்பிக்கப்பட்ட விஷயங்களை நேராகப்பார்த்தும், படங்கள், மாதிரிகள் முதலியவைகளைப் பார்த்தும் நன்று யறிந்துகொள்ளலாம். இதற்கு பம்பாய் கவர்ன்மெண்டார் சில ஸாதனங்களைக் குறிப்பிட்டிருப்பதோடு அவைகளில் சிலவற்றை அனுஷ்டிப்பதற்கு பண உதவியும் செய்திருக்கிறார்கள். கைப்பழக்கப்பாடத்தில் 'ஸ்லாய்ட்' பயிற்சியென்று ஒரு உயர்ந்த முறை இருக்கிறது. அந்த முறையை பம்பாயில் அனுஷ்டிக்கப் போகிறார்களாம. பூகோளசாஸ்த்ரம், தேசசரித்ரம் முதலிய பாடங்களைக்கற்பிக்கும்போது மாஜிக்லாண்டர்ன்படங்களைஉபயோகிப்பதால் பாடங்கள்நன்றாய்விளங்கும். இந்தப்படங்களையும், அவைகளைக் காட்டுவதற்கு வேண்டிய விளக்குகளையும் வாங்கி பள்ளிக்கூடங்களுக்கு ஸப்ளை செய்வதற்காக பம்பாய் கவர்ன்மெண்டார் ஒரு லக்ஷம் ரூபாய் ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். இங்க்லண்டில் வெளியாகும் 'ஸ்பியர்,' 'இல்லஸ்ட்ரேடட் லண்டன் ந்யூஸ்,' 'க்ராபிக்' என்னும் பத்ரிகைகளில் நல்ல படங்கள் வெளியாகின்றன. இவைகளையும் இவைபோன்ற பத்ரிகைகளையும் பூகோள பாடத்திலும், தேசசரித்ர பாடத்திலும் உபயோகிப்பது நல்லதென்று பம்பாய் மாகாணத்து வித்யா டிரெக்டர் சிபார்சு செய்ததின்மேல் அந்த மாகாணத்து கவர்ன்மெண்டார் பள்ளிக்கூட புஸ்தகசாலைகளுக்கு ஷை பத்ரிகைகளை ஸர்க்கார் செலவில் வாங்கிக் கொடுக்கும்படி ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள்.

பள்ளிக்கூடங்களில் தோட்டங்கள் போட்டு வைத்து பையன்களை அவைகளிலுள்ள செடிகொடிகளின் இயல்பையும் அவைகளின் வளர்ச்சியையும் பற்றி கவனிக்கும்படி செய்வதால் பையன்களுடைய உற்றுப் பார்க்கும் சக்தி வ்ருத்தியடைகிறது. பம்பாய் கவர்ன்மெண்டார் இரண்டொரு வர்ஷங்களுக்கு முன், பள்ளிக்கூடத் தோட்டங்கள் வைக்கும் ஏற்பாட்டை பரிக்ஷார்த்தமாகச் செய்து பார்க்க வர்ஷந்தோறும் 4,000 ரூபாய் கொடுத்து வரும்படி ஸாங்க்ஷன் செய்தார்கள். தோட்டவேலையிலும், தாவர சாஸ்த்ரம், ப்ராணி சாஸ்த்ரம் ஆகிய இவைகளிலும் தேர்ச்சியுள்ளவர்களாயும் பையன்களுக்கு உற்றுப்பார்க்கும் சக்தியை உண்டுபண்ணக்கூடிய விதமாக கற்பிக்கக் கூடியவர்களாயுமுள்ள உபாத்யாயர்கள் அகப்படுவது பம்பாயில் அரிதாயிருந்ததாம். ஆனால் தேசபாஷை ட்ரெய்னிங் காலேஜுகளில் இயற்கைப பாடத்தை ஒரு பாடமாகச் சேர்த்திருப்பதால் இந்தக் குறை ஒருவாறு நீங்கி விடுமென்று தோன்றுகிறதாம்.

பாடங்களை அனுபவ பூர்வமாய் கற்பிப்பதற்கு இன்னொரு ஸாதனம் பையன்களை பாடங்கள் ஸம்பந்தப்பட்டுள்ள விடங்களுக்குக் கூட்டிக்கொண்டு போவது. எலிமெண்டரி ஸ்கூல்களில் பையன்களுக்கு பொருள் பாடங்களும், பூகோளசாஸ்த்ரமும் கற்பிக்கையில் கூடுமானபோது உபாத்யாயர்கள் பையன்களை வயல்கள், தோப்புகள், குளங்கள், நதிகள், சரித்ர ஸம்பந்தமான இடங்கள் முதலியவைகளுக்குக் கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்று வித்யாதிகாரிகள் சில வர்ஷங்களுக்கு முன்பே தெரிவித்திருக்கிறார்கள். இதோடு, கவர்ன்மெண்ட் காலேஜிலுள்ள மாணவர்கள் சரித்ர ஸம்பந்தமான ஊர்களுககுப போய்வருவதற்காக 2000 ரூபாய் க்ராண்டு கொடுத்திருக்கிறார்கள். இன்னும் ஒவ்வொரு கவர்ன்மெண்டு ஹைஸ்கூலுக்கும் வருஷந்தோறும 500 ரூபாய் பண உதவி செய்து வருகிறார்கள்.

ஆனால் மேற்சொன்ன மாதிரி நூதன முறைகளைக் கையாளுவதில் முக்ய கஷ்டம, இந்த முறைகளில் தேர்ச்சியும், ஊக்கமும் உள்ள உபாத்யாயர்களும், இன்ஸ்பெக்டர்களும் வேண்டியவரை அகப்படாததே. இந்தக் குறையை நிவர்த்திப்பதற்காக, மேற்சொன்ன முறைகளில் எதையாவது கைக்கொள்ள முன்வரும் உபாத்யாயர்களுக்கும, இன்ஸ்பெக்டர்களுக்கும் ப்ரத்யேகமாக வெகுமதியாவது படியாவது (அல்லவன்ஸ்) கொடுக்க ஏற்பாடு செய்யலாமா என்பதைப்பற்றி ஆலோசிக்கும்படி கவர்ன்மெண்டார் வித்யாடிரெக்டரை கேட்டிருக்கிறார்கள்.

# TAMIL LITERATURE.

## தமிழ்க் கல்வி.

### Prizes for Tamil Essays.

தமிழ் வியாஸங்களுக்கு வெகுமதிகள்:—சென்னையிலுள்ள தமிழ் அக்காடமி என்னும் தமிழ்க் கல்வி ஸங்கத்தின் கௌரவ மெம்பர்கள் அடியில் குறிப்பிட்டிருக்கும் விஷயங்களைப்பற்றி வியாஸம் எழுதுகிறவர்களுக்கு பொன்பதக்கங்கள் கொடுப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். விஷயங்களாவன:—நச்சினார்க்கினியரும் அவர் இயற்றிய நூல்களும்; பேராசிரியரும் அவரியற்றிய நூல்களும்; தமிழ் பாஷைக்கும் மற்ற த்ராவிட பாஷைகளுக்கும் உள்ள ஸம்பந்தம்; திருவள்ளுவநாயனாரும் அவர் இயற்றிய நூல்களும்; தமிழ் இலக்கியங்களின் காலவரையறை; தமிழ் பாஷையும் தமிழ் நூல்களும்; இளங்கோவடிகளும் அவர் இயற்றிய நூல்களும்; ராமானுஜரும் அவரியற்றிய நூல்களும்; சென்னை ராஜதானி நாணயங்களின் வரலாறு; குலவாணிகன் சாத்தனாரும் அவர் இயற்றிய நூல்களும்; பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், மதுரகவி யாழ்வார், குலசேகர ஆழ்வார், பெரிய ஆழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார் ஆகிய இவர்களுடைய சரித்ர ஆராய்ச்சியும் அவர்கள் இயற்றிய திருபபாசுரங்களும்; கம்பரும் அவர் இயற்றிய நூல்களும்; சேக்கிழாரும் அவரியற்றிய நூல்களும்; மாணிக்க வாசகரும் அவரியற்றிய நூல்களும்; தமிழ்நாட்டில் நாடக விலக்கியம்; திருத்தக்க தேவரும் அவரியற்றிய நூல்களும்; திருமங்கை யாழ்வாரும் அவரியற்றிய திருப்பாசுரங்களும்; அப்பரும் அவரியற்றிய திருப்பதிகங்களும்; தமிழரும் ஸங்கீதமும்; சிவஞான முனிவரும் அவர் இயற்றிய நூல்களும்; வில்லிப்புத்தூராரும் அவரியற்றிய நூல்களும்; நம்மாழ்வாரும் அவரியற்றிய திருப்பாசுரங்களும்; ஆண்டாள் அம்மையும் அவரியற்றிய நூல்களும்; பெருந்தேவனாரும் அவரியற்றிய நூல்களும்; ஸுந்தரமூர்த்தி ஸ்வாமிகளும் அவரியற்றிய திருப்பதிகங்களும்; ஸம்பந்தரும் அவரியற்றிய திருப்பதிகங்களும்; ஔவையாரும் அவரியற்றிய நூல்களும்; நக்கீரரும் அவருடைய உரை முதலியனவும்; ஒட்டக் கூத்தரும் அவரியற்றிய நூல்களும்; கச்சியப்ப சிவாச்சாரியாரும் அவரியற்றிய நூல்களும்; புகழேந்தியும் அவரியற்றிய நூல்களும்; வீரமாமுனிவரும் அவரியற்றிய நூல்களும்; கல்லாடரும் அவரியற்றிய நூல்களும். வியாஸம் எழுத விரும்புவோர் தாங்கள் எழுத உத்தேசித்திருக்கும் விஷயங்களை ஸங்கத்தின் கௌரவ ஸெக்ரெடரிக்குத் தெரிவித்து அவைகளை எழுதவேண்டியவைதைப்பற்றிய விவரங்களை யறிந்துகொண்டு பின்பு எழுத ஆரம்பிப்பது நல்லது. ஸெக்ரடரியின் விலாஸம்:—மிஸ்டர் வி. கே. க்ருஷ்ணஸாமி பிள்ளை, பி. ஏ, கௌரவ கார்யதர்சி, தமிழ் அக்காடமி, ந்யூட்டன் ஹவுஸ், சர்ச்ரோட், வேப்பேரி. மதராஸ்.

### Gardening.

**தோட்டப்பயிர்.**—இது சேலம் மேட்டுத் தெரு, என். எஸ். க்ருஷ்ணஸாமி அய்யர் இயற்றியது. இதில் ஆசிரியர் முக்யமாய் பழமரங்களின் ஸாகுபடியைப் பற்றி எழுதியிருக்கிறார். ஒட்டுக்கட்டுதல், பதியன் போடுதல், கன்றுகள் நடுதல், வேலிபோடுதல் முதலிய விஷயங்களைப்பற்றியும், பழமரங்களின் பலவகைகளைப்பற்றியும், அவைகளைப் பயிர் செய்யும் விதங்களைப் பற்றியும் தெளிவாய் எழுதியிருக்கிறார். விவஸாயிகள் இதை வாசித்துப்பயனடையலாம். புஸ்தகத்தின் விலை 2½ அணா. வேண்டுவோர் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

### Sri Venkatesa Kalyanam.

ஸ்ரீ வெங்கடேச கல்யாணம்.—இது டி. எஸ். ஸோமஸுந்தரம் பிள்ளை எழுதிய ஒரு நாடகமாகும். இதில் திருப்பதி ஸ்தலத்தின் மகிமை நாடக ரூபமாகக் கூறப்பட்டிருக்கிறது. திருபபதி ஸ்தலத்துக்கு நான்கு யுகங்களிலும் நான்கு பேர்கள் வந்ததற்குக் காரணம் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. நாராயணவனம் என்னும் க்ராமத்தை யாண்டுவந்த ஆகாச ராஜன் என்னும் அரசனுடைய புத்ரியாகிய பத்மாவதியை ஸ்ரீ மகாவிஷ்ணு கல்யாணம் செய்துகொண்டதுதான் கதையின் முக்ய அம்சம்

நாடகத்தின் நடை ஸுலபமாயும் தெளிவாயும் இருக்கிறது. யாவரும் வாசிக்கவேண்டிய புஸ்தகங்களில் இது ஒன்றாகும். இதன் விலை 10 அணா

வேண்டுவோர் ஜி. ஏ. வைத்யாராமன் அண்ட் கம்பெனி, ஹைகோர்ட்டுக் கெதிரில் 3,4, கொண்டி செட்டித் தெரு, சென்னை என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

# SCIENCE AND INVENTION.

# சாஸ்த்ரமும் நூதன கற்பிதமும்.

## Keeping Fish Alive.

**மீனை உயிருடன் வைத்திருப்பது.**—ஒரு மேல்நாட்டு வித்வான் மீன்களைப் பிடித்தபிறகு அவைகளை சில மாஸகாலம் வரையில் அப்படியே உயிரோடிருக்கும்படிசெய்ய ஒரு முறைகண்டு பிடித்திருக்கிறாராம். இதனால் மீன்களை எவ்வளவு தூரமுள்ள இடத்துக்கும் விற்பனைக்கு அனுப்புவது ஸாத்யமாகும். அவர் மீன்களைப் பிடித்து பனிக்கட்டிகளுக்கு நடுவில்வைத்து மீன்களையும் குளிர்ந்து விறைத்துப் போகும்படிசெய்து, பிறகு இஷ்டப்பட்டபோது வெளியிலெடுத்து சிலகாலம் மெதுவாக அவைகளின் குளிர்ச்சியைக் குறைதது பூர்வநிலைமைக்குக் கொண்டுவந்துவிடுகிறாராம் அவர், ஸமீபத்தில் ஜலத்தில் அதிக ப்ராணவாயு இருக்கும்படிசெய்து, அந்த ஜலத்தின்மேல் பனிக்கட்டித் துண்டுகளை மிதக்கப்போட்டு ஜலத்தின் உஷ்ணத்தைக் குறைத்தாராம். ஜலமும் மீனும் ஒரேபனிக்கட்டியாகப் போய்விட்டது. பிறகு இரண்டுமாஸம்கழித்து, 'மீன் பனிக்கட்டி'யை மெதுவாக குடாக்கினதில் மீன்களெல்லாம் உயிரோடிருந்தனவாம். இந்தமுறையில் கவனிக்கவேண்டிய முக்யவிஷய மென்னவென்றால் ஜலத்தை மெதுவாக குளிரச்செய்யவேண்டும். பனிக்கட்டிகளை ஜலத்தின்மேல் மிதக்கபபோடுவதற்கும், ஜலம்முழுவதும் கட்டியாவதற்கும் மத்தியில் 15-மணி முதல் 18-மணிவரையில் ஸாவகாசம் இருக்கவேண்டுமாம்.

## Torpedoes as Floating Mines.

**டார்பிடோக் குழாய்கள் மிதக்கும் கடல் வெடிகுண்டுகளாவது.**—கப்பல்களிலிருந்து விடும் டார்ப்பிடோக் குழாய்கள் குறிதப்பி எதிரிக்கப்பல்களைத் தாக்கத் தவறிப்போனால், பிறகு அவைகளால ஸாதாரணமாக யாதொரு கெடுதலும ஏற்படுவதில்லை. குறிதப்பிப்போனபிறகு கெடுதலுண்டாகக் கூடியவையான டார்ப்பிடோக்களை யுத்தக்கப்பல்கள் ப்ரயோகிககக் கூடாதென்று ஹேக் என்னும் பட்டணத்தில் நடந்த ஒரு பரஸ்பரதேச உடன்படிக்கையில் கண்டிருக்கிறது. ஜெர்மன் ஸப்மரீன்கள் ப்ரயோகித்த டார்ப்பிடோக்களில் குறிதபபிபபோன சிலவற்றைப் பரீக்ஷித்துப் பார்த்ததில், அவைகளை கடலில் மிதக்கும் வெடிகுண்டுகளாக மாற்றுவதற்கு வேண்டிய உபாயங்கள் ஒவ்வொன்றிலும் அமைக்கபட்டிருக்கின்றனவென்று தெரியவந்ததாம். இதனால் அந்த டார்ப்பிடோக்கள் எந்தக் கப்பலின்மேல் ப்ரயோகிக்கப்பட்டனவோ அவைகளைத் தாக்காவிட்டாலும், அவைகள் கடல்களில் மிதந்துகொண்டுபோவதால் வேறு எந்தக் கப்பல்களாவது அவைகளின்மேல்பட்டால் நாசமடைந்துவிடக்கூடுமாம்.

## Colouring the Wood of Growing Trees.

**வளரும் மரங்களின் வைரமானபாகத்துக்கு வர்ணங்கொடுத்தல்.**—மர வேலைகளில் ஸாமான்களுக்கு ப்ரத்யேகமான வர்ணங்கள் பூசுவதில் அநேகர் ப்ரியங்கொள்வதுண்டு. இதற்காக சிலர் வளரும் மரத்தில் சிலவர்ணங்கொடுக்கும் பொருள்களைச்செலுத்தி, அந்தப் பொருள்களும், மரத்திலுள்ள பொருள்களும் சேருவதால் ஏற்படும் ரஸாயன மாறுபாடுகளால் மரம்முழுவதும் வேறுநிறங் கொள்ளும்படி செய்யலாமென்று ஆராய்ச்சிகள் செய்துபார்த்தார்கள். இந்தமாதிரிப் பரீக்ஷைகள் ஸுமார் 80 வர்ஷ காலமாகச் செய்யப்பட்டு வருகின்றன. ஆயினும் அவைகளில ஒன்றாவது பலிக்கவில்லை. ஸமீபத்தில் ஒருவர் சில பரீக்ஷைகள் செய்து மரங்களின் உள்ளேயிருக்கும் பாகங்களுக்கு தமக்கிஷ்டமான நிறம் உண்டாகும்படி செய்திருக்கிறார் என்று தெரிகிறது. அவர் மரங்களில் சில த்வாரங்கள் செய்து அதன்மூலமாக மரத்தில் சிலசாயப்பொருள்களையும் ரஸாயனப்பொருள்களையும் செலுத்துகிறாராம். மரம் அதை க்ரஹித்து, எல்லாபாகங்களிலும் கொண்டு போகிறது. மரத்தின் உள்பாகங்கள் நிறம் மாறுகின்றன. சிலஸமயங்களில் இலைகள் கூட நிறம் மாறுகின்றனவாம்.

## Conversing with the Dead.

**இறந்து போனவர்களுடன் ஸம்பாஷணை.**—இப்போது உலகத்தில் ப்ரசித்திபெற்ற பௌதிக சாஸ்த்ர வித்வான்களுக்குள் சிறந்தவர் என்று கொண்டாடப்படும் ஸர் ஆலிவர் லாட்ஜ் என்பவர் ஸமீபத்தில் இங்கிலாந்தில்செய்த ஒரு ப்ரஸங்கத்தில் இறந்துபோனவர்களை ஸூக்ஷ்ம த்ருஷ்டியால் ஸந்தித்து, ஸம்பாஷிப்பது ஸாத்யம் என்றும், தம்முடைய இறந்துபோன சில ஸ்நேஹிதர்களுடன் தாம் அவ்விதமாக ஸம்பாஷித்ததாகவும் தெரிவித்தாராம்.

# SANITATION AND MEDICINE.

# ஸுகாதாரமும் வைத்யமும்.

## Cremation.

**தகனம்.**—ஹிந்துக்களில் ப்ராமண வகுப்பாருக்குள்ளும் மற்றும் சில ஜாதிகளுக்குள்ளும் ப்ரேதத்தை தகனம் செய்வது வழக்கம். மற்ற ஹிந்து ஜாதிகளும், வேறு மதஸ்தர்களும் பிணங்களைப் புதைப்பது வழக்கம். ப்ரேதங்களைப் புதைப்பதைவிட எரித்துவிடுவது ஸுகாதாரத்துக்கேற்றது. புதைப்பதால் பல அஸௌகர்யங்கள் ஏற்படுகின்றன. ஸ்கார்லட் காய்ச்சல் என்னும் ஒருவித தொத்து வ்யாதியால் இறந்தவரைப் புதைத்துவைத்து, 30-வர்ஷங்கழித்து பூமியை வெட்டிப்பார்த்தால், ஷை காய்ச்சல் க்ருமிகளின் ஜீவமூலங்கள் உயிருடனிருக்கின்றனவாம். எட்டடி ஆழத்துக்குக்கீழே கூட புழுக்கள் சாகாமலிருக்கின்றன. அவைகள் அந்த ஆழத்திலுள்ள மண்ணை உயரக் கொண்டுவரக்கூடும். அவை உயரக்கொண்டுவரும் பொருள்கள் காய்ந்துபோனால் ரொம்ப சிறிய அணுக்களாக இருக்கின்றன.

டார்வின் என்னும் ஜீவநூல்சாஸ்திரி சில வர்ஷங்களுக்கு முன்னால் ஆப்ரிக்காவின் மேற்குக்கரைக்கு ஒரு ஸமயம் போயிருந்தபோது காற்றானது 300-மைல் தூரத்திலிருந்து புழுதியைக்கொண்டுவந்து வீசிற்றென்று கண்டார். ஆகையால் 30-வர்ஷங்களுக்கு முன்னால் ஸ்கார்லட் காய்ச்சலால் இறந்தவன் புதைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து வ்யாதி க்ருமிகளின் மூலங்கள் புழுக்கள் மூலமாய் வெளியில்வந்து அந்த க்ருமி மூலங்கள் காற்றால் 300-மைல் தூரத்திலுள்ள ஊர்களுக்கும் போய் ஷை காய்ச்சல் பரவக்கூடும். மேலும் ஸமாதிகளிலிருந்து கெட்ட வாயுக்கள் உண்டாகின்றன. மழை ஜலம் ஸமாதிகளில் சுவறி அருகிலுள்ள ஜலாதாரங்களில் கலந்து ஜலத்தை அசுத்தப்படுத்துகிறது. தகனம் செய்வதால் இந்தத் தொந்தரவுகள் கிடையா. மேலும் தகனம் செய்வதற்குச் செலவு குறைவு. ஸமாதிகள் கட்டுவதற்கு செலவு அதிகமாகும்.

## Malaria and Rice Cultivation.

**மலேரியாவும் நெல் ஸாகுபடியும்.**—இந்தியாவில் சிலர் நெல் ஸாகுபடியாகும் இடங்களில் ஜலந்தேங்கியிருப்பதால் மலேரியாவைப் பரவச்செய்யும் கொசுக்கள் வ்ருத்தியாகின்றனவென்று சொல்லிவருகிறார்கள். அது சரியல்லவென்று தெரிகிறது. ஸமீபத்தில் மேல்நாட்டுப பட்டணமொன்றில் நெல்லைபபற்றி ஆலோசிப்பதற்காக நடந்த ஒரு காங்ரெஸில், மலேரியாக்காய்ச்சல் பரவியிருக்கும் ப்ரதேசங்களில் நெல் ஸாகுபடி செய்வதால் வ்யாதி குறைகிறதென்றும், எங்கேயாவது சதுப்பான நிலங்களிருந்தால் அவைகளை ஸாகுபடிக்குக் கொண்டுவந்து ஸுகாதாரக்குறைவை நிவர்த்திசெய்யவேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள். வயல்களில் உள்ள கொசுக்களில் ஆயிரத்துக்கொன்றுதான் மலேரியாவைப் பரவச்செய்யக் கூடியவையாயிருக்கின்றனவென்று ஆராய்ச்சிகளால் தெரியவருகிறது வயலோரமாயும், தோட்டங்களோரமாயும், விவஸாயக்கருவிகள் வைப்பதற்காகக் கட்டப்பட்டிருக்கும் குடிஸைகளில் மலேரியாவைப பரவச்செய்யும் கொசுக்கள் இருப்பதேயில்லை. க்ராமாந்தரங்களில் உள்ள கொசுக்களில் 100-க்கு 5-வீதம் வ்யாதியைப் பரவச்செய்யக்கூடியவை. க்ராமங்களிலுள்ள சிறு குளங்கள், உபயோகமற்ற கிணறுகள், மற்றும் ஜலந்தேங்கியிருக்குமிடங்கள் ஆகிய இவைகளைத் தூர்த்துவிட்டால் க்ராமத்தில் மலேரியாக்காய்ச்சல் வருவதில்லையாம்.

## Hygienic Education of the People.

**ஜனங்களுக்கு ஸுகாதாரக் கல்வி கற்பிப்பது.**—ஸர்ஜன்-ஜெனரல் பான்னர்மன் என்பவர் ஸமீபத்தில் செய்த ஒரு ப்ரஸங்கத்தில் ஜனங்களுக்கு ஸுகாதார விஷயங்களை போதிக்கவேண்டியது அவச்யமென்றார். ஸுகாதார சாஸ்த்ரத்தில் ஆராய்ச்சி செய்வதுமாத்ரம் போதாது. ஜனங்களுக்கு ஸுகாதார விதிகளைக் கற்பிக்கவேண்டும். ஒவ்வொரு ராஜதானியிலும் ஸாமான்யர்களுக்கு ஸுகாதாரக்கல்வி கற்பிப்பதை கவனித்துவர ஒரு உத்யோகஸ்தரை நியமிக்கவேண்டும். அவர் ஸுகாதார ஸம்பந்தமான சிறு புஸ்தகங்களும், ப்ரஸங்கங்களும் தயார்செய்யவேண்டும். ப்ரஸங்கங்களில் மாஜிக்லாண்டர்ன் படங்கள் உபயோகித்து விஷயங்களை விளக்கிச் சொல்லவேண்டும். இந்தப் புஸ்தகங்களையும், படங்களையும், ஊரூராய்ப்போய் ஜனங்களுக்குக் கற்பிக்க முன்வரும் ப்ரஸங்கிகளுக்கு கொடுத்து உதவவேண்டும். உபாத்யாயர்கள் பயிலும் போதனாமுறைக் காலேஜுகளில் ஸுகாதார வகுப்புகள் ஏற்படுத்தவேண்டும் என்று மிஸ்டர் பான்னர்மன் சொன்னார்.

# LAW.

## சட்டம்.

### Adoption by Widows.

விதவை ஸ்வீகாரம் செய்து கொள்வது.—(1) ஒரு ஹிந்து விதவை ஸ்வீகாரம் செய்து கொள்ளவேண்டு மென்று ஒரு ஸபிண்டரை அனுமதிகேட்டால், அந்த ஸபிண்டர் தமது சொந்த ஸௌகர்யத்தைக்காரணமாக வைத்துக்கொண்டு ஸ்வீகாரம் செய்யலாம், செய்யக் கூடாதென்பதைத் தீர்மானிக்காமல், விதவையின் குடும்பத்துக்கு எது நன்மையானதென்பதை உத்தேசித்தே தீர்மானிக்கவேண்டும். ஒரு ஹிந்து விதவை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளவேண்டி ஸமீப அனந்தரவார்ஸ் ஒருவரை அனுமதி கேட்டாள். அந்த அனந்தரவார்ஸுக்கு புத்ரன் ஒருவருமில்லை. தமக்கு "ஒரு புத்ரன் பிறக்கும்வரையில் காத்திராமல், ஒரு பையனை ஸ்வீகாரம் செய்வதற்கு இப்போது அவச்யமில்லை" யென்று சொல்லி ஸ்வீகாரத்துககு அனுமதி கொடுக்க மறுத்தால் அப்படி மறுத்தது சரியல்ல.

2. லா வீக்லி 284.

(2) ஒரு ஹிந்து புத்ரனில்லாமல் இறந்து போனார். அவருடைய ஸகோதரர்களில் சிலர் பாகமாகிப் பிரிந்து போய் விட்டார்கள். மற்றவர்கள் இறந்துபோனவருடன் ஏகுடும்பமாக வஸித்துவந்தார்கள். இறந்து போனவரின் விதவை ஸ்வீகாரமெடுத்துக் கொள்ள வேண்டுமானால் ஒன்றாக வஸித்துவரும் குடும்பத்திலுள்ளவர்களுடைய அனுமதியைப் பெறரால் போதும். பிரிந்துபோன ஸகோதர்களுடைய அனுமதியைப்பெற வேண்டிய அவச்யமில்லை. குடும்பத்தின் தலைவர் அனுமதிகொடுக்க மறுத்து, விதவை மறற ஸமபாகஸ்தர்களில் பாதிக்கு மேற்பட்டவர்களுடைய அனுமதியைப்பெற்றுக்கொள்ளாமல் ஸ்வீகாரம் செய்து கொண்டால் அந்த ஸ்வீகாரம செல்லாது. குடும்ப சொத்தை அன்யர்களுக்குப் பராதீனம் செய்யும் எண்ணத்துடன் ஒரு விதவை தன் புருஷன் இறநதுபோய் முப்பது வர்ஷம் கழிந்தபின்பு, ஒரு பையனை ஸ்வீகாரம் செய்து கொண்டாள். புருஷனுடைய ஸகோதரராகிய அவிபக்த குடும்பத்தின் தலைவர் அநத ஸ்வீகாரத்தை ஒபபுக்கொள்ள மறுத்தால், அபபடி மறுததது கெட்ட எண்ணத்துடன் மறுத்ததாகாது. 2. லா வீக்லி 286.

3. ஒரு ஹிந்து தமது உயிலில் (மரண சாஸனத்தில்) ஒரு குறிப்பிட்ட பையனை தமது மனைவி ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளும்படி எழுதி வைத்துவிட்டு இறந்து போனார். அப்படி பையனை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்ட சில காலத்துக்கெல்லாம் அவன் இறந்து போனான். பிறகு 20 வர்ஷம் கழித்து, உயிலின் ஆதாரவின் மேல் வேறொரு பையனை ஸ்வீகாரம் செய்து கொண்டாள். ஒரு பையனை ஸ்வீகாரம் செய்து கொள்ளவேண்டு மென்று புருஷன் எண்ணியிருந்தாலும், இரண்டாவது தடவை ஸ்வீகாரம் செய்யக்கூடாதென்று அவர் எண்ணியிருந்ததற்கு யாதொரு ஆதாரமும் இல்லாததால் இரண்டாவது ஸ்வீகாரம் சட்டப்படி செல்லும்.

### Women's Courts.

ஸ்த்ரீகள் கோர்ட்டுகள்.—அமெரிக்காவில் ஸ்த்ரீகளுடைய குறறங்களையும், வ்யவஹாரங்களையும் விசாரித்துத்தீர்ப்பதற்காக ப்ரத்யேகமான கோர்ட்டுகள் இருக்கின்றன. ந்யூயார்க்கில் ஸ்த்ரீகளுக்கென்று ப்ரத்யேகமாயுள்ள ஒரு கோர்ட்டில் ஸ்த்ரீகளும், சிறு பெண்களும் செய்த சிறுகுற்றங்களை விசாரணை செய்துவருகிறார்கள். இந்தக் கோர்ட்டும், பிலடல்பியாவிலுள்ள ஒரு ஸ்த்ரீகோர்ட்டும் ராத்ரியும் பகலும் நடக்கின்றன. குற்றவாளிகளை நன்றாய் விசாரித்து அவர்களுடைய மனோநிலைமைகளையும்தேகநிலைமைகளையும் அறிந்துகொண்டு, தக்க ஸங்கம் அல்லது ஸ்தாபனங்களுக்கு அனுப்பி விடுகிறார்கள். இதனால் குற்றவாளிகள் மற்றவர்களைக் கெடுப்பது குறைகிறது. வேலை செய்ய சக்தியுள்ளவர்களுக்கு தொழில் ஸம்பாதித்துக் கொடுக்கிறார்கள். சென்ற வர்ஷத்தில் பிலடல்பியா பட்டணத்தில் ஸ்த்ரீ வ்யவஹாரங்களை விசாரிக்க ஒரு முனிஸிபல் கோர்ட்டு ஸ்தாபித்தார்கள். அதில், சிறு பெண்களின் குற்றங்கள், சிறு குற்றங்கள், ஸிவில் வ்யாஜ்யங்கள், குடும்ப வ்யவஹாரங்கள், நடத்தையைப்பற்றிய வழக்குகள் ஆகிய ஐந்து விதமான வ்யவஹாரங்களை விசாரிக்க ஐந்து பிரிவுகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள். ஒரு வர்ஷத்தில் பிலடல்பியாவில் மாத்ரம் 15300 கேஸ்கள் ஸ்த்ரீ கோர்ட்டார்கள் விசாரித்து தீர்ப்பு செய்தார்கள்.

### Illegitimate Son and Family Property.

வைப்பாட்டி பிள்ளையும் குடும்ப சொத்தும்.—ஒரு சூத்ரர் ஒரு தேவடியாளை ஸ்திரமாக வைத்துக் கொண்டிருந்து, அவளுக்கு ஒரு மகன் பிறந்தால், அந்த மகனுக்கு அவிபக்த குடும்ப சொத்தில் ஒரு பாகம் பெற பாத்யதை உண்டு.

# PERSONAL NOTES.

## மனிதர்களைப்பற்றிய குறிப்புகள்.

### Kaiser's Income.

கெய்ஸருடைய வரும்படி.—ஜெர்மன் சக்ரவர்த்தியாகிய கெய்ஸருக்கு கவர்ன்மெண்டார் கொடுக்கும் பணமேயன்றி, ஸொந்த வரும்படியும் ஏதேஷ்டமாகக் கிடைத்து வருகிறதாம். கொஞ்சகாலத்துக்கு முன்பு ஒருவர் அவருடைய ஆஸ்திகளைக் கணக்கிட்டுபபார்த்ததில் அவருக்கு 30 கோடி ரூபாய் மதிப்புள்ள ஸொத்துகளிருக்கின்றனவென்றும், வர்ஷந்தோறும் அந்த ஸொத்துக்களிலிருந்து 1½ கோடி ரூபாய் வரும்படி கிடைத்து வருகிறதென்றும் தெரிய வந்திருக்கிறது. அவருடைய மூத்த புத்ரராகிய இளவரசருககு ஸொந்தத்தில் 1½ கோடி ரூபாய் மதிப்புள்ள ஸொத்துக்களிருக்கின்றனவாம். அவைகளிலிருநது 7½ லக்ஷம் ரூபாய் வரும்படி வருகிறதாம். கெய்ஸருடைய ஸகோதரராகிய ஹென்ரி ராஜகுமாரருக்கு 75 லக்ஷம் ரூபாய் ஸொத்துக்கள் இருக்கின்றனவாம். கெய்ஸரின் குடும்பத்துக்கு ஹொஹன் ஸால்லர்ன் குடும்பம் என்று பெயர். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு மொத்தத்தில் 37½ கோடி ரூபாய் மதிப்புள்ள ஸொத்துக்கள் இருக்கின்றனவாம், கெய்ஸருக்குக் கிடைத்துள்ள ஸொத்தெல்லாம் அநேக வ்யாபாரக் கைத்தொழில் துறைகளில் பணம் போட்டதால் கிடைத்தவை. ஜெர்மன் கப்பல் கம்பெனிகளில் அவருக்கு ஏராளமான பங்குகள் இருக்கின்றன. ஜெர்மன் மேற்கு ஆப்ரிக்காவிலுள்ள வைரச் சுரங்கங்களில் அவர் ஏராளமாய்ப பணம் போட்டிருக்கிறார். அவருக்கு 5¼ கோடி ரூபாய் மதிப்புள்ள நிலங்களும் இருக்கின்றன. மேற்கு ரஷ்யாமாகாணத்தில் அவருக்கு ஒரு குதிரை வளர்க்கும் பண்ணையொன்றிருக்கிறது. அதில் அவருக்கு நல்ல வரும்படி கிடைத்துவருகிறது. ஹானோவரில் உள்ள ஒரு சாராயமிறக்கும் சாலையில் ரொம்பப்பணம் போட்டிருக்கிறார். கார்டினன் என்னும் ஊரிலுள்ள அவருடைய ஸொந்த நிலங்களில் ஒரு மண்பாண்டத் தொழில் சாலை ஸ்தாபித்திருக்கிறார். அவருக்கு 40 கோட்டைகளும், க்ராமாந்தர அரண்மனைகளும் இருக்கின்றன. இவைகளின் மதிபபு 3 கோடி ரூபாயாகும். அவர் அமெரிக்கா ஐக்யமாகாணங்களின் மேறகு மாகாணங்களிலும், கனடாவின் மேர்குப ப்ரதேசத்திலும் நிலஙகளில் ஏராளமாய்ப பணம் போட்டிருக்கிறா.

### Mr. Gandhi.

மிஸ்டர் காந்தி.—மிஸ்டர் மோஹனதாஸ் காரம்சந்த் காந்தி சென்ற ஏப்ரல் மாஸம 17-ந் தேதி சென்னைக்கு வந்து இந்த மாஸம் 4-ந் தேதிவரையில் இங்கே தங்கியிருந்தார். அவர் தென்னாபரிக்காவை விட்டு இஙகே வந்துவிட்டதால் அங்கேயுள்ள இந்தியர்களின் கார்யங்களை யார் கவனிபபாரென்று அவரை ஒரு பத்ரிகை நிருபர் கேட்டதற்கு, அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லையென்றும், அங்கேயுள்ளவர்களில் இந்தியர்களுக்கு ஸாதகமாயிருபபவர்களும், முக்யமாய் தென்னாப்ரிக்காப் போராட்டத்தில் ரொம்ப உதவியாயிருந்த மிஸ்டர் எச். எஸ். எல். போலக்கும் அங்கேயுள்ள இந்தியர்களின் விஷயங்களை கவனித்துக் கொள்வார்களென்றும் பதில் சொன்னார். அவர் இந்தியாவில் இனிமேல் என்ன செய்யப் போகிறாரென்பதைப்பற்றி பின்வருமாறு தெரிவித்திருககிறார். காலஞ்சென்ற மிஸ்டர் கோபாலக்ருஷ்ண கோகலே சொல்லியிருக்கிறபடி அவர் தேசமெங்கும் சுற்றுப்ரயாணம் செய்து தேசத்தின் நிலைமையைப்பற்றி ஆராய்ச்சி செய்து பிறகு இன்னது செய்கிறதென்று தீர்மானிப்பாராம். ஆயுள் முழுவதும் தேச நன்மைக்கு உழைப்பதற்கு இந்திய வாலிபர்களை பழக்குவதற்காக அவர் ஒரு ஸங்கம் ஏற்படுத்தியிருக்கிறார். அந்த ஸங்கத்தை யதாப்ரகாரம் நடத்திவருவார். தென்னாப்ரிக்காவில் அவர் நடத்திவந்த போராட்டத்தில் சேர்ந்தவர்களில் சிலரும், மற்றவர்களுடைய பிள்ளைகளும் இந்த ஸங்கத்தில் சேர்ந்து உழைப்பதற்காக அவரோடுகூட இந்தியாவிற்கு வந்திருக்கிறார்களாம்.

### Sir. C. Sankaran Nair.

ஸர். ஸி. சங்கரன் நாயர்.—சென்னை ஹைகோர்ட்டில் ஒரு ஜட்ஜாக இருந்த ஸர் ஸி. சங்கரன் நாயர் இந்தியா கவர்ன்மெண்டின் நிர்வாக ஸபையில் கல்வி மெம்பராக நியமிக்கபபட்டிருக்கிறார் அவர் கல்வியையேயன்றி, ஸ்தல ஸ்வய ஆட்சி, ஸுகாதாரம் ஆகிய இவைகளையும் கவனிதது வருவார்.

ஸர் சங்கரன் நாயர் 1875-ம் வர்ஷம் ஜனனமானார். சென்னை ப்ரெஸிடென்ஸி காலேஜில் கல்வி பயின்றார். பிறகு சிறிதுகாலம் டிஸ்ட்ரிக்ட் முன்ஸிப உத்யோகம் பார்த்து வந்தார். அதை விட்டுவிட்டு, 1879-ம் வர்ஷம் முதல் வக்கீலாக இருந்து வந்தார். 1890-ம் வர்ஷத்தில் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் ஒரு மெம்பராக கவர்ன்மெண்டால தெரிந்தெடுக்கபபட்டார். 1897-ம் வர்ஷத்தில் அம்ரோடியில் நடநத இந்தியன் நாஷனல் காங்க்ரெஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்தார். 1906-ம வர்ஷத்தில் சென்னை ஹைகோர்ட்டில் ஜட்ஜாக நியமிககபபட்டார். ஸர் சங்கரன் நாயர் ஹைகோர்ட்டுக்கு ஜட்ஜாகப் போகுமுன காங்க்ரெஸில் சேர்ந்து உழைத்து வநதார். இப்போதும் ஜன ஆசார சீர்திருத்த முயற்சியில் ரொம்பவும் பாடுபட்டு வருகிறார்.

# SOCIETY AND RELIGION.

# ஜனஸமூகமும் மதமும்.

## The Library Movement.

புஸ்தக சாலைகள் ஏற்படுத்துதல்.—இம்மாகாணத்தைச்சேர்ந்த தெலுங்கு ஜில்லாக்களில் சென்ற 4-வருஷங்களுக்குள் பல பொதுப் புஸ்தகசாலைகளும் வாசகசாலைகளும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளின் தொகை இன்னும் அந்த ஜில்லாக்களில் அதிகமாய்க் கொண்டுபோவதாகவே தெரிகிறது. அச்சாலைகள். பொது ஜனங்களுக்கு அறிவையுண்டாக்கும் நோக்கத்தோடு ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. போன வர்ஷத்தில் பெஜவாடாவில் தெலுங்கு ஜில்லா பொதுப் புஸ்தகசாலைகளின் கான்பரென்ஸொன்று நடந்ததாகவும், அப்போது அவைகளை மேற்பார்வை பார்க்க ஒரு தாய்ச் சங்கம் ஸ்தாபிக்கபபட்டதாகவு மறிகிறோம். இப்போது அந்த ஜில்லாக்களில் 160-இலவசப் புஸ்தகசாலைக ளிருக்கின்றன வென்றும், அவைகளில் 19-புஸ்தகசாலைகளுக்குச் ஸொந்தக் கட்டிடங்க ளிருக்கின்றன வென்றும், 6-புஸ்தக சாலைகளில் 1000-க்கு மேற்பட்ட புஸ்தகங்க ளிருக்கின்றன வென்றும், 26-புஸ்தகசாலைகளில் 500-க்கு மேற்பட்ட புஸ்தகங்க ளிருக்கின்றன வென்றும், மற்றவைகளில் அத்தொகைக்குக் குறைந்த புஸ்தகங்க ளிருக்கின்றன வென்றும் தெரிகிறது. அவைகளில் 12 புஸ்தகசாலை ஸ்தாபனங்கள் இராப் பள்ளிக்கூடங்கள் வைத்து நடத்துகின்றனவாம். வேறே 22-ஸ்தாபனங்களின் ஆதரவில் புராண காலக்ஷேபங்கள் நடக்கின்றனவாம். ஒரு ஸ்தாபனம் வர்ஷந்தோறும் தொழிற் பொருட்காட்சி நடத்துகிறது. 10-ஸ்தாபனங்கள் காவ்யங்களிலும், சாஸ்த்ரங்களிலும், போட்டிப் பரீக்ஷைகள் நடத்தி வெகுமதிகள் கொடுக்கின்றன. 4-ஸ்தாபனங்கள் தெலுங்குப் புஸ்தகங்களும், துண்டுப் பத்திரிகைகளும் அச்சிட்டு வெளியிடுகின்றன. மேலே சொன்ன ஸ்தாபனங்களில் 5-ஸ்தாபனங்களை இந்திய ஸ்த்ரீகள் தங்களுக்கென்றே ஸ்தாபித்துக்கொண்டிருக்கிறார்களென்று தெரிகிறது. மற்ற ஸ்தாபனங்களில் ஸ்த்ரீ மெம்பர்களு மிருக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய புஸதகங்கள், ஸமாசாரப்பத்ரிகைகள் முதலியன, அவர்களுடைய வீட்டுக்கே புஸ்தகசாலைச் சேவகனொருவனால் கொண்டுபோய்க் கொடுக்கபபடுகின்றன. ஒரு ஸ்த்ரீ ஸ்தாபனத்தில் அந்த ஸ்தாபனத்தைச்சேர்ந்த மெம்பர்கள் மெம்பர்க ளல்லாத தங்களுடைய ஸகோதரிகளைக் கூட்டி வைத்துக்கொண்டு அவர்களுக்கு நல்ல புஸ்தகங்களிலிருந்து வாசித்துக் காட்டுகிறார்களென்றும் தெரிகிறது. அந்த ஸ்தாபனங்களெல்லாம் விதிகளுக்கும் ஒழுங்குகளுக்கும் கட்டுப்பட்டு நடந்துவருகின்றன வென்றும், அவைகளுக்கு நிர்வாகக் கமிட்டிக ளிருக்கின்றன வென்றும், அவைகள் தங்கள் வருஷதினத்தைக் கொண்டாடி வருகின்றன வென்றும் அறிகிறோம்.—சுதேசமித்திரன்.

## Schools for Depressed Classes.

தாழ்ந்த வகுப்பாருக்குப் பள்ளிக்கூடங்கள்.—பேரார் மாகாணத்திலுள்ள அமராவதி (அம்ரோடி) பட்டணத்தில் தாழ்ந்த ஜாதியார்களை உயர்த்தும் ஸங்கத்தாரின் ஆதரவில் நடந்துவரும் பள்ளிக்கூடங்களின் பரிசளிப்புக் கொண்டாட்டம் ஸமீபத்தில் நடந்தபோது பேரார் மாகாணத்தின் கமிஷனர் தாழ்ந்த ஜாதிகளை உயர்த்துவதைபபற்றி ஒரு ப்ரஸங்கம் செய்தார். அந்த ப்ரஸங்கத்தில் ஒரு முக்யமான விஷயததைப்பற்றி ப்ரஸ்தாபம் செயதார். இபபோது தாழ்ந்த ஜாதிகளை உயர்த்தும் ஸங்கங்கள் விசேஷமாக அந்த ஜாதிப்பிள்ளைகளுக்கு ப்ரத்யேகமான பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பதை மாத்ரம் கவனித்துவருகின்றன. இந்த ஏற்பாட்டால் தீமையும் ஏற்படக்கூடும். உயர்ந்த ஜாதிகளுக்கும் தாழ்ந்த ஜாதிகளுக்கும் உள்ள வித்யாஸத்தை அதிகப்படுத்துமேயொழிய குறைககாது. ஏனென்றால் தாழ்ந்த ஜாதிகளுக்கென்று ப்ரத்யேகமாய் பள்ளிக்கூடங்கள் ஏறபடுத்தியிருக்கிறார்கள் என்பதனாலேயே, அந்த ஜாதிகள் தாழ்ந்தவைகளென்பதை ஊர்ஜிதப்படுத்தினதாகிறது அப்படிச்கில்லாமல் அந்தப பிள்ளைகளை ஸ்தலஸ்தாபனங்களின் ஆதரவில் நடந்துவரும் பள்ளிக்கூடங்களுக்கு அனுபபினால் இந்தக் குறை ஏற்படாது. ஒருதாழ்ந்த ஜாதிப்பையன் உயர்ந்த ஜாதிப் பிள்ளைகள் வாசிக்கும் வகுப்பில் சேர்ந்து, தான் படிப்பு விஷயத்தில் உயர்ந்த ஜாதிபபிள்ளைக்குத் தாழ்ந்தவனல்லவென்பதை யறிந்துகொண்டால், அவனிடம் தனமதிப்பு ஏற்படும். மேலும் அவனுடைய ஸகவாஸத்தால் உயர்ந்த ஜாதிபபையனுக்கும, அவன் தாழ்ந்த ஜாதிப்பையன் என்ற எண்ணமும் குறையக் கூடும். ஆகையால் இந்த விஷயங்களை மனதில்வைத்துக்கொண்டு, தாழ்ந்த ஜாதிபிள்ளைகளுககு கல்வி கற்பிப்பதை கவனித்து வரவேண்டும்.

## Prohibition of Varadakshina Practice.

வரதக்ஷிணை வழக்கத்தைத் தடுத்தல்.—வரதக்ஷிணை ஏற்பாட்டால் ஜனங்களுக்குப் பலவிதங்களில் ஸங்கடங்கள் ஏற்படுவதை உத்தேசித்து, பரோடா கவர்ன்மெண்டார் அந்த ஸமஸ்தானத்து சட்ட ஸபையில், வரதக்ஷிணை வாங்குவதும் கொடுப்பதும் கூடாதென்று ஒரு மசோதா கொண்டுவந்திருக்கிறார்களாம்.

# HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### To Soften Putty.

லப்பத்தை இளகவைக்க.—கண்ணாடிகளை ஜன்னல்கள் பீரோக்கள் முதலியவைகளில் ஒட்டவைப்பதற்கு உபயோகிக்கும் லப்பம் கெட்டியாகி உலர்ந்து போனால் அதை மறுபடியும் இளகச்செய்து, புதியது போல் உபயோகிக்கலாம். காய்ந்த லப்பத்தை உடைத்துத் தூளாக்கி, கொஞ்சம் லின்ஸீட் எண்ணெயைக் காய்ச்சி கலந்து அப்படியே சற்றுநேரம் வைத்திருக்கவும். பிறகு எண்ணெயையும் லப்பத்தையும் நன்றாய்க் கலந்து, வேண்டுமானால் இன்னும் கொஞ்சம் லின்ஸீட் எண்ணெயையும் சேர்த்து வேண்டியபதத்தில் எடுத்துக்கொள்ளவும். லப்பத்தில் கெட்டியான துண்டுகளில்லாதபடி எடுத்துவிடவும். லப்பத்தில் அதிக எண்ணெய் ஊற்றக்கூடாது. இல்லாவிட்டால் லப்பம் ரொம்ப நெகிழ்ந்திருக்கும். ரொம்ப நெகிழ்ந்திருந்தால் வொய்ட்டிங் என்னும் சுத்தமான சாக்கட்டியை (சீமைச் சுண்ணாம்பு) வேண்டிய அளவு சேர்த்துக்கொள்ளவும்.

### Preventing Rust on Iron.

இரும்பில் துருப்பிடிக்காம லிருக்க.—இரும்பு அல்லது உருக்கு ஸாமான்களில் துருப்பிடிக்காம லிருக்க வேண்டுமானால், கூச்சூக் ஆயில் என்னும் எண்ணெயை ஒரு ப்ளானல் துணியிலெடுத்து ஸாமான்களின்மேல் மெல்லிய படையாகத்தடவிக் காயவைத்தால் துருப்பிடிக்காது. ஸாமான்களை மறுபடியும் உபயோகிக்க அந்த எண்ணெயை எடுத்துவிடவேண்டுமானால், அந்த ஸாமான்களில் மறுபடியும் ஷை எண்ணெயைத் தடவி 12-மணி அல்லது 24-மணிநேரங்கழித்து ஜலத்தில் அலம்பி யெடுக்கவேண்டும். உருக்கு, இரும்பு, ஈயம் இவைகளால் செய்த ஸாமான்களின்மேல், பென்ஸைன்* என்னும் மருந்துகரைத்த ஜலத்தைத்தடவி வைத்திருந்தால் அவைகள் துருப் பிடிப்பதில்லை. உருக்கு ஸாமான்கள்வைக்கும் பெட்டிகளில் தாளிக்காத புதுச்சுண்ணாம்புக்-கற்களைப்போட்டுவைத்திருந்தாலும், ஸாமான்கள் கெடுதலடையா.

### Varnishing Brass Articles.

பித்தளையின்மேல் அரக்கு வார்னிஷ் பூசுதல்.—(1) ஸாமான்களின்மேல் அழுக்கு, எண்ணெய் பசை முதலியன இல்லாமல் செய்து கொள்ளவேண்டும்.

(2) நமது கைவிரல்களினால் தொடாமல் கயிறு அல்லது கம்பிகட்டியாவது, சிராமணத்தினாலாவது எடுக்கவேண்டும்.

(3) எப்போதும் சுத்தமான வெள்ளைத் துணியைக் கொண்டுதான் எடுத்தல், வைத்தல் வேண்டும்.

(4) ப்ரஷ் ஒரேமட்டமாக யிருக்கவேண்டும். இல்லையாயின் ஸமமாக பூசமுடியாது. ஆகையால், கத்திரிக்கோலால் மட்டமாக வெட்டிக்கொள்ளவேண்டும்.

(5) ப்ரஷின் நுனியால் வார்னிஷை தொட்டு ஒரே மாதிரியாக பூசவேண்டும்.

(6) வார்னிஷ் அதிக கெட்டியாகவிருந்தால் வேண்டிய அளவு ஸ்பிரிட் சேர்க்கவும்; தண்ணீரைப்போலிருந்தால் அடுப்பிலாவது வெய்யிலிலாவது வைத்து வறறச்செய்யவேண்டும்.

(7) வார்னிஷ் பூசப்பட்ட ஸாமான்களை உலருகிற வரையில் கையாளப்படாது.— விச்வகர்மகுலோபகாரி.

### Inflammation of the Face.

முகம் எரிச்சலெடுத்தல்.—முகம் எரிச்சலெடுத்து, வேர்க்குருக்கள் உண்டாகித்தோல் பொரிந்து போனால் பின்வருமாறு செய்யவேண்டும். பொடிசெய்த வெண்காரம் ½ ஔன்ஸ், ஸோடா மாவு 1 ஔன்ஸ், க்ளிஸரின் 1 ஔன்ஸ், பால் பட்டணம்படியால் ½ படி இவைகளைக் கலந்து தினம் இரண்டு முறை முகத்தில் தடவி வந்தால் எரிச்சல் நின்றுபோவதோடு தோல் பொரிவதும் நேராது. பாலுக்கு பதில் பன்னீரையும் சேர்க்கலாம்.

### Fastening Metals to Marble.

ஸலவைக்கல்லில் உலோகங்களைப் பொருத்த.—ஸலவைக்கல்லில் உலோகங்களைப் பொருத்துவதற்கு பின்வருமாறு ஸிமெண்டு (சாந்து) செய்து உபயோகிக்கலாம். 30 பாகம் ப்ளாஸ்டர் அப் பாரிஸ், பத்து பாகம் அரப்பொடி, ½ பாகம் நவச்சாரம், ஆகிய இவைகளை நன்றாய்க்கலந்து, நெகிழான பசையாக்குவதற்கு வேண்டிய அளவு அஸெக்டிக் ஆஸிட் த்ராவகத்தை விட்டுககலந்து பசையாக்கி, கலந்தவுடனேயே உபயோகிக்கவும்.

### Kerosine Oil.

கிரோஸினெண்ணெய்.—தலைமயிரில் பேன்பிடித்தால் அதற்குத் தலையில் வேண்டியவளவு கிரோஸின் எண்ணெயைத் தடவிவிட்டால் அப் பேன்கள் அழிந்துவிடும். இதற்கு இந்த எண்ணெயே சிறந்த ஔஷதமாகும்.—வைத்தியகலாநிதி.

# AGRICULTURE.

# விவஸாயம்.

## Sorghum as Cattle Fodder.

**சோளத்தைக் கால்நடைத் தீவனமாக உபயோகிப்பது.**—கால்நடைத் தீவனத்திற்காக சோளம் விதைக்க விரும்புகிறவர்கள் ஏகர் ஒன்றுக்கு 16 முதல் 20 பட்டணம்படி விதை விதைக்கலாம். கோயம்புத்தூர் விவஸாயப் பண்ணையிலும் கோயில்பட்டி விவஸாயப் பண்ணையிலும் கால்நடைத் தீவனத்திற்கு சோளப்பயிர் விதை எவ்வளவு விதைத்தால் நல்லது என்று பரீட்சை செய்ததில் 16 முதல் 20 பட்டணம்படி விதைத்தலே நலமென்றும், அதற்கு குறைவாயாவது அல்லது ஜாஸ்தியாயாவது விதைப்பது நஷ்டமென்றும் பரிஷ்காரமாய் தெரியவந்திருக்கிறது. விதைத்து 3 மாஸத்துக்குள் அறுவடை செய்வது நன்று. ஸாதாரணமாய் பூத்து விதைபிடிக்கும் ஸமயத்தில் அறுப்பது நல்லதென்று கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆனால் சிலவேளைகளில் சீதோஷ்ண மழைப் பருவ பேதங்களினால் சில தினுஸு சோளங்கள் விதைத்து 4 அல்லது 5 மாஸம்வரை பூக்கமாட்டா. இப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்களில் விதைத்த 3 மாஸத்துக்குள் அறுவடை செய்துவிடலாம். சோளப்பயிர் சரியானபடி வளருமுன் அதாவது 2 மாஸத்திற்குமுன் அதில் ஒருவித விஷஸத்து இருக்கிறது. அது முற்றினபின் வேறுவிதமாய் மாறிப்போகிறது. ஆகையால் இளம் சோளப்பயிரை மேய்ந்த மாடுகள் இறந்துபோவதுண்டு. பயிர் இளசாயிருக்கும்போது அறுத்து அதை காயப்போட்டுப்போட்டாலும் மாடுகளுககு மோசம் ஸம்பவிக்காதென்று சொல்லமுடியாது. ஆகையால் பயிர் $2\frac{1}{2}$ முதல் 3 மாஸமானபின் வெட்டி பச்சையாயாவது அல்லது காயவைத்தாவது உபயோகிப்பது நல்லது—

கிருஷிகன்.

## Taste of Rice.

**அரிசியின் ருசி**—சில அரிசிகளைச் சமைத்து சூடாயிருக்கும்போது சாப்பிட்டால் அவைநன் ருசியாயிருக்கின்றன வென்றும் சாதத்தில் ஜலம் விட்டு வைத்திருந்து பழையதாகச் சாப்பிட்டால் சாதம் வாய்க்கு நன்றாயிருப்பதில்லை யென்றும் தென்னிந்தியாவில் அநேகர் எண்ணிவருகிறார்கள். வடஇந்தியாவின் மறுபாகங்களில் ஜனங்கள் நெற்பயிருக்குப் பிண்ணாக்கு எருப்போட்டால் சாதம் நன்றாயிருப்பதில்லை யென்றும், அரிசியை முதல் நாள் இரவு சமைத்து சாதத்தை ஜலத்தில் போட்டுவைத்திருந்து மறுநாள் காலையில் சாப்பிட்டால், சாதத்தில் கெட்டருசியொன்று தெரிகிறதென்றும் சொல்லுகிறார்களாம். இதனால் சில விடங்களில் விவஸாயிகள் நெற்பயிருக்கு பிண்ணாக்கு எருபோட இஷ்டப்படுவதில்லையாம்.

வடக்கேயுள்ள ஒரு மாகாணத்தின் விவஸாய டிபார்ட்மெண்டார் இது விஷயமாக ஒரு பரீக்ஷைசெய்தார்கள். 24 பாத்திகளில் சிலவற்றில் பற்பலவித எருக்கள் போட்டும், சிலவற்றில் எருக்கள் போடாமலும், நெல்பயிரிட்டு, அவைகளிலிருந்து நெல் எடுத்து அரிசியாக்கி, ஒவ்வொரு பாத்தியரிசையையும் தனித்தனியாக ஒரு நாள் ராத்ரி சமையல் செய்து, பண்ணை வேலையாட்களுக்குப் போட்டார்கள். அவர்களுக்கு சாதத்தில் ஒருவித கெட்டருசியும் தெரியவில்லையாம். மேலும் வெவ்வேறு பாத்திகளிலிருந்து எடுத்த அரிசியின் சாதத்தில் ருசி யாதொரு வித்யாஸமும் தெரியவில்லையாம்.

## Groundnuts.

**வேர்க்கடலை.**—சென்ற 1913-ம் வர்ஷத்தில் ஜாவாவைச் சேர்ந்த ப்யூடன்ஸார்க் என்னும் ஊரில் நிலக்கடலை ஸம்பந்தமாக சில பரீக்ஷைகள் செய்தார்கள். அந்தப் பரீக்ஷைகளால் பின்வரும் விஷயங்கள் தெரியவருகின்றன. வேர்க்கடலைப் பயிரை, இலைகள் பசுமையாயிருக்கும்போது நிலத்தில் மடக்கி உழுதால், பிறகு அடுத்த பருவத்தில் பயிரிடும் நெல்லில் மாஸூல் அதிகமாகக் கிடைக்கிறதோடு நெல் பயிருக்குப் பிறகு ஸாகுபடி செய்யும் வேர்க்கடலையிலும் அதிக மாஸூலாகிறது.

(2) ஒரே நிலத்தில் இடைவிடாது வேர்க்கடலையைப் பயிர் செய்தால், அதற்கு வ்யாதி வருவது அரிது. வேர்க்கடலை வ்யாதியைத் தடுக்கக்கூடியதாக அவ்வளவு பலமடைந்துவிடுகிறது. நிலத்தில் செடிகள் இறந்துபோவதும் குறைந்துபோகும்.

# CO-OPERATION.

# கோவாபரேஷன்.

## Co-operative Societies and Agriculture.

கோவாபரேடிவ் ஸங்கங்களும் விவஸாயமும்.—வடக்கே ஐக்யமாகாணங்களில் கோவாபரேடிவ ஸங்கங்கள் விவஸாய ஸம்பந்தமாக விவஸாய டிபார்ட்மெண்டாருடன் ஒத்து வேலைசெய்து வருகின்றனவாம். விவஸாய வேலைகளுக்காகத் தனியாக கோவாபரேடிவ் ஸங்கங்கள் ஸ்தாபிப்பதில் அங்கேயுள்ள ஸங்கத்தார்களுக்கு இஷ்டமில்லையாம். ஸெண்ட்ரல் பாங்கிகள் க்ராம பாங்கிகளுககு பணம் கடன்கொடுத்து அவைகளை மேற்பார்வை பார்த்துவருவதால், ஸெண்ட்ரல் பாங்கிகளே ஸப்ளை ஸங்கங்கள் அதாவது ஸங்கத்துக்கு வேண்டிய ஸாமான்களை வாங்கிகொடுக்கும் ஸங்கங்களின் வேலைகளை மேற்கொள்வது ஸௌகர்யமாயிருக்கிறதாம். அங்கேயுள்ள பெரிய ஸெண்ட்ரல் ஸங்கங்களில் நான்கில் விதை டெபபோக்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஸெண்ட்ரல் ஸங்கங்கள் விவஸாய டிபார்ட்மெண்டாரோடு சேர்ந்துகொண்டு, தங்கள்கீழ் உள்ள ஸங்கங்களின் மெம்பாகளுக்குள் தெரிந்தெடுக்கப்பட்ட உயர்ந்த விதைகளைப் பரவச்செய்ய முயன்றுவருகின்றன. ஸெண்ட்ரல் ஸங்கங்கள் க்ராமஸங்கங்களுக்கு விதைகளை அனுபபுகின்றன. க்ராமஸங்கம் அதிலுள்ள மெம்பர்களில் வேண்டியவர்களுக்குக் கொடுத்து விதைக்க ஏற்பாடு செய்கிறது. அறுவடையான விதையை சேகரித்து அடுத்த வர்ஷம் விதை வேண்டும் மெமபர்களுக்கு விற்கிறார்கள்.

இவ்விதம் விவஸாய டிபார்ட்மெண்டின் முயற்சிகளுக்கு ஸங்கங்கள் உதவி செய்வதற்காக, ஷை டிபார்ட்மெண்டாரும், தங்கள் இன்ஸ்பெக்டர்களை ஸங்கங்களுக்கு அனுப்பி, விதை தெரிந்தெடுததல், பருத்தியில் விதையைப் பிரித்தெடுத்தல் முதலிய வேலைகளை விவஸாயிகளுக்குச் செய்து காட்டுவதில் உதவியாயிருககும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள்

கோவாபரேடிவ் ஸங்கங்களின் மானேஜர்கள் நிலங்களின் ஜலவஸதியை அபிவ்ருத்தி செய்வது விஷயமாக கவனம் செலுத்திவருகிறார்களாம். கிணறுகளில் அதிக ஜலம் வரும்படி செய்வதற்கு டிபார்ட்மெண்டார் போரிங் டிபார்ட்மெண்ட் ஸிப்பந்திகளை அனுப்புகிறார்கள். இரண்டிடங்களில் இஞ்ஜின் வைத்து ஜலமிறைப்பததற்கும் ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

## Nagpore Co-operative Dairy.

நாக்பூர் கோவாபரேடிவ் பால்சாலை—மத்ய மாகாணங்களின் முக்யபட்டணமாகிய நாக்பூரில் ஒரு கோவாபரேடிவ் பால்சாலை நடந்துவருவதாகத் தெரிகிறது. அதில் 13 இடையர்கள் மெம்பர்களாக இருக்கிறார்கள். அந்த ஸங்கத்துக்கு 131 கறவை மாடுகளும், 90 கன்றுகளுமிருக்கின்றன. ஒரு பாங்கி அந்தஸங்கத்துக்கு 2000 ரூபாய் கடன் கொடுத்திருக்கிறது. இதோடு மாஸந்தோறும் 100 ரூபாய் கடனுகவும் கிடைத்துவருகிறது. மாடுகளை ஸங்கத்தின் மேற்பார்வையில் கறந்து, பாலை மொத்தத்தில் வாங்கும் கண்ட்ராக்டருக்கு ரூபாய்க்கு $8\frac{1}{2}$ சேர் வீதம் விற்கிறார்கள். கண்ட்ராக்டர் பாலை ஜனங்களுக்கு ரூபாய்க்கு 6 சேர் வீதம் விற்கிறான். ஒரு வர்ஷகாலத்தில் அந்த ஸங்கம் மொத்தத்தில் 1383 மணங்கு பால் விற்றது. வர்ஷவரும்படி 6772 ரூபாய். மாட்டுத் தீனிச் செலவு முதலியவைகளுக்காக 3630 ரூபாய் செலவழிந்தது. ஆகவே கிடைத்தலாபம் 3141 ரூபாய். ஆனால் இந்த ஸங்கத்துக்குத் தீவனபபொருள்கள் ரொம்ப மலிவாகக் கிடைத்தன. மேலும் வேலைகளை மேற்பார்வை செய்தவர்கள் யாதொரு சம்பளமும் இல்லாமல் வேலை செய்தார்கள். கட்டிட வகையறாககளுக்கு என்ன செலவாயிற்றென்று தெரியவில்லை. இவைகளுக்குக் கொஞ்சம் தொகை குறைந்துபோகுமென்றாலும், ஸங்கத்துக்கு நல்ல லாபந்தானென்று தெரிகிறது

## Government Servants and Co-operation.

ஸர்க்கார் உத்யோகஸ்தர்களும் கோவாபரேஷனும்—கோவாபரேடிவ் டிபார்ட்மெண்டில் வேலையாயிராத ஸர்ககார் உத்யோகஸ்தர்கள் விவஸாயிகளுக்கல்லாத கோவாபரேடிவ் ஸங்கங்களிலும் ஸெண்ட்ரல் பாங்கிகளிலும் மெம்பர்களாகச் சேரலாம். ஆனால் அவர்கள் எந்த ஸங்கத்திலும், ஸெக்ரெடரி, ட்ரெஷரர் முதலான உத்யோகங்களை வகிக்கக்கூடாது. ஸங்கங்களின் நடவடிக்கைகளை நிர்வகிக்க ஏற்படுத்தப்பட்ட கமிட்டிகளிலும் மெம்பர்களாக இருக்கக்கூடாது. ஆனால் ஸர்க்கார் உத்யோகஸ்தர்களுககென்று ஏற்பட்டிருக்கும் ஸங்கங்களிலுள்ளவர்களுக்கு இந்த நிபந்தனை கிடையாது.

# COMMERCE.

# வ்யாபாரம்.

## Indigo Trade.

நீலி வ்யாபாரம்.—சென்ற பிப்ரவரி மாஸத்தில் டெல்லியில் நீலச்சாயக் கைத்தொழிலுக்கு உதவிசெய்வதைப்பற்றி ஆலோசிப்பதற்காக கவர்ன்மெண்டார் ஒருகான்பரென்ஸ் கூட்டினார்கள். அவுரி ஸாகுபடிக்கு உதவிசெய்யும் விஷயமாய் கவர்ன்மெண்டார் தங்களாலானமட்டும் உதவிசெய்து வருவதாகவும், அவுரி ஸாகுபடி ரொம்பவும் அபிவ்ருத்தியடையுமென்று வ்யக்தமாகத் தெரிகிறதாகவும் கான்பரென்ஸ் அபிப்ராயப்பட்டது. மிஸ்டர் ஹோவர்ட் என்னும் விவஸாய இலாகா உத்யோகஸ்தரும் அவரது மனைவியும் அவுரி விஷயமாய் அநேக புதிய விஷயங்களை ஆராய்ச்சி செய்து கண்டுபிடித்திருக்கிறார்கள். அவர்களுடைய ஆராய்ச்சிகளைப் பின்பற்றி ஸாகுபடிசெய்து, நல்ல விதைகளும் வேண்டியமட்டும் கிடைக்குமானால் அவுரி ஸாகுபடியில் அதிகசேதம் ஏற்படாதாம்; மாஸூலும் அதிகமாகக்கிடைக்குமாம.

நீலச்சாயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்வது விஷயமாகவும் ஷை கான்பரென்ஸ் ஆலோசித்தது. இப்போது தொழில்களுக்கு வேண்டியிருக்கிற நீலச்சாயத்தைவிட அதிகமாகக் கிடைக்கும்படி முயற்சி எடுத்துக்கொள்வதென்றால், அந்தச் சாயத்தை சுத்தம் செய்வதைப் பற்றியும், பற்பலவிடங்களில் செய்யப்படும் சாயத்தை ஒரே சீரான தன்மையுடையதாகச் செய்வதைப்பற்றியும், சாயத்தை எந்த விதத்தில் தயார்செய்து விற்றால் சாயத்தொழிலாளிகள் வாங்கக்கூடுமோ அந்த விதமாகத் தயார் செய்வதைப பற்றியும கவனித்துவர ஒரு ரஸாயன சாஸ்த்ரியை நியமிக்கவேண்டுமென்று ஷை கான்பரென்ஸ் அபிபராயபபட்டது. இதைப் பற்றி இந்தியா கவர்ன்மெண்டார் யோசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டில் விளையும் அவுரிச்சாய வ்யாபாரத்துக்கு என்ன ஸௌகர்யங்கள் செய்து கொடுக்கலாமென்பதைப் பற்றியும, இங்கிலண்டில் செய்யப்படும் செயற்கைச் சாயத்துககு என்ன வஸதிகள் செய்து கொடுக்கலா மென்பதைப் பற்றியும் அந்தக் கான்பரென்ஸ் கவனித்தது இவைகளைப் பற்றியும் இந்தியா கவர்ன் மெண்டார் கவனித்து வருகிறார்கள்.

## Business Enterprise in India.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.—இந்தியாவில் சென்ற ஜனவரி பிப்ரவரி மாஸங்களில் அடியில்கண்ட விவரபபடி கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| | ஜனவரி மாஸம் | ரூ. |
| 1 | இன்ஷூரன்ஸ் கம்பெனி | 20,000 |
| 4 | வ்யாபாரக் கம்பெனிகள் | 3,70,000 |
| 1 | பருத்தி மில் கம்பெனி | 5,00,000 |
| 1 | பருத்தி, ஜூட்பரெஸ் கம்பெனி | 3,00,000 |
| 1 | தேயிலைத் தோட்டக் கம்பெனி | 1,50,000 |
| 1 | ரப்பர் தோட்டக் கம்பெனி | 3,00,000 |
| 1 | நிலக்கரிச் சுரங்கக் கம்பெனி | 1,75,000 |
| 10 | | 18,15,000 |
| | பிப்ரவரி மாஸம் | |
| 2 | பாங்கி லேவாதேவிக் கம்பெனிகள் | 1,50,000 |
| 1 | ரெயில்வே கம்பெனி | 18,00,000 |
| 1 | கப்பல் கம்பெனி | 2,00,000 |
| 5 | வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர) | 14,80,000 |
| 1 | தேயிலைத் தோட்டக் கம்பெனி | 2,00,000 |
| 1 | நிலக்கரிச் சுரங்கக் கம்பெனி | 3,00,000 |
| 1 | சுரங்கக் கம்பெனி (மேலே சொன்னது தவிர) | 6,00,000 |
| 12 | | 47,30,000 |

## Composition for Bell Metal.

வெண்கலத்துக்கு சேர்மானம்—செம்பு 6 ராத்தல்; நிக்கல் 1-ராத்தல், இரண்டையும் சேர்த்து உருக்கிக் குளிர்ந்தவுடன், 1-ராத்தல் நாகமும், ¼-அவுன்ஸ அலுமினியமும் சேர்த்துருககவேண்டும். மறுபடியும் குளிர்நதவுடன மறுபடியும் உருககி அரை அவுன்ஸ் ரஸமும், 6-ராத்தல் உருக்கின செம்பும் கலந்துவிடவும். இப்படிசசெயத வெண்கலம் கொஞ்சங்கூடக் கருப்பதில்லையாம். இது அதிக கனமில்லாமல் லேசாயிருப்பதோடு, நாதம் ரொம்ப நன்றாயிருக்கிறதாம்.

வாதயமணிக்கு செம்பு 21-பாகமும வெள்ளீயம் 4-பாகமும் சேர்க்கவும்.

# ECONOMIC PRODUCTS.
# விலையுள்ள பொருள்கள்.

### New Uses for India-rubber.

**ரப்பருக்குப் புதிய உபயோகங்கள்.**—சிறிது காலத்துக்கு முன்னால்வரையில் ரப்பர் ரொம்பவிலை யுள்ளதாக இருந்ததால், அதை கைத்தொழில்களில் அதிகமாக உபயோகப் படுத்துவதற்கில்லாமலிருந்தது. இப்போது அதன்விலை ரொம்ப குறைந்திருப்பதால் அதைப் பலவிதங்களில் உபயோகிக்க முயன்றுவருகிறார்கள். ஸாதாரணமாக தோல் எந்த வேலைகளுக்கெல்லாம் உபயோகப்படுமோ அவைகளிலெல்லாம் ரப்பரை உபயோகிக்கலாம். ஜோடு, பூட்ஸுகளில் குதிகாலுக்கும், அடித்தோலுக்கும், ட்ராங்குகளுக்கும் தோலுக்கு பதிலாகவும் ரப்பரை விசேஷமாய உபயோகித்து வருகிறார்கள்.

பாய்கள், ஓடுகள் முதலியவைகளை இப்போது ரப்பரினால் செய்து மேல்நாடுகளில் வீடுகளில் உபயோகிக்கிறார்கள். ரப்பரை ரொம்ப கெட்டியாகவோ, அல்லது கொஞ்சம் மெதுவாகவோ செய்து வீடுகளில் தரையில் தளவரிசைக்கு உபயோகிக்கலாம. இந்த ரப்பர் தளவரிசைக்கு வார்னிஷ் பூசவேண்டிய அவசயமில்லை. எண்ணெய் பூசவேண்டியதுமில்லை. பாலிஷ் செய்தால் மாத்ரம் போதும். மரங்களின்விலை இப்போது ரொம்ப அதிகமாக இருப்பதால் ரபபர் உபயோகிப்பது ஸௌகர்யமாயிருககுமென்று சொல்லுகிறார்கள். தளவரிசைக்கு உபயோகிப்பதில் ரப்பரை அடிப்பாகத்தில் கெட்டியாகவும் மேற்பாகம் ம்ருதுவாகவும இருக்கும்படி தயார் செய்யலாமாம். இதனால் ரப்பரில் ஆணிகள் அடிப்பது ஸுலபமாயிருக்குமாம். இது விசேஷமாய் செருபபால் கெடுதலடையாது. காலஸ்திதி வேறுபட்டாலும் ஜலத்தாலும சுருங்காது; பருமனாகவும் ஆகாது. அதில் ஈரம் தங்காது. புழுப்பூச்சிகளும் அண்டமாட்டா. கரையான் தொல்லையுள்ள பரதேசங்களில் இந்த ரப்பர் தளவரிசை ரொமப ஸௌகர்யமானதாம். மேலும் கெட்டியான ரப்பரை, ஸாதாரண மரங்கள் ,போல அறுத்து, இழைத்து நாற்காலிகள், மேஜைகள், மற்ற மரஸாமான் முதலியவைகள் செய்யலாமாம். ஸாமான்களும் ரொம்ப நேர்த்தியாக இருக்கின்றனவாம. கெட்டி ரபபரை அறுக்கும்போது கிடைக்கும் ரமபத்தூளை தூர எறிந்துவிடாமல் மறுபடியும் ரப்பர் ஸாமான் செய்வதில் உபயோகிக்கலாம். மேலும் கெட்டி ரப்பர் ஸாமான்கள் கெடுதலடைந்துபோனால் அவைகளை மறுபடியும் கெட்டிரப்பராக மாற்றி புது ஸாமான்கள் செய்யலாம்.

படகுகள் செய்வதில ரப்பரை உபயோகிக்கலாமாம். மரத்தால் படகுகள் செய்தால், அவைகளை கடலில் போட்டு வைத்திருக்கும்போது, கடலிலுள்ள ஒரு ஜந்து மரத்தைக் குடைந்து நாசம் செய்துவிடுகிறது. அந்த ஜந்து ரப்பரை ஒன்றும் செய்வதில்லையாம்.

### A Substitute for Alpaca.

**ஆல்பாக்காவுக்கு பதில்.**—கொரியா தேசத்திலுள்ள ஒரு கவர்ன்மெண்ட் சாஸ்த்ர ஆராய்ச்சிசாலையில் ஆல்பாக்கா துணியைப்போல் உள்ள ஒரு போலித் துணி கண்டு பிடித்திருக்கிறார்களாம். இந்தப் போலி ஆல்பாக்கா செய்வதற்கு, பாவு நூலுக்கு டாஸ்ஸா பட்டும், தார்நூலுக்கு பருத்தி நூலும் உபயோகிக்கிறார்களாம். இந்த ஆல்பாக்கா கிட்டத்தட்ட ஸ்வயம் ஆல்பாக்காவைபபோல் ரொம்ப நேர்த்தியாயிருக்கிறதாம்.

### Banana Essence.

**வாழைப்பழஸத்து.**—மேல்நாட்டு சாஸ்த்ரியொருவர் வாழைப்பழத்திலிருந்து ஒருவித ஸத்து தயார் செய்திருக்கிறாராம். ஒரு பெரிய குலைவாழைக்காயை வெட்டிக்கொண்டுவந்து, பழுக்கவைத்து, பழங்களின் தோலுரித்துப்பிறகு அதில் நீராவியை விட்டு வ்யாபிக்கும்படி செய்து, அதிலிருந்து வாழைப்பழ ஸாரம தயார் செய்திருக்கிறாராம. இந்த ஸத்தை உபயோகித்தால் அது யாதொரு கெடுதியும் செய்யாதாம். அதை உபயோகித்து ஒரு வாஸனை பதார்த்தம் தயார் செய்துவருகிறாராம்.

### Saw Dust.

**ரம்பத்தூள்.**—ஸாதாரண ரம்பத்தூளிலிருந்து ரொம்ப உயர்ந்த அல்கஹால் சாராயம் தயார் செய்யலாம். 200 ராத்தல் ரம்பத்தூளிலிருந்து 5 பட்டணம்படி சாராயம் கிடைக்கும். மேல்நாடுகளில் பிர்ச் என்று ஒரு மரம் இருக்கிறது. அதை அறுக்கும்போது கிடைக்கும் ரம்பத்தூளில் சில ரஸாயனப் பொருள்களைக் கலந்து பக்வம் செய்து சர்க்கரை உண்டாக்கலாமாம்

இன்னும் விளையாட்டு பொம்மைகள் செய்வதில் ரமபத்தூளை உபயோகிக்கிறார்களாம்.

# BOYS' PAGE.

# பையன்கள் பக்கம்.

## Self Government in Schools.

**பள்ளிக்கூடங்களில் ஸ்வய ஆட்சி.**— அமெரிக்காவில் ந்யூயார்க் பட்டணத்திலுள்ள ஒரு பள்ளிக்கூடத்தில் பையன்களுடைய வ்யவஹாரங்களை விசாரித்துத் தீர்ப்புச்சொல்ல பையன்களைக் கொண்டே கோர்ட் ஏற்படுத்தியிருக்கிறார்களாம். பள்ளிக்கூடத்தின் தலைமை உபாத்யாயர் ஒரு ஸாமர்த்யமுள்ள பையனைத் தெரிந்தெடுத்து அவனுக்கு 'கமிஷனர் அப் போலீஸ்' உத்யோகம் கொடுக்கிறார். அந்த பையன் சில பிள்ளைகளைத் தெரிந்தெடுத்து இன்ஸ்பெக்டர் முதலிய சில்லரை உத்யோகஸ்தர்களாக ந்யமிக்கிறான். சில்லரை உத்யோகஸ்தர்கள் வேறு சில பிள்ளைகளைத் தெரிந்தெடுத்து 'போலீஸ் கான்ஸ்டபிள்'களாக நியமிக்கிறார்கள். மேலும் 'கமிஷனர்' பையன் விசாரணைக்கு வரும் கேஸுகளைப்பற்றி அபிப்ராயம் சொல்ல ஜூரர்களை நியமிக்கிறான். கேஸுகளை கமிஷனர் பையனே விசாரிப்பான். பையன்கள் இன்ன விதமாக நடந்துகொள்ள வேண்டுமென்பதற்கு உபாத்யாயர்களாவது, பையன்கள் கோர்ட்டாவது சில சட்டதிட்டங்கள் ஏற்படுத்துவார்கள். இந்த சட்டதிட்டங்களை கவனியாமல் நடக்கும் பையனை ஒரு 'போலீஸ் கான்ஸ்டபிள்' பையன் கண்டு பிடித்து விட்டால், உடனே 'கான்ஸ்டபிள்' சட்டத்தை மீறி நடந்த பையனுடைய பெயரையும் அவன் வாசிக்கும் வகுப்பையும் கேட்டு எழுதிக்கொண்டு, 'கமிஷனருக்கு'த் தெரிவிக்கிறான். 'கமிஷனர்' குற்றவாளிக்கு இன்ன நேரத்தில் அல்லது நாளில் விசாரணை நடக்குமென்று தெரிவிக்கிறான். குற்றவாளி தனது கேஸை நடத்த பையன்களுக்குள் ஒருவனை வக்கீலாகத் தெரிந்தெடுத்துக் கொள்ளலாம். குற்றவாளியைப் பிடித்த 'போலீஸ்காரனும்' ஒரு பையனை வக்கீலாக வைத்துக்கொள்வதோடு, தானும் கேஸ் நடக்கும்போது கோர்ட்டில் ஆஜராகவேண்டும். கேஸ் நடக்கும் காலத்தில் ந்யாயாதிபதி, ஜூரர்கள், வக்கீல்கள், சாக்ஷிகள் (யாராவது இருந்தால்), போலீஸ்காரன், குற்றவாளி, கேஸை கவனிக்க வருகிறவர்கள் ஆகிய பலபேர்கள் கோர்ட்டில் இருப்பார்கள்.

கோர்ட்டின் நடவடிக்கைகள் க்ரமமான கோர்ட்டின் நடவடிக்கைகளைப் போலவே யிருக்கும் வக்கீல்கள் தங்கள் கேஸைச் சொல்லிக்கொள்வதும், சாக்ஷிகளை குறுக்கு விசாரணை செய்வதும், ஜூரர்கள் குற்றவாளி குற்றஞ்செய்தானா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதுமாக எல்லா நடவடிக்கைகளும் நடக்கும். குற்றவாளி குற்றஞ் செய்ததாக ஏற்பட்டால் குற்றத்துக்குத் தகுந்தபடி தண்டனையடைவான். அவன் குற்றஞ் செய்யவில்லையென்று ஏற்பட்டால் போலீஸ்காரனை வேலையினின்று நீக்கி, வேறொரு பையனுக்கு அந்த வேலையைக் கொடுப்பார்கள்.

இந்த மாதிரி ஏற்பாட்டில் சில நன்மைகள் உண்டாகின்றன. மாஜிஸ்ட்ரேட் பையனுக்குத் தெளிவான புத்தியும், ந்யாய அன்யாயம் இன்னதென்று அறியும் சக்தியும் ஏற்படுகின்றன. பையன்கள் தாங்கள் போலீஸ்காரர்களாயிருப்பதனாலேயே இஷ்டப்படி செய்யக்கூடாதென்பதையறிந்து கொள்ளுகிறார்கள். உபாத்யாயர்களுக்கு தங்களுக்குக் கீழ்ப்படியாத பிள்ளைகளை தண்டிக்கும் ச்ரமம் குறைகிறது. பையன்களுக்கு தங்களைத் தாங்களே ராஜாங்கம்போல ஆண்டு அடக்கிவாவும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் பழக்கம் ஏற்படுகிறது.

## To Square a Number Ending in 5.

**5-ல் முடியும் எண்ணின் சதுரம் கண்டுபிடிக்க.**— 5-ல் முடியும் எண்ணைச் சதுரம் செய்தால் வரும் எண் 25-ல் முடியும். ஆகவே 5-ல் முடியும் எண்ணில் 5-க்கு பதிலாக 25-ஐப்போட்டுக் கொள்ளவும். பிறகு, 5-க்கு முன் எண்ணை அதைவிட உயர்ந்த அடுத்த எண்ணால் பெருக்கி 25-க்கு முன்னால் எழுதிக்கொள்ளவும். விடை சரியாயிருக்கும்.

$$75 = (7 \times 8)\ 25 = 5625$$
$$95 = (9 \times 10)\ 25 = 9025$$
$$115 = (11 \times 12)\ 25 = 13225$$

## A City on Piles.

**ஸ்தம்பங்களின் மேல் கட்டப்பட்ட நகரம்**— சிங்கப்பூருக்குக் கிழக்கே போர்னியோ என்றொரு தீவு இருக்கிறது. அந்தத் தீவில் ப்ரூனி என்றொரு சிறு ராஜ்யமிருக்கிறது. அந்த ராஜ்யத்தின் முக்ய பட்டணமாகிய ப்ரூனி யென்பது லிம்பாங் எனனும் நதி மேல் கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பட்டணத்தில் தெருக்களெல்லாம் வாய்க்கால்களே. அதோடுகூட கட்டிடங்கள் எல்லாம் ஜலத்தில் கெடாத ஒருவகைப் பனையின் அடிமரங்களை பூமியில் நிறுத்தி அவைகளில் கட்டப்பட்டவைகள்.

# LADIES' PAGE.

## ஸ்த்ரீகள் பக்கம்.

### Milk for Babies.

**குழந்தைகளுக்குப் பால்.**—ஒருவயஸுக்குள்பட்ட குழந்தைகளுக்கு முலைப்பால் கொடுக்கமுடியாமல் இதர பால்வகைகள் கொடுக்கவேண்டி யிருந்தால் அவைகளை அப்படியே ஸ்வயமாகக் கொடுக்ககூடாது. முதல்மாஸத்தில் இரண்டு தேயிலைக் கரண்டிபாலுடன் 2½ தேயிலைக்கரண்டி பார்லிக்கஞ்சியைககலந்து கொடுகக்வேண்டும் இரண்டாவது மாஸத்தில் இரண்டையும் ஸம அளவில் சேர்த்துக்கொடுக்கலாம். ஒவ்வொன்றிலும் 3-தேயிலைக்கரண்டியளவு சேர்க்கவேண்டும். மூன்றாவது மாஸத்தில் 5 தேயிலைக்கரண்டி பாலோடு 4 தேயிலைக்கரண்டி பார்லிக்கஞ்சியைச் சேர்ததுக் கொடுக்கவேண்டும். இந்த அளவு தேகஸௌக்யமுள்ள குழந்தைகளுக்காகும்.

பார்லிக்கஞ்சிசெய்யும் விதம் பின்வருமாறு. 2 தேயிலைக்கரண்டி பார்லிமாவில் ஒரு 'சிமிட்டா' உப்புப் போட்டு ஜலம்விட்டுபபிசைந்து கெகிழ்பதத்தில் எடுத்து, பட்டணம்படியால் கால்படிஜலததில் கரைத்து, அதை மோவடிகட்டும் தகரத்தில் வடிகட்டியெடுத்து ஒரு எனேமல் பாதரத்தில்விட்டு கால்மணிநேரம் கொதிக்கவிடவும். அது ஆறினபிறகு அதன் மேல்பாகத்தில் ஏடுபோல்வருவதை யெடுத் தெறிந்துவிட்டுப் பிறகு உபயோகிக்கவும்.

பல்முளைக்காத குழந்தைகளுக்கு பாலைத்தவிர வேறு ஆகாரம் ஒன்றும கொடுக்கக்கூடாது பால் 95 டிக்ரி சூடுள்ளதாக இருக்கவேண்டும. குழந்தை பால்குடிக்கும குப்பியை (பாட்டில்) எப்போதும சுத்தமாய் வைத்திருக்கவேண்டும். இரண்டு குப்பி வைத்துக் கொள்வது நல்லது. ஒன்று உபயோகத்திலிருக்கும் போது இன்னொன்றை போரிக் ஆஸிட்கலந்த குளிர்ந்த ஜலத்தில் போட்டுவைத்திருப்பது நல்லது.

### Turmeric.

**மஞ்சள்.**—ஸாதாரண மஞ்சளைச் சூர்ணம்செய்து சிறிது சுண்ணாம்பு கலந்து சுளுக்கு, நசுங்கிப்போன அங்கம், நோயுள்ள புண்கள் இவைகளின் மேல் தடவி, கம்பளி அல்லது ஸல்லாத்துணியைப்போட்டு கட்டி வைப்பது நல்லது. ஸாதாரணமாய் கண்நோய்கள் உண்டானபோது இதைக் கஷாயமிட்டு, சுத்தமாய் வடிக்கட்டி நேத்ரங்களை அலம்பி வந்தால் நோய் குணமாவதுண்டு. மஞ்சளை சிறிதளவு பாலில் போட்டுக் காய்ச்சி, சர்க்கரையும் சேர்த்து, ஜலதோஷத்தில் உபயோகிப்பது வடதேசத்தில் பொதுவான வழக்கம்; அப்படிச் செய்வதால் சிறந்த குணம் உண்டாவதாகவும் தெரியவருகிறது. பீநஸரோகத்தில், இதன் கஷாயத்தை நஸ்யமாக உபயோகித்து வருவது நல்லது. இதன் சூர்ணத்தை நெய்யிலாவது, சோற்றுக் கற்றாழையின் ரஸத்திலாவது கலந்து உட்கொண்டால் இருமல் குணமாகும். ஒரு தோலா மஞ்சள் சூர்ணமும், ½ தோலா மிளகுபபொடியும் பாலில் சேர்த்து சுடச்சுட அதைப் பானம்பண்ணினால், ஜலதோஷத்தினால் நேரிடும் ஜ்வரம் நின்றுவிடும். மஞ்சளுடைய புஷ்பத்தை அரைத்து, தழுதணை அல்லது படர்தேமல்களுக்கும், சொரி சிரங்குகளுக்கும் போடலாம்.—

வைத்திய கலாநிதி.

### Pulses Flour.

**பருப்பு பொடி.**—உளுத்தம் பருப்பு அரையாழாக்கு; துவரம்பருப்பு மூன்றுழாக்கு; கடலைப்பருப்பு இரண்டாழாக்கு—இம்மூன்றையும் தனித் தனியாக வாணலியிற்போட்டு சிவந்து வாஸனை வருகிறமட்டும் வறுத்து எடுத்துக்கொள்ளவேண்டும். அரைக்கால் பலம் மிளகாய், முக்காற்பலம் உப்பு—இவற்றையும் வெவ்வேறாக வறுத்துக்கொண்டு, மேற்படி பருப்புகளுடன் சேர்த்துக்கலந்து கொஞ்சங் கொஞ்சமாய் இயந்திரத்திற்போட்டு அரைத்து வைத்துக்கொள்ளவும் இந்தப் பொடியில் கொஞ்சம் சாதத்திலிட்டு நெய்விட்டுக் கொண்டு சாபபிடலாம். பரியமானவர்கள் எலுமிச்சம் பழரஸத்தையும் பிழிந்து கொள்வதுண்டு.—விச்வகர்மன்.

### Covering Food Vessels.

**ஆகாரப் பாத்ரங்களை மூடிவைத்தல்.**—மலையாளம் ஜில்லா சௌகாட்டில் ஒரு நாயர் ஸ்த்ரீ சமையல் பாத்ரஙகளை மூடிவைக்காத பிசகினால் ஒரு பானையில் பல்லி இனத்தைச் சேர்ந்த ஒரு விஷஜந்து விழுநது இறந்துபோக அதன்விஷம் சாபபாட்டில் கலந்திருந்தது. அதை அறியாமல் அந்த ஸ்திரீயும், அவள் புருஷனும் இரண்டு குழந்தைகளும் அந்த ஆகாரத்தை சாப்பிட்டு இறந்துபோனார்களாம். ஒவ்வொரு ஸ்த்ரீயும சமையலானதை மூடிவைப்பதில் ரொம்ப கவனமாக இருக்க வேண்டும்.

# INDIANS ABROAD.

## இதர தேசங்களில் இந்தியர்கள்.

### Indians in Canada.

**கனடாவில் இந்தியர்கள்.**—அமெரிக்காவின் ஒரு பாகமாகிய கனடாதேசத்துக்கு இந்தியர்கள் முதன் முதலாக 1905-ம் வர்ஷம்போய்க் குடியேற ஆரம்பித்தார்கள். முதல்வர்ஷத்தில் 6000 இந்தியர்கள் அந்த தேசத்தில் போய்க் குடியேறினார்கள். ஆனால் இப்போது 4500 இந்தியர்கள் தான் இருக்கிறார்கள். அவர்கள், கனடாவின் மேற்கு மாகாணமாகிய ப்ரிட்டிஷ் கொலம்பியாவில் விசேஷமாய் வஸித்து வருகிறார்கள். அவர்களில் மூன்று பேர்கள் தவிர மற்ற எல்லாரும் ஆண்களே. அந்த மூன்று ஸ்த்ரீகளும் குடியேறுவதற்கு தயாவிஷயமாக கனடா கவர்ன்மெண்டார் அனுமதி கொடுத்தார்கள். அங்குள்ள இந்தியர்களில் நூற்றுக்கு 90 பேர்கள் ஸிக்கியர்கள். அவர்கள் தொழில் சாலைகளில் கூலியாள்களாகவும், விவஸாயிகளாகவும் இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய விடாமுயற்சியாலும், ஊக்கத்தாலும் பொருள் ஸம்பாதித்து, பத்து வர்ஷ காலத்துக்குள்ளாக $2\frac{1}{4}$ கோடி ரூபாய் முதலுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

இந்தியர்கள் கனடாவில் குடியேறுவதால் அங்கேயுள்ள வெள்ளைக்காரக் கூலியாள்களுக்குக் கஷ்டம் ஏற்படுமென்று சில கனடா வாஸிகள் நினைத்து, இந்தியர்கள் குடியேறுவதைத் தடுக்க சட்டம் செய்ய வேண்டுமென்று முயற்சி செய்து வந்தார்கள். 1910-ம் வர்ஷத்தில் ஆச்யாவாஸிகளின் குடியேற்ற விஷயமாக ஒரு சட்டம் செய்யப்பட்டது. கனடாவுக்குக் குடியேற வருகின்றவர்கள் தங்களுடைய ஸொந்த தேசத்திலிருந்து நடுவில் தங்காமல் ஒரே டிக்கட்டாக வைத்துக்கொண்டு நேர் ப்ரயாணமாக வரவேண்டுமென்றும், ஒவ்வொரு ப்ரயாணியும் கையில் 600 ரூபாய் வைத்திருக்கவேண்டுமென்றும் அந்தச் சட்டத்தில் விதித்தார்கள். இந்தச் சட்டம் சீனவாஸிகளையும் ஜப்பானியர்களையும் பாதிக்கிறதில்லை. ஏனென்றால் அவர்களுடைய தேசத்திலிருந்து நேராகக் கனடாவுக்குப் போகக் கப்பல் கம்பெனிகள் இருக்கின்றன. இந்தியாவிலிருந்து கனடாவுக்கு நடுவில் தங்காமல் ப்ரயாணம் செய்வதற்கேற்றதாக கப்பல் போக்குவரத்துக் கிடையாது. இதனால் இந்தியர் கனடாவில் குடியேறுவது முடிவதில்லை மேலும் சீன ஜப்பான் தேசங்களுக்கும் கனடாவுக்கும் ஏற்பட்டிருக்கும் உடன்படிக்கைகளால் சீனர்களும் ஜப்பானியர்களும் குடியேறுவதற்கு தடையேற்படுவதில்லையாம். வர்ஷந்தோறும் 400 ஜப்பானியர்கள் கனடாவில் குடியேறுகிறார்கள். இவர்கள் ஆளுக்கு 200 ரூபாய் கையில் ரொக்கமாகவோ அல்லது பத்ரங்களாகவோ வைத்திருந்தால் போதுமாம். சீனர்களோ தலைக்கு 1500 ரூபாய் வீதம் வரி கட்டினால், எத்தனைபேர்கள் வேண்டுமென்றாலும் கனடாவில் குடியேறலாம். சீனர்களும் ஜபபானியர்களும் தங்கள் மனைவி மக்களையும் தங்களுடன் அழைத்துக் கொண்டுபோகலாமாம் இந்தியர்களோ தங்கள் மனைவி மக்களை அழைத்துக்கொண்டு போகமுடியாது.

இவ்விதம் குடியேற்ற நாடுகள் இந்தியர்கள் குடியேற்றத்தைத் தடுக்க சட்டங்கள் செய்வதால் வேறு விதங்களிலும் கெடுதல்கள் ஏற்படுகின்றன. குடியேற்ற நாடுகளைப் பார்த்து, போர்த்துகலுக்கு ஸொந்தமான கிழக்கு ஆப்ரிக்கா கவர்ன்மெண்டார், அமெரிக்கா ஐக்யமாகாண கவர்ன்மெண்டார் முதலியவர்கள் இந்தியர்கள் அந்த தேசங்களில் குடியேறுவதைத் தடுப்பதோடு, ரொம்ப ஹீனமான நிபந்தனைகளும் ஏற்படுத்துகிறார்களாம்.

சென்ற ஸெப்டம்பர் மாஸம் 8-ந்தேதி கூடிய இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் வைஸ்ராய் லார்ட் ஹார்டிஞ்ஜ், ப்ரிட்டிஷ் குடியேற்ற நாடுகளில் இந்தியர்கள் குடியேறுவது விஷயமாய் அவைகளோடு பரஸ்பர ஏற்பாடுகள் செய்வதைப்பற்றி அந்தந்த கவர்ன்மெண்டுகளோடு பேச்சுகள் ஆரம்பிக்க வேண்டுமென்றும், சில காலமாக குடியேற்ற நாடுகள், இந்தியா கவர்ன்மெண்டின் விருப்பத்துக்கு இணங்கிபோக ஸம்மதப்படுவதாய்த் தெரிய வருகிறதென்றும் சொன்னார். மேலும் இந்த யுத்தத்தால் குடியேற்ற நாடுகள் இந்தியர்கள் விஷயத்தில் அதிக அனுதாபம் காட்டி வருவதாகவும் தோன்றுகிறது. இவைகளால் கூடிய சீக்ரம் குடியேற்ற விஷயம் திருப்திகரமாக முடிவு பெறுமென்று எதிர்பார்க்கலாம்.

### Emigration from South India.

தென்னிந்தியர்கள் வெளிநாட்டுக்குப் போவது.—சென்ற 1913-ம் வர்ஷத்தில் தென்னிந்தியாவிலிருந்து 1,17,783 இந்தியர்கள் பினங்கு, சிங்கபூர், மலேநாடுகள் முதலியவைகளுக்குப் போனார்கள்; 1,90,059 பேர்கள் லங்கைக்குப்போனார்கள். 1,30,725 பேர் பர்மாவுக்குப் போனார்கள்.

## FUN AND ANECDOTE.

## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### A Clever Dog.

ஒரு ஸாமர்த்யமுள்ள நாய்.—யுத்தகளத்தில் காயமடைந்தவர்களை தூக்கிக்கொண்டுவந்து சிகித்ஸைகள் செய்வதற்கு சில ஜனங்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்களோடு, இந்தவேலைகளுக்கு உதவியாக நாய்களும்இருக்கின்றன இந்த நாய்கள் காயம்பட்டவர்களுக்குப் பலவிதங்களில் உபகாரம் செய்கின்றனவாம். ஒரு ஸோல்ஜர் ஒரு சண்டையில் காயமடைந்து கீழே வீழ்ந்துவிட்டான். குண்டின்துண்டு ஒன்றால் அவனது கையில் காயம் ஏற்பட்டிருந்தது. ஒரு சிறுகுண்டு அவனது தாடையைத்துளைத்துப் போயிருந்தது அவனது தலையில் ஒரு பெரிய வெட்டுக்காயம் இருந்தது. போதாக்குறைக்கு அவன்மேல் இறந்துபோன ஸோல்ஜர்கள் வீழ்ந்து கிடந்தார்கள். அவன் முக்கால்வாசியும் பிணக்குவியலால் மூடப்பட்டிருந்தான். அவன் என்ன செய்வது என்று ஏங்கியிருக்கையில் ஒருநாய் அவனது முகத்தை நக்கிற்று. அது வைத்ய டிபார்ட்மெண்டைச் சேர்ந்ததென்று அறிந்து, அவன் அதனிடம் ‘நீ போய் எனது தோழர்களை யழைத்துவா’ என்றான். உடனே அந்த நாய் அவன் சொல்லை யறிந்து காம்புக்குப் போய குலைத்து காயம்பட்டவர்களைக் கொண்டுவர ஏற்பட்டவர்களுடைய சட்டைகளைப்பிடித்திழுத்தது. அதன்மேல் அவர்கள் நாயின் பின்னேடு காயம்பட்ட ஸோல்ஜர் இருந்த இடத்துக்குப்போய் அவனை வைத்யசாலைக்கு எடுத்துப்போனார்கள். அந்த நாயின் உதவி இல்லாவிட்டால் அவன் பாடு கஷ்டந்தான்.

### Counting the Stars.

நக்ஷத்ரங்களை எண்ணினது.-ஷுஜாடௌலா என்னும் நவாப வகுகாளத்தை யாண்டுகொண்டிருந்தபோது, அவர் ஒருநாள வானத்தில் நக்ஷத்ரங்கள் எத்தனையிருக்கின்றனவென்று அறிய எண்ணி தமது அரண்மனை மௌல்விகளை (மகமதிய வித்வான்கள்) கூப்பிட்டு, நக்ஷத்ரங்களை எண்ணச்சொன்னார். ஆனால் அவர்கள் தங்களால் எண்ணமுடியாதென்றும், ஹிந்து வித்வான்களால் முடியுமென்றும் சொன்னார்கள். ஏனென்றால் மகமதியர்கள் இறந்தபின் புதைக்கப்படுவதால், அவர்களுக்கு பூமிக்குக கீழேயிருக்கும் விஷயங்களை அறியத்தான் சக்தியுண்டேயொழிய வானத்திலுள்ளவைகளை அறிய சக்தியில்லையென்றும், ஹிந்துக்களை இறந்தபின் எரித்துவிடுவதால் அவர்கள் புகையோடு மேலே போவதால் அவர்களுக்கு மேலுலகத்து விஷயங்களையறிய சக்தியுண்டென்றும் சொன்னார்கள். இந்த ந்யாயத்தை ஏற்றுக்கொண்ட நவாப அப்போது நதியாவில் தமக்குக் கீழ்ப்பட்டு ஆண்டுகொண்டிருந்த க்ருஷ்ண சந்த்ர மகாராஜா என்னும் ஒரு சிற்றாசருக்கு ஒரு கடிதம் அனுப்பி, அதில், நக்ஷத்ரங்களை எண்ணக்கூடிய தேர்ந்த ஹிந்து பண்டிதர்களை அனுபபவேண்டுமென்றும், அப்படி அனுப்பாவிட்டால் அவருடைய ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொள்வதோடு அவரையும் ஜெயிலில் போட்டுவிடுவதாகவும் தெரிவித்திருந்தார். இதைப்பார்த்த க்ருஷ்ண சந்த்ரர் இன்னசெய்வதென்று தெரியாமல் விசாரப்பட்டுக்கொண்டிருக்கையில், அவருடைய விகடகவி தானே நவாப்பினிடம் போய் நக்ஷத்ரங்களை எண்ணிக் கொடுத்துவருவதாகச் சொல்லி, தமது அரசரிடம் விடைபெற்று நவாப்பினிடம் வந்து ஒரு வாரகாலமும், சில ரீம் கடுதாசிகளும் கொடுத்தால் நக்ஷத்ரங்களை எண்ணிச் சொல்வதாகச் சொன்னான். நவாப் அதற்கு ஸம்மதப்படவே, விகடகவி கடுதாசிகளை வாங்கிக்கொண்டு போனான். ஒருவாரம் சென்றதும் நவாப் ஒரு பெரிய தர்பார் நடத்தி, அதில் விகடகவியை தனது நக்ஷத்ரக்கணக்குகளைத் தெரிவிக்கச் சொன்னார் விகடகவி பற்பல ரூபங்களும் கணக்குகளும் குறித்திருந்த கடுதாசிகளை ஸபையில் விரித்துப்போட்டுக்கொண்டு, ஆகாயத்திலுள்ள நக்ஷத்ரங்களின மொத்த ஸங்க்யை 31,74,45,993-என்றான். ஸபையிலிருந்த சில மௌல்விகள் கணக்குகள் ஸரியில்லை யென்று வாதித்தார்கள். அதற்கு விகடகவி, “வேண்டுமானால் நீங்களே நக்ஷத்ரங்களை எண்ணிப்பாருங்கள். ஸரியாயிருக்கும். இல்லாவிட்டால் என்ன தண்டனை விதித்தாலும் ஏற்றுக்கொள்கிறேன்” என்றான்.

### The Reason.

காரணம்.—ஓர் பெரியவர்—ஏ பையா! இங்கே வா. (பையன வருகிறான்).—உனக்கு இன்னம் கல்யாணமாகவில்லையே.

பையன்.—இல்லையே!

பெரியவர்—ஏன் ஆகவில்லை! (யோசிக்கிறார்) உன் பெயரென்ன?

பையன்.—என் பெயர் கணபதி.

பெரியவர்.—சரிதான். அதுதான்கல்யாண மாகவில்லை எனனடா அப்பா என்று யோசித்தேன்.

# CURIOSITIES.
## விநோதங்கள்.

### Making Trees Bear Fruit.

மரங்களைக் காய்க்கச் செய்தல்.—வடக்கே பஞ்சாபிலுள்ள ஒரு ஊரில் ஒரு கனவானுக்கு ஒரு தோட்டமிருக்கிறது. அதில் பல மாமரங்கள் இருக்கின்றன. அவைகளில் ஒன்று மாத்ரம் பத்துவருஷகாலமாக ஒன்றும் காய்ப்பதில்லை. அவருடைய ஸ்நேகிதர் ஒருவர் அந்த மரம் காய்ப்பதற்குப் பின்வருமாறு செய்யவேண்டுமென்று சொன்னாராம். மரத்துக்குடையவர் ஒரு கூலியாளுடன் மரத்தடியில் போய், மரம் காய்க்கவில்லையாதலால் அது தோட்டத்திலிருப்பது ப்ரயோஜனமில்லையென்று சொல்லி, மரத்தைக் கோடரியால் வெட்டித் தள்ளும்படி கூலியாளுக்கு உத்தரவிடவேண்டும். கூலியாளும் மரத்தில் இரண்டொரு வெட்டுக்கள் வெட்டவேண்டும் உடனே இன்னொருவர் அங்கே வந்து மரத்துக்காகப் பரிந்து பேசுபவர் போல, ஒருவர்ஷ காலம் வெட்டாமலிருக்கவேண்டும், அப்பொழுதும் காய்க்காவிட்டால் மரத்தை வெட்டி விடலாமென்று சொல்லித் தடுக்கவேண்டும். மரத்தின் சொந்தக்காரர், "உம்முடைய சிபார்சுக்காக அதை இப்போது வெட்டாமல் விடுகிறேன். அடுத்த வர்ஷம் அது காய்க்காவிட்டால் அதை நிச்சயம் வெட்டி விடுவேன்." என்று சொல்லவேண்டும் மேல் சொன்ன கனவான் சென்ற டிஸம்பர் மாஸம் இந்தப்படியே செய்தார். பிறகு ஜனவரி மாஸத்தில் ஒருநாள் தோட்டத்திற்குப்போய் அந்த மரத்தண்டை நின்று மரத்தோடு பேசும் பாவனையாய், மரத்தைக்கூப்பிட்டு, இந்த வர்ஷம் காய்க்காவிட்டால் அதை வெட்டிவிடுவேனென்றும், அந்த விஷயம் மரத்துக்கு ஞாபகமிருக்கட்டுமென்றும் சொன்னார். அடுத்த மார்ச்சு மீ அந்த மரம் பூத்துக் காய்க்க ஆரம்பித்ததாம். மரம் காய்த்ததற்கு அவர் செய்த முறைதான் காரணமா அல்லது வேறு எந்தக் காரணத்தாலாவது அது காய்த்ததா என்று நிச்சயமாய்ச் சொல்லுவதற்கில்லை. இருந்தாலும் காய்க்காத பழமரங்கள் உள்ளவர்கள் இப்படிச் செய்துபார்ப்பது நல்லது என மேற்சொன்ன கனவான் தெரிவிக்கிறார்.

### Virilism in a Woman.

ஒரு ஸ்த்ரீயினிடம் புருஷத்தன்மை.—ப்ரான்ஸில் ஒரு ஸ்த்ரீக்கு முகமும் கைகளும், புருஷர்களுடைய முகம், கைகள்போல விருக்கின்றனவாம். அவளுக்கு இப்போது வயஸு 62-ஆகிறதாம் அவளுடைய 50-வது வயதில், அவளுக்கு ஒரு வ்யாதி உண்டாகி, தேகத்தில் சில அங்கங்கள் மாறுபாடு அடையலாயினவாம். அதுமுதல் அவளுடைய புஜங்களிலும், தொடையிலுமுள்ள தசைநார்கள் மனிதர்களுக்கு உள்ளவைபோல பருமனாகவும், பலமாகவும் ஆய்விட்டனவாம். அவளுடைய தோள்கள் விசாலமாக ஆயிருக்கின்றனவாம் அவள் தலையில் மயிர் உதிர்ந்துபோனதோடு அவளுக்கு தாடி வளர்ந்து இடுப்புவரையில் தொங்குகிறதாம். அவள் ரொம்ப தேக பலமுள்ளவளாயிருக்கிறாளாம் வைத்யர்கள் இந்த மாறுபாட்டிற்குக் காரணம் சொல்ல முடியவில்லை.

### Shell Explosions and Loss of Senses.

குண்டுகள் வெடிப்பதும் இந்த்ரியங்கள் கெட்டுப்போவதும்.—ஐரோப்பாவில் நடக்கும் யுத்தத்தில் சில ஸோல்ஜர்களுக்கு அருகில் குண்டுகள் வெடிப்பதால் ருசியறியும் சக்தியும், வாஸனையறியும் சக்தியும் போய்விட்டனவாம் ஸாதாரணமாக குண்டுகளின் சத்தத்தால் காதுகேட்காமல் போவதுண்டென்று சொல்வது ஸகஜம்; ஆனால் இவர்களுக்கு காது நன்றாய்க் கேட்கிறதாம். அவர்களுக்கு தேகத்தில் குண்டுகளால் காயமொன்றும் ஏற்படவில்லையாம் ஒரு ஸோல்ஜருக்கு ஒரு மூக்கில் உணர்ச்சியற்றுப் போயிருக்கிறதாம். மேலும் அவனுக்கு சர்க்கரை, க்வினைன், த்ராவகம், உப்பு இவைகளின் ருசி தெரியவேயில்லையாம்.

### Praying for Rain.

மழை பெய்வதற்காக பூஜை செய்தல்.—ஹிந்துக்கள், மழைபெய்யாவிட்டால் மகாபாரதத்தில் விராடபர்வம் வாசித்து அர்த்தம் சொல்லச் செய்து கேட்பது வழக்கம். விராடபர்வம் வாசித்தால் மழைபெய்யுமென்பது ஹிந்துக்களில் அநேகருடைய கொள்கை. அரபியர்கள் மழை பெய்யாவிட்டால் எருக்கஞ் செடியையும் சாலா எனனும் செடியையும் பசுவின் வாலில்கட்டி அதற்கு நெருப்புவைத்து பசுக்களை மலைகளுக்கு ஓட்டிக்கொண்டுபோய் கடவுளைத் தொழுவார்களாம்.

### Four Children in a Birth.

ஒரு ப்ரஸவத்தில் நான்கு குழந்தைகள்.—திருவாங்கூரைச் சேர்ந்த கருநாகப்பள்ளி யென்னும் ஊரில் ஒரு ஸ்த்ரீ ஒரே தடவையில் 4-குழந்தைகளைப் பெற்றாளாம் அவற்றில் இரண்டு பிறந்த சிறிது நேரத்துக்கெல்லாம் இறந்து போயின. மற்ற இரண்டும் ஸௌக்யமாயிருக்கின்றனவாம். ஆனால் இவை இரண்டும் ரொம்ப கனமாக இருக்கின்றனவாம்.

# MISCELLANEOUS NEWS.

## நாநா ஸங்கதி.

### Alleged Misconduct of A European Lady.

ஒரு ஐரோப்பிய ஸ்த்ரீயின் விபரீத நடத்தை.—ஸமீபத்தில் வட இந்தியாவில் ஒரு வக்கீல் இரண்டாவது வகுப்பு வண்டியில் ப்ரயாணம் செய்துகொண்டிருந்தார். முதலில் அவர் ஏறியிருந்த அறையில் வேறொரு ப்ரயாணியும் இல்லை. சிறிது நேரத்துக்கெல்லாம், ஒரு ஐரோப்பிய ஸ்த்ரீ அந்த அறையில் ஏறி உட்கார்ந்தாள். வக்கீல் ஒரு கேஸில் கிடைத்த தமது பணத்தை தாம் உட்கார்ந்திருந்த ஆஸனத்தில் வைத்து எண்ணிக்கொண்டிருந்தார். பணத்தாசையால் மேற் ஸ்த்ரீ வண்டி புறப்பட்டவுடன் அந்தப் பணத்தைத் தனக்குக் கொடுத்துவிட வேண்டுமென்றும், இல்லாவிட்டால் அபாயச் சங்கிலியை யிழுத்து வண்டியை நிறுத்தி தன்னை மானபங்கம் செய்ய முயன்றதாகக் கேஸ் கொண்டுவருவதாகவும பயமுறுத்தினாள். வக்கீல் அதற்கு யாதொரு பதிலும் சொல்லவில்லை. அந்த ஸ்த்ரீ மறுபடியும் பயமுறுத்தினாள். வக்கீல் ஒன்றும் கவனியாதவர்போல் சும்மாவிருந்தார். பிறகு அந்த ஐரோப்பிய ஸ்த்ரீ எழுந்து அபாயச் சங்கிலியண்டைபோனாள். உடனே வக்கீல் அவளிடம்போய் என் சங்கிலியை இழுக்கவேண்டுமென்றும, தமக்குக் காது கேட்காததால், இன்னவேண்டுமென்பதை எழுதிக்கொடுத்தால், வேண்டிய உதவியைச் செய்வதாகவும், சொன்னார். அவள் உடனே தான் முதலில் சொன்னவற்றை ஒரு கடிதத்தில் எழுதிக்கொடுத்தாள். வக்கீல் அதை வாங்கிக்கொண்டு, அவள்மேல் கேஸ் கொண்டுவருவதாகச் சொல்லி, அடுத்த ஸ்டேஷனில் போலீஸாரிடம விஷயங்களைத் தெரிவித்தார். கேஸ் நடந்துகொண் டிருக்கிறதென்று தெரிகிறது.

சில வர்ஷங்களுக்கு முன்னால் கல்கத்தாவுக்குப் பக்கத்தில் இதுபோன்ற ஸம்பவம் ஒன்று நடந்ததாம். பாபு மோஹிய சந்த்ர பால் என்ற டெபுடி மாஜிஸ்ட்ரேட் கல்கத்தாவுக்குப் பக்கத்திலுள்ள ப்ராஸட் என்னும் ஊரில் வேலையாயிருந்தார். அவர் ஒரு சனிக்கிழமையன்றையதினம் சம்பளம் வாங்கிக்கொண்டு, கல்கத்தாவுக்குப புறப்பட்டுப்போனார். டம் டம் ஸ்டேஷனுக்கு வரும்வரையில் அவர் ஏறியிருந்த வண்டியில் அவரைத் தவிர வேறொரு ப்ரயாணியும் இல்லை. டம் டம் ஸ்டேஷனில் ஒரு ஐரோப்பிய ஸ்த்ரீ அந்த அறையில் ஏறினாள். அவளைக் கண்டதும், அவளின் பக்கத்திலிருக்க இஷ்டப்படாமல் டெபுடி கலெக்டர் அறையின் ஒரு ஓரத்தில் உட்கார்ந்துகொண்டார். ஆனால் அந்த ஸ்த்ரீ அவரண்டைபோய் உட்கார்ந்து பேச ஆரம்பித்தாள். பேச்சில் அவரிடம் பணமிருப்பது வெளியாயிற்று. வண்டி டம் டம் ஸ்டேஷனைவிட்டுப் புறப்பட்டதும், அவர் தம்மிடமுள்ள பணத்தைக் கொடுத்துவிட வேண்டுமென்றும் கொடுக்காவிட்டால் மானபங்கம் செய்யமுயன்றதாக கேஸ் கொண்டு வருவதாகவும் பயமுறுத்தினாள். ஸ்த்ரீ வெள்ளைக்காரியாக விருப்பதால்தாம் டெபுடி மாஜிஸ்ட்ரேட்டா யிருந்தாலும் தமதுசொல் அம்பலமேறாதென்று தீர்மானித்து மானக்கேடான கேஸில் அகப்பட்டுக்கொள்ள பயந்து பணத்தைக் கொடுத்துவிட்டார். அதுமுதல் அவர் ரெயில்வண்டியில் தனியாக ஒரு ஐரோப்பிய ஸ்த்ரீயுடன் ப்ரயாணம் செய்வதில்லையென்று ப்ரதிக்ஞைசெய்து கொண்டாராம்.

### The "Emden."

"எம்டன்":— "எம்டன்" கப்பல் சில மாஸங்களுக்கு முன் சென்னையைப் பீரங்கி தாக்கிய பின் சில தினங்கள்வரை அதன் இருப்பிடமே தெரியாதிருந்தது. இப்பொழுது அதன் விவரம் வெளியாகிறது.

அது லட்சத் தீவுகளுள் ஒன்றான டீகோகார்ஸிபா என்னும் சிறு தீவில போய்ப் பல நாள் தங்கியிருந்ததாம். அங்கேயுள்ளவர்களுக்கு யுத்தத்தைபபற்றி ஒன்றுந் தெரியாதாம். அதனால் ஸுமார் இருபது இங்கிலீஷ்காரர் உள்பட அத்தீவாரும் அத்தீவிலுள்ள அதிகாரிகளும் "எம்டனுக்கு" உதவிகள் செய்தார்களாம். அங்கு "எம்டன்" தனது கரிக்கப்பல்களை அடிக்கடி ஸந்தித்துக்கொள்வது வழக்கமாம். "எம்டன்" கப்பல்காரர்கள் அங்கே ஸாவகாசமாக அதை சுத்தஞ் செய்துகொண்டார்கள். அதற்கு அங்குள்ள இங்கிலீஷ் அதிகாரிகளும் உதவி செய்தார்களாம. அதற்குப் பதிலாக "எம்டனின்" எஞ்ஜினீர் மேற் தீவிலுள்ள மோட்டார்ப் படகைப் பழுது பார்த்துக் கொடுத்தாராம். அங்குள்ள தேங்காய்த் தொழிற் சாலையின் மானேஜரான ஒரு வயது சென்ற ஆங்கிலேயர் "எம்டன்" கப்பலுக்கு உல்லாஸமாக விஜயஞ்செய்தாராம். காப்டன் வான் முல்லரும் மற்றக்கப்பல் அதிகாரிகளும் அவரை

ரொம்பமரியாதையாக வரவேற்றார்களாம் ஷை ஆங்கிலேயர் எம்டன் தலைவரான காபடன்வான் முல்லரை நோக்கித் "தாஙகள் இந்த தீவுக்கு விஜயஞ் செய்த நோக்கம் என்ன" வென்று கேட்டார். காபடன் முல்லர் "நான் ப்ரிட்டிஷ் கடற்படையுடன் கடற்காவல் புரிந்து வருகிறேனை" என்று விகடமாகப் பதில் சொன்னாராம. "எமடன்" கப்பல் மீதும், தமக்கு யுத்தத்தைபபற்றி ஒரு வார்த்தையும் கூறாத "எம்டன்" காப்டன் மீதும் ஷை வயது சென்ற கிழவர் மிகுந்த ஸந்தோஷ மடைந்தாராம். யுத்தம் தொடங்கி 6-மாஸகாலமாகியும் அந்தத் தீவாருக்கு அவ்விவரம் தெரியாமல் போனது ஓா ஆச்சரியமேயாம். இருபதாவது நூற்றாண்டில இத்தகைய ஸம்பவங்கள் நிகழ்வதும் ஆசசரியமே.—லோகோபகாரி.

**New Warships for Russia.**

ரஷ்யாவுக்கு புது யுத்தக்கப்பல்கள்.—பால்டிக் கடலில் உள்ள ரஷ்ய கப்பல்படைககு இன்னும் எட்டு யுத்தக்கபடல்கள் சேருமென்று தெரிகிறது. இவைகள் சென்ற 1911-ம் வர்ஷத்தில் கட்ட ஆரம்பிக்கபபட்டன. இன்னும் சில மாஸஙகளில் அவைகள் கட்டிமுடியும். அவைகளில் நான்கு கப்பல்கள் ட்ரெட்னாட்டுகளாகும். ஒவ்வொன்றும் 23,026 டன் நிறையுள்ளது. மணிககு 26½.மைல் வேகம் போகும். ஒவ்வொன்றிலும பன்னிரண்டங்குல பீரங்கிகள் 12-ம், 4. 7-அங்குல பீரங்கிகள் 16-ம் இருக்கின்றன.

மற்ற நான்கு கப்பல்களும் யுத்தக்ரூஸர்கள். இவைகளைப்போல் பெரிய யுத்த க்ரூஸர்கள் வேறு எந்த தேசத்துககும கிடையாதாம். இவைகளில் ஒவ்வொன்றும் 32 200 டன் கனமுள்ளது, மணிக்கு 32½ மைல் போகும. ஒவ்வொன்றிலும பதினன்கு அங்குல பீரங்கிகள் 12-ம, 5. 1-அங்குல பீரங்கிகள் 14-ம் இருக்கும்.

**The British King at the Front.**

போர்முனையில் ப்ரிட்டிஷ் அரசர்.—ப்ரிட்டிஷ் அரசர் போர்க்களத்திற்குப போகக்கூடாது என்று இங்லண்டில் ஒரு சட்டம் இருக்கிறது. அது 1743-ம் வர்ஷத்தில் ஏறபடுத்தப்பட்டது. அந்த வர்ஷம் இரண்டாவது ஜார்ஜ் அரசர் ஐரோப்பாவுக்குப் போய் அநேக சண்டைகளில் யுத்தம் செய்து, டெட்டிஞ்சன் என்னும் இடத்தில் நடந்த ஒரு சண்டையில் தமது திறமையாலும், தைர்யத்தாலும் அபாயத்திலிருந்த தமது ஸைன்யதனைதக் காப்பாற்றினர். அதற்குப பிறகு ஷை சட்டம செய்யப்பட்டது.

**The Mahomedan Population.**

மகம்மதியர்களின் ஜனத்தொகை.— தற்போது ப்ரிட்டிஷ் ராஜ்யத்திலுள்ள மகம்மதியர்களின் ஜனத்தொகை 9,62,37,000. துருக்கிய ராஜ்யத்தில் 1,80,00,000 மகமமதியர்கள் இருககிறார்கள். ப்ரெஞ்ச் ராஜ்யத்தில் 1,20,00,000 மகம்மதியர்கள் இருக்கிறார்கள்.

## DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

### THE WAR IN EUROPE.

### ஐரோப்பாவில் யுத்தம்.

### ப்ரான்ஸிலும் ஜெர்மனியிலும் யுத்தம.

*மேயீ 1-தேதி.*

ஜெர்மானியர்கள் யிப்ரஸுக்குப் பக்கத்திலுள்ள 60-வது குன்றை பலமாகத் தாக்கினார்கள். இநத ஸமயத்தில் அவர்கள் விஷமுள்ள வாயுக்களை உண்டாக்கும் குழாயகளையும் குண்டுகளையும பரயோகித்தார்களாம்.

*7-தேதி.*

யிப்ரஸுக்கு வடக்கே ஜெர்மானியர்கள் பிடித்த இடங்களை ப்ரெஞ்சுக்காரர்கள் கொஞ்சங் கொஞ்சமாய்ப் பிடிததுககொணடிருக்கிறார்கள்.

*12-தேதி.*

யிப்ரஸுக்கு கிழக்கில் ஜெர்மானியர்கள் பின் தள்ளபபட்டார்கள். ஆராஸுக்கு வடக்கே ப்ரெஞ்ச் துருப்புகள் முன்சென றுகொண்டிருக்கின்றன.

*14-தேதி.*

ப்ரெஞ்ச் துருப்புகள் ஆராஸுக்குக் கிழக்கிலுள்ள காரன்ஸி யென்னும் ஊரையும் அதற்கு வடக்கிலுள்ள சில ஊர்களையும் பிடித்திருக்கின்றன.

*17-தேதி.*

ப்ரிட்டிஷ் துருபபுகள் லாபாஸ்ஸிக்கு வடக்கே ஜெர்மன துருபபுகளைத் தோற்கடித்து ஒரு மைல் முன் சென்றிருக்கின்றன.

*18-தேதி.*

ஹெட்ஸாஸ் என்னும் இடத்துக்குப் பக்கத்தில் ப்ரெஞ்ச் துருபபுகள் முன்சென்றிருக்கின்றன.

22-தேதி

ப்ரிட்டிஷ் துருப்புகள் லாபாஸ்ஸியின் வடக்கில் சற்று முன்சென்றிருக்கின்றன.

சென்ற ஆறு மாஸகாலமாய ஜெர்மானியர் பிடித்துக்கொண்டிருந்த லார்ட் குன்றை ப்ரெஞ்ச் துருப்புகள் பிடித்துக்கொண்டன.

24-தேதி.

பெஸ்டுபர்ட் என்னுமிடத்தில ப்ரிட்டிஷ் துருப்புகள் முன் சென்று கொண்டிருக்கின்றன.

28-தேதி.

18 ப்ரெஞ்ச் வ்ரோப்ளேன்கள் ஜெர்மனியிலுள்ள லட்விக ஷேவன எனனும் ஊரிலுள்ள யுத்த மருந்துகள் செய்யும் தொழில் சாலையைத் தாக்கின. அநேக விடங்களில தீபபிடித்துக் கொண்டன.

ஆர்ராஸுக்குப பக்கத்தில் ப்ரெஞ்சுத்துருப்புகளுக்கும் ஜெர்மானியர்களுக்கும பலமாக யுத்தம நடக்கிறது.

### ரஷ்யாவுக்கும், ஆஸ்ட்ரியா-ஜெர்மனிக்கும் யுத்தம்.

மே மாஸம் 4-தேதி.

நிடாநதியின் கீழ்ப்பாகத்திலிருந்து காரபேதியின் மலைவரையில் யுத்தம் பலமாக நடக்கிறது.

ரஷ்யர்கள் மாகுல்கா என்னும் குன்றைப் பிடித்திருக்கிறார்கள்.

5-தேதி.

ரஷ்யர்கள் மேற்கு ப்ரஷயாவில் கோய் பாதேசத்தில் துருக்கியர்களைத் தோற்கடித்தார்கள். துருக்கியர்களுக்கு 3500 பேர் சேதமாம

7-தேதி.

விஸ்டுலா நதிக்கும் காரபேதியன் மலைக்கும மத்தியில் யுத்தம் பலமாயிருக்கிறது.

ஆஸ்ட்ரியர்கள் டார்னோ பட்டணத்தைப பிடித்திருக்கிறார்களாம்.

8-தேதி

விஸ்டுலா நதிக்கும காரபேதியன மலைக்கும் நடுவில யுத்தம் வர வர வலுத்துக்கொண்டிருக்கிறது. அநேக ஜெர்மன் ஆர்மி கோர்கள் யுத்தத்துக்கு வந்திருக்கின்றனவாம்

11-தேதி.

ஆஸ்ட்ரியர்களும் ஜெர்மானியர்களும் க்ராஸ்னோ ப்ரதேசத்தில் விஸ்லோகா நதியைத்தாண்டி முன் சென்றிருக்கிறார்கள். ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் 35 மைல் முன் சென்றிருக்கின்றன. அவைகள் ப்ரிஸிமிஸலுக்கு 40 மைல் தூரத்திலிருக்கின்றன. பால்டிக் மாகாணங்களின்மேல் படையெடுத்துப்போன ஜெர்மன் துருப்புகள் ஷெவ்லனிஸ்டேஷனுக்குப பக்கத்தில் தோற்கடிக்கப்பட்டன.

12-தேதி.

ஆஸ்ட்ரோ ஜெர்மானிய துருப்புகள் விஸ்டுலா நதிக்கும காரபேதியன மலைக்கும் நடுவில் ரஷ்யர்களைத் தாக்கிக்கொண்டிருக்கின்றன. ஸ்ட்ரிஸ் சேபா என்னும் ப்ரதேசத்தில ரஷ்யர்கள் பின்வாங்கியிருக்கிறார்கள்.

ரஷ்யாவுக்கு ஸொந்தமான பால்டிக் மாகாணங்களில் ஜெர்மானியர்கள் பிடித்துள்ள ஷாவ்லி என்னும் பட்டணத்தை ரஷ்யர்கள் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

13-தேதி.

ஷாவ்லியிலிருந்த ஜெர்மானியர்களை ரஷ்யர்கள் பின்னுக்குத் துரத்திவிட்டார்கள்.

14-தேதி.

ஜெர்மானியர்கள் ப்ரிஸிமிஸல் கோட்டைக்கு 17 மைல் தூரத்திலுள்ள டாபியக்கோ என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

ரஷ்யர்கள் நீஸ்டா நதி தீரத்தில் ஆஸ்ட்ரியர்களைத் தோற்கடித்தார்கள்.

15-தேதி.

ஜெர்மன் துருப்புகள் ப்ரிஸிமிஸலுக்குப் பக்கத்தில் வந்துவிட்டன. ரஷ்யர்கள் பின் சென்றுகொண்டிருக்கிறார்கள்.

19-தேதி.

ஜெர்மானியர்களும் ஆஸ்ட்ரியர்களும் ப்ரஸிமிஸலின் மேற்குக் கோட்டைகளைத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

பால்டிக் நாடுகளில ரஷ்யர்கள் ஜெர்மானியர்களை பின தள்ளிக்கொண்டிருக்கிறார்கள்.

20-தேதி.

விஸ்டுலா நதியின் இடதுகரையில் ஒபாடௌ என்னுமிடத்தில ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைத் தாக்கித் துரத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஜாரஸ்லாவுக்கு வடக்கில் ஆஸ்ட்ரியர்கள் சில விடங்களைப பிடித்திருக்கிறார்கள்.

21-தேதி.

ரஷ்யர்கள் பலமாக எதிர்த்தும் ஜெர்மனியர்கள் ஸான் நதியை ஓரிடத்தில் கடந்து போயிருக்கிறார்கள்.

ஜெர்மானியர்கள் ப்ரிஷிமிஸல் கோட்டைகளை பலமாகத் தாக்கிக்கொண்டிருக்கிறார்கள.

ஸான் நதியும் விஸ்டுலா நதியும சேருமிடத்தில் ரஷ்யர்கள் ஜெர்மானியர்களைப் பின் தள்ளிக்கொண்டிருக்கிறார்கள்.

ஜெர்மானியர்கள் ஸ்ட்ரிஜ்ப்ரதேசத்தில் சில விடங்களைப பிடித்திருக்கிறார்கள்.

தற்போது ஜெர்மனிக்கும் ஆஸ்ட்ரியாவுக்கும் காலிஷ்யாவில் 34 ஆர்மி கோர்கள் இருக்கின்றனவென றும் ப்ரிஷிமிஸல் கோட்டைகளைப் பிடிக்க 17 ஆர்மிகோர்களும், ஸான்நதிச் சண்டைககு 10 ஆர்மிகோர்களும், மேற்கூறிய இரண்டு ஸைன்யங்களினுடைய பக்கவாட்டில் இருகக 8 ஆர்மிகோர்களும் உபயோகிப்பார்களென்றும் ஒரு ராணுவ நிருபர் தெரிவிக்கிறார்.

22-தேதி.

பால்டிக் மாகாணங்களில ரஷ்யர்கள் ஷாவாலிக்கு மேற்கே ஒரு க்ராமத்தைப் பிடித்திருக்கிறார்கள்.

24-தேதி.

காலிஷ்யாவில் நடக்கும யுத்தம் இன்னமும் ஒரு கக்ஷிக்கும் தோல்வி, வெற்றி ஏற்படாமல் கடுமையாகவே நடந்து வருகிறது.

ப்ரிஷிமிஸலுக்கு 10 மைல கிழககேயுள்ள ஹாஸலாக்கௌ என்னுமிடத்தில் யுததம் கடுமையாய் நடந்து வருகிறது.

26-தேதி.

ஆஸ்ட்ரோ ஜெர்மன் துருப்புகள் ப்ரஷிமிஸலுக்கு வடக்கேயுள்ள 5-பலமான கோட்டைகளைப பிடித்திருககின்றன.

ஸான் நதியின் இரண்டு கரையிலும கொடிய யுத்தம் நடந்துவருகிறது.

28-தேதி.

ப்ரஷிமிஸலைச் சுற்றிலும் கொடிய யுததம் நடந்துகொணடிருக்கிறது. ப்ரஷிமிஸலுககு வடகிழககேயுள்ள நியனௌர்ஸ் என்னும ஊரைததாங்கள் பிடித்திருக்கிறதாக ஆஸ்ட்ரியர்கள சொல்லுகிறார்கள்.

## துருக்கியோடு யுத்தம.

மே மாஸம் 5-தேதி.

காலிபபொலி தீபகற்பத்தில் இறங்கியுள்ள நேசத துருபபுகளை துருக்கியாகள் பலமாகத தாக்கியும பின தள்ளப்பட்டாாகள ரஷ்ய கபபல் படை பாஸ்பரஸ ஜலஸந்தித் கோட்டைகளைத தாக்கிக கொண்டிருககிறது.

7-தேதி.

நேசக் கப்பல் படைகள் காலிபொலி தீபகல்பத்தின் குறுகிய பாகத்திலுள்ள நாகரா என்னும் கோட்டையைத் தாக்கிக்கொண்டிருககின்றன.

12-தேதி.

பரிட்டிஷாருக்கு ஸொந்தமான 'கோலியத்' என்னும் யுததக்கப்பல டார்டனல்ஸ் ஜல ஸந்தியில் டார்ப்பிடோக் குழாய்களால் தாக்கப்பட்டு மூழ்கிபபோயிற்று. ஒரு ப்ரிட்டிஷ் ஸபமரீன்கப்பல் டார்டனல்ஸ் ஜலஸந்தி வழியாக மார்மோரா கடலுக்குப் போய் இரண்டு பீரங்கிப் படகுகளையும் ஒரு பெரிய துருப்புககப்பலையும் மூழ்கடிதது விட்டது.

16-தேதி.

காகஸஸிலுள்ள ரஷ்ய துருப்புகள் துருக்கி எல்லை ப்ரதேசததுக்கு வந்து வான் பட்டணத்தை நோக்கி யுத்தம் செய்து கொணடிருககின்றன.

18-தேதி.

டார்டனல்ஸ ஜலஸந்தியின் வடகரையாகிய காலிபொலி தீபகல்பத்தில் இங்க்லீஷ்-ப்ரெஞ்ச் துருப்புகள் துருககியர்களைத் துரத்திகொண்டிருக்கின்றன.

19-தேதி.

காலிபொலி தீபகல்பத்திலுள்ள இங்க்லீஷ் ப்ரெஞ்ச் துருபபுகள் துருககியர்களை பற்பல விடஙகளில் தோற்கடித்து முன்சென்று கொண்டிருககின்றன.

நேற்றையதினமும் இன்றும், துருக்கியர்கள் காலிப பொலி தீபகல்பத்திலுள்ள ப்ரிட்டிஷ் துருப்புகளை பலமாகத தாக்கியும் பின் தள்ளப்பட்டார்கள்.

26-தேதி.

டார்டனல்ஸில் ப்ரிட்டிஷ் துருபபுகளும் ப்ரெஞ்ச் துருபபுகளும முன்செனறு கொண்டிருக்கின்றன.

27-தேதி.

'ட்ரையம்ப்' என்னும் பரிட்டிஷ யுத்தக்கப்பல் டார்டனல்ஸில் ஸபமரீனால் மூழ்கடிக்கப் பட்டது.

28-தேதி.

காலிப பொலி தீபகல்பத்தின் பக்கத்தில் இருந்த 'மஜெஸ்டிக்' என்னும யுததக்கப்பல் ஒரு விரோதி ஸபமரீனால தாக்கபபட்டு மூழ்கிப போயிற்று.

ஒரு ப்ரிட்டிஷ் ஸபமரீன் கபபல் மார்மோராச் கடல் வழியாக கான்ஸடாணடி நோபிள் வரையில் போய் துருககிய ஸைன்யங் கொண்டுபோன ஒரு கப்பலை மூழ்கடித்து மாரமோராக் கடலில் போய்க் கொண் டிருந்த யுத்தஸாமான் கப்பலையும் மூழ்கடிதது விட்டது.

## இட்டலி செய்யும் யுத்தம்.

மேமாஸம் 22-தேதி.

இட்டலிக்கும் ஆஸ்ட்ரியாவுக்கும் யுத்தம் நேரிடும் போலிருக்கிறது. யுத்தம் நேரிட்டால் இட்டாலியன் கவர்ன்மெண்டுக்கு சில விசேஷமான அதிகாரங் கொடுக்க வேண்டுமென்று இட்டலியின் பார்லிமெண்டில் ஒரு சட்டம் செய்யப்போகிறார்கள்.

ஆஸ்ட்ரிய ராணுவ அதிகாரிகள் இட்டலிக்கும் ஆஸ்ட்ரியாவுக்கும் ரெயில்வே தந்திப் போக்குவரத்துகளை நிறுத்திவிட்டார்கள்.

24-தேதி

இட்டலியின் கவர்ன்மெண்டார் தரைப்படை கப்பல் படைகளை சேகரிக்க உத்தரவு போட்டிருக்கிறார்கள்.

இட்டலி ஆஸ்ட்ரியாவினமேல் யுத்தம் தொடங்கியிருக்கிறது.

ஆஸ்ட்ரிய ஏரோப்ளேன்கள் வெனிஸில் குண்டுகள் போட்டுத்தாக்கின. அட்ரியாடிக் கடல் கரையோரமாகவுள்ள சில இடங்களையும் ஆஸ்ட்ரிய ஏரோப்ளேன்கள் தாக்கின. ஆஸ்ட்ரியாவுக்கும் இட்டலிக்கும் எல்லையாகவுள்ள பிரதேசங்களில் சிறு சண்டைகள் நடந்தன. இட்டாலியர்கள் ஆஸ்ட்ரிய தீவாகிய போர்ட்டோ பூஸோ என்னும் தீவின்மேல் படையெடுத்துப்போய் சில ஆஸ்ட்ரியக்கப்பல்களை மூழ்கடித்தார்கள்.

26-தேதி.

இட்டாலியர்கள் வடகிழக்கு எல்லைநாட்டைக் கடந்து ஆஸ்ட்ரியாவுக்குள் பிரவேசித்து 5-க்ராமங்களைப் பிடித்திருக்கிறார்கள்.

27-தேதி.

இட்டாலியர்கள் இட்டலியின் வடகிழக்கு எல்லை நாட்டிலுள்ள கார்னிக் ஆல்ப்ஸ் என்னும் மலையிலுள்ள ஆஸ்ட்ரியாவுக்கு ஸொந்தமான ஒரு கணவாயைப் பிடித்திருக்கிறார்கள்.

28-தேதி.

இட்டலியின் அரசர் கடல் படைக்கும் தரைப் படைக்கும் தலைமை ஸ்தானத்தை வகித்துக் கொண்டிருக்கிறார். அவர் தரைப்படையிருக்கும் யுத்தகளத்துக்குப் போயிருக்கிறார்.

இட்டாலியர்கள் ட்ரீஸ்ட் வளைகுடாவில் உள்ள க்ராடோ என்னும் ஊரைப் பிடித்திருக்கிறார்கள்.

29-தேதி.

இட்டாலியர்கள் ட்ரெண்டினோவை முற்றுகைபோட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

## பொதுவிஷயங்கள்.

மேமீ 7-தேதி.

'மெயோரி' என்னும் டிஸ்ட்ராயர் கப்பல் பெல்ஜியன் கடற்கரையோரமாக இருக்கையில் ஒரு கடல் வெடிகுண்டில் தாக்கி மூழ்கிப்போய்விட்டது.

8-தேதி.

குனார்ட் கப்பல் கம்பெனியைச்சேர்ந்த 'லூஸிடானியா' என்னும் கப்பல் அயர்லண்ட் கரையோரமாக ஒரு ஜெர்மன் ஸப்மரீனால் தாக்கப்பட்டு மூழ்கிப்போயிற்று. 'லூஸிடானியா' கப்பலில் மூழ்கிப்போனவர்களும் காணாமல் போனவர்களும் சேர்ந்து மொத்தம் 1457 பேராம். (அதிலிருந்த மொத்தம் ஜனங்கள் 2160.)

13-தேதி.

ஜெர்மன் தென்மேற்கு ஆப்ரிக்காவின் முக்யபட்டணமாகிய விண்டக் என்னும் ஊரை ஜெனரல் போதா (தென்னாப்ரிக்காத் துருப்புகளின் தலைவர்) பிடித்துக் கொண்டிருக்கிறார்.

17-தேதி

ஒரு ஜெர்மன் ஸெப்பலின் இங்கலண்டின் தென்கிழக்கு கரையோரமாகப் பறந்துவந்து ராமஸ்கேட் என்னும் ஊரில் வெடிகுண்டுகள் போட்டது. ப்ரிட்டிஷ் ஏரோப்ளேன்கள் அதைத் துரத்திவிட்டன.

20-தேதி.

இதுவரையில் ப்ரிட்டிஷ் யுத்தக்கப்பல்கள் ஜெர்மன் யுத்தக்கப்பல்கள் மூழ்கிப்போனபோது 1282 ஜெர்மானியர்களை கடலுக்கு இரையாகாமல் காப்பாற்றியிருக்கின்றன. ஜெர்மன் யுத்தக்கப்பல்களோ ஒரு ப்ரிட்டிஷ் கப்பல்வீரரையும் கடல் விபத்திலிருந்து காப்பாற்றவில்லையாம்.

## INDIAN NEWS.

## இந்திய நாட்டு ஸமாசாரங்கள்.

4-தேதி.

சென்னை மாகாண கான்பரென்ஸ்.—இந்தக் கான்பரென்ஸ் இன்றையதினம் நெல்லூரில் கூடிற்று. ஆனரபிள் மிஸ்டர் பி. என் சர்மா ப்ரெஸிடெண்டாக இருந்து சென்னை ராஜதானியின் பொருளாதார நிலைமை, மாகாண ஸ்வய ஆக்ஷி, லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில் மாகாண வரவு செலவு, க்ராம பஞ்சாயத்துகள், பப்ளிக் ஸர்விஸ் கமிஷன், முதலியவைகளைப் பற்றி ப்ரஸங்கம் செய்தார்.

5-தேதி.

சென்னை மாகாண கான்பரென்ஸ். — இன்று மாகாண கான்பரென்ஸ் நெல்லூரில் இரண்டாவது கான்கூடி நிலத்தீர்வையை சாச்வதமாகக வேண்டுமென்றும், திண்டுக்கல் பாலக்காட்டு ரெயில்வே போடுவதை பின்னி கம்பெனியாருக்குக் கொடுத்ததைப்பற்றி கான்பரென்ஸ் ஆக்ஷேபிக்கிறதென்றும் தீர்மானங்கள் செய்தது

ஸநாதன தர்ம கான்பரென்ஸ்.— இது இன்றைய தினம் நெல்லூரில் கூடிற்று. கும்பகோணம் ப்ரொபஸர் கே. ஸுந்தரராமய்யா ப்ரெஸிடெண்டாக இருந்து வைதீக தர்மத்தைப் பற்றி ப்ரஸங்கம் செய்தார்.

6-தேதி.

சென்னை மாகாண கான்பரென்ஸ்.—இன்று சென்னை மாகாண கான்பரென்ஸ் கூடி கவர்ன்மென்

டார் கைத்தொழில்களுக்கு உதவி செய்யவேண்டுமென்றும், பஞ்சாயத்துகள் ஏற்படுத்த வேண்டுமென்றும், ஒவ்வொரு ரெவின்யூ தாலூக்காவுக்கும் ஒரு தாலூக்கா போர்டு ஸ்தாபிக்க வேண்டுமென்றும், முனிஸிபாலிட்டிகள், லோக்கல் போர்டுகள், ஆகிய இவைகளுக்கு பிரெஸிடெண்டுகளைத் தெரிந்தெடுக்க ஸ்வதந்தரம் ஏற்படவேண்டுமென்றும், சென்னை ராஜதானியில் இன்னும் சில யூனிவர்ஸிட்டிகள் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், பி. ஏ. வகுப்பு வரையில் தேசபாஷைகளைக் கட்டாயபாடமாக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் செய்தது. வேறு சில தீர்மானங்களும் செய்யப்பட்டன

**சென்னை மாகாண ஸோஷல் கான்பரென்ஸ்.**—இந்தக் கான்பரென்ஸ் இன்று கூடி பெண்கல்வி அபிவ்ருத்தி, விதவாவிவாகம், கல்யாண வயஸு, ஜாதிக்கலப்பு, மதுவிலக்கு, தாழ்ந்த ஜாதிகளை உயர்த்தல், முதலிய விஷயங்களைப்பற்றித் தீர்மானங்கள் செய்தது.

**ஸநாதனதர்ம ஸம்ரக்ஷண ஸபை.**—இது இன்று நெல்லூரில் கூடி, ஹிந்துக்கள் சாஸ்த்ர ஆசாரங்களைக் கைவிடக் கூடாதென்றும், ருதுவானபின் விவாகம், த்விஜர்கள் விதவாவிவாகம், மூன்று நாள்களுக்கு மேற்பட்ட கடல் ப்ரயாணம் செய்தல் ஆகிய இவை கூடாதென்றும் தீர்மானங்கள் செய்தது.

7-தேதி.

**சென்னை மாகாண கைத்தொழில் கான்பரென்ஸ்.**-இது இன்று நெல்லூரில் கூடிற்று. மிஸ்டர் என். பட்டாபிராம ராவ் பிரெஸிடெண்டாக இருந்தார். கைத்தொழில்களுக்கு ஸர்க்கார் உதவி, விவஸாயத்தில் சீர்திருந்திய முறைகளை அனுஷ்டிப்பது, பழமரங்கள் வளர்ப்பது, ஸ்வதேசக் கைத்தொழில்களை ஆதரிப்பது, நெசவுத்தொழில் முதலிய விஷயங்களைப்பற்றித் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

8-தேதி.

**மாகாணக் கல்விக் கான்பரென்ஸ்**—மாகாணக் கல்வி கான்பரென்ஸில் ஸெகண்டரி ஸ்கூல் லீவிங் ஸெர்டிபிகேட், க்ராண்ட் இன் எய்ட்கோடு, ஸெகண்டரி பாடசாலைகளில் தேசபாஷைகளின் மூலமாகக் கற்பித்தல், உபாத்யாயர்களின் சம்பளம், எலிமெண்டரிபடிப்பை கட்டாயப் படிப்பாகச்செய்தல், முதலிய பலவிஷயங்களைப்பற்றி தீர்மானங்கள் செய்யப்பட்டன.

17-தேதி

**'பேங்காலி' ஆஸ்பத்திரிக்கப்பல்.**—வங்காளவாலிகள் பணமசேகரித்துக் கட்டிக்கொடுத்த 'பெங்காலி' ஆஸ்பத்திரிக்கப்பல் சென்னைக்கு ஸுமார் 260 மைல் கிழக்கே மூழ்கிப்போயிற்று ஜனச்சேதமில்லை.

21 தேதி.

**ஸர் சங்கரன் நாயர்.**—வைஸ்ராயின் நிர்வாக ஸபையில் வித்யா இலாகா மெம்பராக இருக்கும் ஸர்ஹார்கோர்ட் பட்லருடைய ஸ்தானத்தில், சென்னை ஹைகோர்ட் ஜட்ஜாக இருந்த ஸர்சங்கரன் நாயர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## SEASON

## கால ஸ்திதி

---

**Rainfall.**

மழை.—1915ளு ஏப்ரல்மீ 1உ-யிலிருந்து 1915ளு ஜூன்மீ 9உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்கவேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை. அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை. அங்குலம். |
|---|---|---|
| கோபால்பூர் | 1·95 | 3·73 |
| வால்டேர் | 6·38 | 4·37 |
| காக்கினாடா | 2·44 | 2 50 |
| மஸூலிப்பட்டணம் | 1·05 | 3·06 |
| நெல்லூர் | 0·08 | 1·40 |
| மதராஸ் | 0·88 | 2 27 |
| கூடலூர் | 1·22 | 1·76 |
| நாகப்பட்டணம் | 0·89 | 2 81 |
| பாம்பன் | 5·18 | 2·83 |
| கொழும்பு | 16 32 | 24·22 |
| திருவனந்தபுரம் | 12 48 | 18 07 |
| கொச்சி | 24·72 | 24·63 |
| கள்ளிக்கோட்டை | 12·94 | 21 18 |
| மங்களூர் | 3·81 | 17·60 |
| மெர்க்காரா | 9 09 | 13·62 |
| ஐதராபாத் | 1 36 | 3·07 |
| பல்லாரி | 6·63 | 3·68 |
| கானூல் | 1·11 | 2 33 |
| கடப்பை | 1·07 | 3·02 |
| ஹாஸ்பான் | 4 78 | 8·55 |
| பெங்களூர் | 8·48 | 7·13 |
| கொடைக்கானல் | 6 95 | 11.57 |
| உதகமண்டலம் | 6 86 | 12 82 |
| கோயம்புத்தூர் | 3·78 | 4·55 |
| வேலூர் | 3 69 | 4·75 |
| சேலம் | 6·01 | 8·20 |
| திருச்சிறாப்பள்ளி | 3·94 | 5 58 |
| புதுக்கோட்டை | 7·26 | 4 11 |
| மதுரை | 3·49 | 5 68 |
| திருநெல்வேலி | 3 13 | 4·69 |

# Calendar—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி | உதய லக்னம் | அஹஸ் | தெலு | இங் | தமி | வாரம் | கலி-5017, சாலி-1838, கொல்ல-1090 பஸலி-1324-25 இங்கி-1915 ஜூன்-ஜூலை } 49-ராக்ஷஸ வருஷ ஆனி { ஜ்யேஷ்ட-ஆஷாட, உத்தராயண-க்ரீஷ்மருது ஹிஜரி-1333 வருஷ, ஷாபான-ரம்ஜான் |
|---|---|---|---|---|---|---|---|
| யோக | நா வி | நா வி | உ | உ | உ | | |
| ஸி | 5 25 | 31 35 | 1 | 15 | 1 | செ | த்ரி 60-0, புன 41-35, வ்ரு 6-35, தை 29-7, தி 7-51, மிதுனகுன்யதி, ரம்பாவிரதம், கரிநாள், த்ரிதினஸ்ப்ருக், விருதயாக்கம் |
| ஸி | 15 | 35 | 2 | 16 | 2 | பு | த்ரி 1-8, பூச 46-44, த்ரு 7-22, வணி 32-54, தி 3-24, மிதுனசதுர்த்தி, சதுர்த்திவிரதம், உமாவதாரம் |
| ஸிஅ | 5 4 | 35 | 3 | 17 | 3 | வி | சது 4-24, ஆயி 50-48, வயா 7-31, பவ 35-36, தி 21-3 |
| மஸி | 4 54 | 35 | 4 | 18 | 4 | வெ | பஞ் 6-29, மக 53-30, ஹர 6-42, கவ 36-59, தி 22-20, ஷஷ்ட்யுபவாஸம் |
| ஸிஉ | 43 | 35 | 5 | 19 | 5 | ச | ஷஷ் 7-7, பூர 54-40, வஜ் 4-46, கர 36-51, தி 14-4 |
| அ | 33 | 36 | 6 | 20 | 6 | ஞா | ஸப் 6-10, உத 54-9, ஸித 1-35, வ்ய 57-0, பத 34-51, தி 12-42, வ்யசிரா, மித்ரஸப்தமீ, கரிநாள் |
| ஸிபி | 22 | 36 | 7 | 21 | 7 | தி | அஷ் 3-28, ஙவ 59-6, ஹஸ் 51-57, வரீ 51-3, பால 31 29, தி 14-34. அவம |
| ஸி | 12 | 36 | 8 | 22 | 8 | செ | தச 53-8, சித 48-9, பரி 43-46, தை 26-18, தி 10-51, கடகாயனம் 29-50 |
| ஸி | 4 2 | 36 | 9 | 23 | 9 | பு | ஏகா 45-50, சவா 42-58, ஸிவ 35-21, வணி 19-38, தி 1-3, ரா 24-0, ஸர்வ-நிர்ஜல-ஏகாதசீ |
| ஸி | 3 50 | 36 | 10 | 24 | 10 | வி | த்வா 37-28, விசா 36-42, ஸித் 26-0, பவ 11-46, ரா 14-0, ப்ரதோஷாந்தம 37-17, இராமா |
| ஸிம | 40 | 35 | 11 | 25 | 11 | வெ | த்ர 28-29, அனு 29-47, சாத 16-1, கவு 3-2, கர 53-51, ரா 10-33, த்ரயோதசீதி, ப்ரதோஷம், திவாமா |
| ஸி | 30 | 35 | 12 | 26 | 12 | ச | சதி 19-13, கேட் 22-36, சுப 5-44, சுப் 55-28, பத் 44-36, ரா 8-36, திதித்வயம் [தய |
| அஸி | 20 | 35 | 13 | 27 | 13 | ஞா | ○ 10-6, மூல 15-37, ப்ரா 45-38, பால 35-44, தி 12-4, ரா 5-4, ப்ரதமாதி, இஷ்டி, மன்வாதி, வடஸாவித்ரீவிர |
| உம | 3 9 | 35 | 14 | 28 | 14 | தி | ப்ர 1-36, த்வி 54-8, பூரா 9-18, மா 36-31, தை 27-43, தி 27-25, ஜ்யேஷ்டபகுளம், அவம |
| பிஸி | 2 59 | 35 | 15 | 29 | 15 | செ | த்ரி 48-4, உரா 45, வை 28-33, வணி 20-55, தி 13-22, வைஸிரா, ஸிரவணஉபவாஸம் |
| ஸிபிஸி | 48 | 34 | 16 | 30 | 16 | பு | சது 43 43, ஸிர 0-25, அவி 58-21, விஷ் 21-53, பவ 15-40, தி 9-57, ஸங்கடசதுர்த்தி |
| மஸி | 38 | 34 | 17 | 1 | 17 | வி | பஞ் 41-15, சத 58-17, பரீ 16-44, கவு 12-15, தி 16-8 |
| ஸி | 27 | 34 | 18 | 2 | 18 | வெ | ஷஷ் 40-47, பூட் 60-0, ஆயு 13-7, கர 10-47, தி 14-36 |
| மஸி | 17 | 33 | 19 | 3 | 19 | ச | ஸப் 42-14, பூட் 0-10, ஸவு 11-6, பத 11-17, தி 25-27 |
| அ | 2 6 | 33 | 20 | 4 | 20 | ஞா | அஷ் 45-25, உட் 3-53, சோ 10-31, பால 13-38, ரா 4-47, காலாஷ்டமீ |
| ஸி | 1 56 | 33 | 21 | 5 | 21 | தி | ஙவ 49-59, ரே 9-10, அதி 11-10, தை 17-33 |
| ஸி | 46 | 33 | 22 | 6 | 22 | செ | தச 55-27, அசு 15-41, சுக 12-45, வணி 22-38, தி 4-32, ரா 10-55 |
| ஸிஅ | 35 | 32 | 23 | 7 | 23 | பு | ஏகா 60-0, பர 22-48, திரு 14-55, பவ 28-24, ரா 24-59, கிருத்திகை, த்ரிதினஸ்ப்ருக் |
| மஉ | 25 | 32 | 24 | 8 | 24 | வி | ஏகா 1-25, கிரு 30-15, சூல 17-21, கவு 34-25, சே 0-31, ஸர்வ-ஜீவவார-ஏகாதசீ, கூர்மஜயந்தீ, இராமா |
| மஸி | 14 | 31 | 25 | 9 | 25 | வெ | த்வா 7-24, ரோ 37-35, கண 19-44, கர 40-17, தி 15-11, ரா 21-44, ப்ரதோஷம், திவாமா |
| ஸி | 1 4 | 31 | 26 | 10 | 26 | ச | த்ர 13-5, மிரு 44-31, வ்ரு 21-50, பத் 45-44, மாஸஸிவராத்ரி |
| ஸி | 0 53 | 30 | 27 | 11 | 27 | ஞா | சதி 18-13, திரு 50-47, த்ரு 23-30, சது 50-30, தி 7-48, ஸர்வஅமாதிதி [டி புஷ்களா அல்பயம |
| அஸி | 43 | 29 | 28 | 12 | 28 | தி | ● 22-35, புன 56-17, வ்யா 24-33, ஸிம 54-26, தி 23-39, அதிதி, பிண்டபிதிரு, ப்ரதக்ஷிணம், போதாயன இஷ் |
| ஸி | 32 | 29 | 29 | 13 | 29 | செ | ப்ர 26-4, பூச 60-0, ஹர் 24-55, பால 57-27, தி 17-55, ப்ரதமாதி, ஆஷாடசுத்த, இஷ்டி, சந்திரதர்சனம் |
| ஸி | 22 | 28 | 1 | 14 | 30 | பு | த்வி 28-33, பூச 0-51, வஜ் 24-32, தை 59-25, ரா-3-24 |
| ஸிஅ | 0 12 | 31 28 | 2 | 15 | 31 | வி | த்ரி 29-59, ஆயி 4-24, ஸித 23-18, கர 29-59, ரா 4-19, மிதுனத்ரிதியாதிதி |

| குரு | செ | சு | ரா-பு சு |
|---|---|---|---|
| | 11-ரிஷ செ | | கே |
| ரா | 20-மிது-சு | | |
| | | | |